விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

வாரப் பதிப்பு THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ சித்திரை மீ° 01-ம் உ | ஞாயிற்றுக்கிழமை வார மலர் | (01 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 04 | ஓசை 42

## சீக்கியத் தீவிரவாதிகளுடன் புலிகளுக்குத் தொடர்பில்லை!

(சென்னை)

இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் கெடுதல் விளைவிக்கும் எவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதி ஒருவர். ஒரு சீக்கியத் தீவிரவாத அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறப்படும் செய்திகள் பற்றி அவர் நேற்று சட்டப்பேரவையில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் தெரிவித்தார். மேலுல் அவர் இவ்விடயம் தொடர்பாகத் தமிழ்நாட்டுப் பொலிஸார் அவதானமாக இருக்கும்படி கட்டளையிட்டுள்ளார.

(4 ஆம்பக்கம் பார்க்க)

## 326 பல்கலை மாணவர் காணாமல் போயினர்

### மானியக் குழு தகவல்!

(கொழும்பு)

தென்பகுதிப் பல்கலைக்கழகங்களில் இருந்து இதுவரையில் 326 பல்கலைக் கழக மாணவர் காணாமற் போயுள்ளனர் என பல்கலைக்கழக மானியக் குழு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

101 மாணவர் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்தும், 65 பேர் ஸ்ரீ ஜெயவர்த்தனாபுரம் பல்கலைக் கழகத்திலிருந்தும், 52 பேர் றுகுணை, 51 பேர் களனியா, 40 பேர் கொழும்பு, 17 பேர் மொறட்டுவாப் பல்கலைக் கழகங்களிலிருந்தும் காணாமற் போயுள்ளார்கள் என அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

இதேவேளை 251 பல்கலைக்கழக மாணவர் பாதுகாப்பும் படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 68 பேர் தலப்புலவேவ புனர்வாழ்வுமுகாமிலும் 45 பேர் வெலிசர கடற்படை முகாமிலும் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். பூஸா தடுப்பு முகாமில்16பேரும், பெல்வத்த முகாமில் 4 பேரும் பல்கலைக் கழக மாணவரான பிக்கு ஒருவரும் பூனாவை முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இருமுஸ்லிம்கோட்பாட்டாளரிடையே துப்பாக்கிச் சூடு; மூவர் பலி

(வவுனியா)

வவுனியா ஆண்டியா புளியங்குளம் பகுதியில் முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாம் மதம் பற்றிய இரு கொள்கைவேறுபாடு காரணமாக நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஏழு வயதுச் சிறுவன்உட்படமூன்று பேர் பலியானார்கள். நான்கு பேர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

இஸ்லாம் மதத்தின் அடிப்படை மரபைக் கடைப்பிடித்து

...னருக்கும், புதிய சிந்தனையாளர்கள் என்று கூறப்படும் தவ்ஹீத் ஜமா அத்தினருக்குமிடையே இருந்து வந்த கருத்து முரண்பாடு வெள்ளிக்கிழமை (30-03-90) மோதல் அளவிற்கு முற்றிப்போனதாம்.

பழைய கொள்கையைக் கடைப்பிடித்து வரும் இஸ்லாமியர் குழு ஒன்று புதிய சிந்தனையாளர்களை நோக்கித்துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதன் காரணமாகப் புதிய சிந்தனையாளர் குழுவில் இழப்பு ஏற்பட்டது.

...புளியங்குளம் பகுதியில் உள்ள மூன்று கடைகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

மேற்படி இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்களிடையே இக் கொள்கை முரண்பாடு சுமார் ஒருவருடகாலமாக நிலவிவந்ததென்றும், அராபியாவிலிருந்து வந்த இஸ்லாம் பெரியவர் ஒருவர் அண்மையில் இரு தரப்பினருக்குமிடையே பேச்சுவார்த்தை நடாத்திக்கூட இப்பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வடக்குக், கிழக்கு தேர்தல் உடன் நடத்துக

### அரசுக்கு யாழ். ஆயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான புதிய தேர்தலை உடனடியாக, கால தாமதமின்றி நடத்துமாறு யாழ்ப்பாண மேற்றிராணியார் வண. கலாநிதி தியோகுப்பிள்ளை அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு, ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வட-கிழக்கு மாகாண சபையின் ஆட்சி பீடத்திலிருந்தபோது, அதன் உறுப்பினர்களே சட்டத்தையும், ஒழுங்கையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டு தலையுடன் ஒரு குழந்தை

சேனையூரில் அண்மையில் இரண்டு தலையுடன் கூடிய ஒரு குழந்தை பிறந்தது.

இக்குழந்தை பிறந்த சில நிமிடங்களே உயிர் வாழ்ந்தது. இரண்டுதலைகளையும், ஒரு உடலையும் கொண்ட இக்குழந்தைக்கு நான்கு கைகளும் நான்கு கால்களும் காணப்பட்டன. குறித்த காலத்துக்கு முன்பாகவே பிறந்த இக்குழந்தையை அதன் தாய் வீட்டிலேயே பிரசவித்தாள். பிறக்கும் போது இக்குழந்தையின் ஒரு பக்கத் தலையிலுள்ள கண்கள் திறந்த படியும், மற்றைய தலையிலுள்ள கண்கள் மூடியபடியும் இருந்தன. இக்குழந்தை ஆரோக்கியமாக இருந்திருந்தால் மருத்துவத் துறைக்கே ஒரு சவாலாக இருந்திருக்குமென இப் பகுதி மக்கள் பேசிக் கொள்கின்றனர். (28)

### நயினாதீவில்கடற்படையினரின் சோதனை இல்லை

(வேலணை)

நேற்று முன்தினத்திலிருந்து (29-3-90) நயினாதீவுக்குச் சென்று வரும் பிரயாணிகளும் படகுகளும் கடற்படையினரின் பரிசோதனைகள் இன்றி நேரடியாகநயினாதீவில் உள்ள இறங்குதுறைகளுக்கு சென்று வரக்கூடியதாக இருக்கின்றது.

கடற்படையினரின் பாதுகாபபுக்கருதி தடைசெய்யப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வைத்தியசாலை காவலர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளரைப் பார்வையிடுவதற்காக வந்தவரால் வாயிற் காவலர் அடித்து கை முறிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றதாக அடிவாங்கிய வாயிற் காவலாளி தெரிவிக்கிறார். அவர் மேலும் கூறுகையில் தாம் காவல் கடமையில ஈடுபட்டிருந்த சமயம் ஒரு பருத்த உடல் கொண்ட நபர் ஒருவர் வந்து அத்துமீறி வைத்தியசாலைக்குள் நுழைய முற்பட்டபோது தாம் தடுத்து நிறுத்தியதாகவும் அப்போது இடம்பெற்ற வாக்குவாதத்

( 4ஆம் பக்கம் பார்க்க )

### அம்பாறை - மட்டக்களப்பில் அமைதியானமுறையில் ரம்ழான்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் புனிதரம்ழான் நோன்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் வழமைபோல் முஸ்லிம்கள் அனுஷ்டிக்கிறார்கள்.

இரவுநேர மத அனுஷ்டானங்களில் பயம், பீதி இன்றி

( 4ஆம் பக்கம் பார்க்க )

### கேரளாவிற்காவதுமாற்றுங்கள் ஈ.என்.டி.எல்.எவ். கோரிக்கை

(டில்லி)

எங்களை ஒரிஸாவிலிருந்து ...

...மு மத் செய்யதிடம் கோரிக்கை விட்டுள்ளனர்.



இஸ்லாம் மதத்தின் அடிப்படை மரபைக் கடைப்பிடித்து வரும் சுன்னத்வல் ஜமா அத்தி ... சிந்தனையாளர் குழுவில் இழப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து ஆண்டியா ... வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# நீண்டகாலத்திற்குப் பின் உள்ளூர் பத்திரிகையாளர்களை இன்று பிரபா சந்திக்கிறார்

(யாழ்ப்பாண )

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று காலை உள்ளூர்ப் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசுகிறார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். நகருக்கு வந்த தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் இராணுவப் பொறுப்பாளர்களையும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் இணைப்பாளர்களையும் சந்தித்து கடந்த இரு தினங்களாக ஆலோசனை நடத்தினார்.

தலைவர் பிரபாகரனைப் பற்றிக் கடந்த வருடம் இந்திய வானொலி புரளியைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

(டில்லி)

எங்களை ஒரிஸாவிலிருந்து கேரளாவிற்காவது மாற்றுங்கள் எங்களால் ஒரிஸாவில் வாழ முடியாது என ஒரிஸாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈ. என். டி. எல் எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவின் உள்துறை அமைச்சர் முக்தி முமத் செய்யதிடம் கோரிக்கை விட்டுள்ளனர்.

ஈ பி. ஆர். எல். எவ் இயக்கத்தின் செயலாளர் நாயகம் பத்மநாபாவும் ஒரிஸாவில் தங்கியிருப்பாரை அங்கிருந்து மாற்றும்படி டில்லியை முன்னர் கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு வாவியில்:

## நச்சு இரசாயனப் பொருட்கள் கலப்பால் மீன்கள் இறப்பு!


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் மீன் வைரசு நோய் கண்டு இறக்க வாவிக்குள் வீசப்பட்ட ஆயுதங்கள், வெடிமருந்து

(4ஆ பக்கம் பார்க் )



கடந்த வியாழக்கிழமை யாழ். நகருக்கு வந்த தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகளின் இராணுவ இணைப்பாளர்களுடனும், சகாக்களுடனும் காணப்படுகிறார்.



தலைவர் பிரபாகரன், பிரதித் தலைவரும் மக்கள் முன்னணித் தலைவருமான திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் திரு. யோகரத்தினம் (யோகி) ஆகியோர் காணப்படுகின்றனர்.

அன்னை பூபதி நினைவாக வவுனியாவில்

# ஏப்ரல் 19ஆம் திகதி வரை சுழற்சிமுறை உண்ணாவிரதம்

(வவுனியா)

வவுனியா புதிய பஸ்நிலையக் கட்டடத்திற்கு அருகில் கடந்த 28 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் தொடர்ந்து ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வரும் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் உண்ணா நோன்பிருந்து மரணித்த அன்னை பூபதியின் இரண்டாம் வருட நினைவை ஞாபகம் கொள்ளும் முகமாகவே இந்த உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது,

அன்னை பூவதியின் உருவப் படம் திரை நீக்கம் செய்யப்பட்ட இந்த இடத்தில் கிடுகுகளால் பந்தல் அமைத்து,

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஒழுங்கான முறையில்க.பொ.த.(சா)பரீட்சை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் க. பொ. த. (சா) பரீட்சை நேற்று ஆரம்பமாகின. ஆள்மாறாட்டம், அச்சுறுத்தல்கள் எதுவும் இடம்பெறவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் இப்பரீட்சையில் தாம் எதிர்நோக்கிய அச்சுறுத்தல்கள், எச்சரிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் 50க்கு மேற்பட்ட குளங்கள் புனரமைப்பு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சுமார் 50க்கு மேற்பட்ட குளங்கள் யாவும் புனரமைக்கப்பட்டுள்ளன.

(4 ஆம்பக்கம் பார்க்க)

## லெப். துர்க்காவின் நினைவுத்தூபி திறக்கப்பட்டது

(தர்மபுரம்)

புதுக்குடியிருப்பில் நேற்று பிற்பகல் நான்கு மணியளவில் லெப். துர்க்காவின் நினைவு தூபி திறந்து வைக்கப்பட்டது. இத்தூபியை வீரமரணமடைந்த லெப். துர்காவின் தந்தையார் திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் கோ.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்தொழிலாளர் சங்கக் கூட்டம்

கடற்தொழில் பிரச்சினைகள் சம்பந்தமான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம, கே. கே. எஸ். வீதியில் உள்ள மனோகரா திரையரங்கில் நண்பகல் 12-00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கடற்தொழில் சம்பந்த

( 4ஆம் பக்கம் பார்க்க )

## புகையிரதத்தில் பொதிகள் அனுப்புதல் சீராக உள்ளது

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ரயில் சேவைகள் தற்போது வழமைக்கு வந்துள்ளதையடுத்து பொதிகள் அனுப்பும் பணிகளும் சீராக நடைபெறுகின்றன.

மீன் மற்றும் பழுதடையக் கூடிய பொருட்களைத் தவிர்ந்த ஏனைய பொருட்கள் ரயில் மூலம் அனுப்பப்படுகின்றன.

லொறிக்கூலிகளின் அதிகரிப்பால் பலர் தமது பொருட்களை ரயில் மூலமாக அனுப்பி வருகிறார்கள். இதனால் ரயிலில் பொதிகள் அனுப்புபவர்களின் தொகையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

வட - கிழக்கு மாகாணசபையில்

## ஓய்வுபெற்ற நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வேலை

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் பணிபுரிய ஓய்வு பெற்ற நிறைவேற்று உத்தியோகத்தர்களை அரசாங்கம் மீண்டும் சேர்த்துக்கொள்ள விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் இவர்களுக்கு தற்போது பெறும் ஓய்வூதியத்துடன் நிர்வாகசபை II ஆம் தரத்திற்கான ஆரம்ப சம்பளம் வழங்கப்படும்

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை தாம் இறுதியாக பணிபுரிந்த திணைக்களத்தின் ஊடாக செயலாளர் ஆட்சேர்ப்பு. பொதுநிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சீயாக்காய், பயறு, அரிசி வெந்தயம் ஆகிய நான்கு வகை பொருட்கள் அடங்கிய மெய்யாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள், ளௌலற் M.G.M, No 777 K.K.S. Road, Jaffna. B/507

வரலாறு ஆண்டு 6 ஆண்டு 7 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது ஆக்கம் ஆலோசனை எம் எஸ் அப்துல் ரஹீம் தி. கமலநாதன். B.362

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள் பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற்சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம்.
RAJZ BRAND பார்வை அறை S A தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம்.
(B 414)

பின்வரும பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1990.05.02 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப் படும்.

### உடற் கல்விப் பணிப்பாளர்

சம்பள அளவுத்திட்டம்:
ரூபா 6000 - 10 X 200 - 8000
(EF -வினைத்திறமை காண் தடை)
ரூ. 8250 - 7 X 250 - 10000
(மாதமொன்றுக்கு)

மேற்குறித்த பதவிக்கான



## பதவி வெற்றிடங்கள்

### பிஸ்கட் உற்பத்தியாளர்களுக்கான விண்ணப்பம்

எமது சங்கப் பாண்சாலைக்கு பிஸ்கட் உற்பத்தி செய்டவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பிஸ்கட் உற்பத்தியாளருக்கு எல்லாப் படிகளும் உட்பட நாளாந்தம் ரூபா 100/- சம்பளமாக வழங்கப்படும்.

உதவி பிஸ்கட் உற்பத்தியாளருக்கு எல்லாப் படிகளும் உட்பட நாளாந்தம் ரூபா 75/- சம்பளமாக வழங்கப்படும்

**பாண் விநியோகிப்பவர்**
(துவிச்சக்கரவண்டி மூலம்)

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சில்லாலை, இளவாலை, பாதகல் பகுதிகளுக்கு துவிச்சக்கரவண்டி மூலம் பாண் விநியோகிப்பவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம்: மாதாந்தம் எல்லாப் படிகளும் உட்பட ரூபா 1000/- வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என விலாசமிடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் 16. 04. 1990 மாலை 4 · 00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ்
ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு.
B. 464



"ஈழநாதம்" பத்திரிகை வாசகர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பிலும் எங்கள் "மக்கள் குரல் தமிழ் ஓசை" சார்பிலும் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மக்கள் குரல் தமிழ் ஓசை

வர்த்தக விளம்பர சேவை
பிரதான வீதி,
கிளிநொச்சி.

**விசேட குறிப்பு:**

இவ்விளம்பர சேவை கலை, கலாசார அவை ஊடாக நடாத்தப்பட்டு வருகின்றது.

இதில் வரும் நிதிகள் யாவும் மறைந்து சிதைந்து போன கலாசாரத்தை மீண்டும் எமது ஈழ மண்ணில் மீட்டெடுப்பதற்கு இவ்வர்த்தக விளம்பர சேவை முன்னோடியாக சேவையாற்றுகின்றது என்பதை


குரும்பசிட்டியில்

## ஈழகேசரி பொன்னையா நினைவு நாள் விழா

(யாழ்ப்பாணம்)

ஈழகேசரி நா. பொன்னையா நினைவு நாள் விழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

வடமாநில சித்திரவித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை விழாவுக்கு தலைமை வகிப்பார்.

பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் ''ஈழகேசரி'' நா. பொன்னையா பிரதிமைப் படத்திற்கு மலர் மாலை சூட்டி ஆரம்ப உரை நிகழ்த்துவார். திறந்த வெளிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் ஈழத்தில் அச்சகக் கலையும் குரும்பசிட்டியும் என்ற தலைப்பில் நினைவு நாள் உரை நிகழ்த்துவார்.

கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் ''ஈழகேசரி'' நா. பொன்னையாவால் ஆரம்பிக்கப்பட்ட திருமகள் அழுத்தகத்தை அரை நூற்றாண்டுக்கு மேலாக வளர்த்து முன்னோடி அச்சகமாக்கிய பெருமைக்குரிய திரு. மு. சபாரத்தினம் திரு. பொ. பாலசிங்கம் இவர்களைக் கௌரவிப்பார்.

திரு. சு. வேலுப்பிள்ளை (சு. வே) ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் மயிலங்கூடலூர் பி. நடராசன் ஆகியோர் பாராட்டுரைகளை நிகழ்த்துவார்கள்.

## 3-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன் இராசரத்தினம் செல்வகுமார்
(சினைப்பர் மயூரன், பபி)

தாய் மேல்:
03 - 07 - 1962

தமிழ் மண் மீது
01 - 04 - 1987

காவியம் படைத்துவிட்ட கட்டழகா
நீ காலத்தால் அழியாத சின்னமடா
தமிழ் இனத்திற்கோர் தங்கமடா
நீ தாய் நாட்டின் செங்குருதியடா
விடுதலை வேங்கைகளின் விளக்குமடா
புலி வீரர்கள் வரிசையின் புனிதமடா
தமிழ் தலைவரின் மெய்ப் பாதுகாவலனாம்
தரணியில் அவன் சினைப்பர் மயூரன்
என்றும் இனிய தமிழ் மக்களை
ஏய்த்து விட்ட நாளோடா
என்றுதான் உனைக் காண்போம்?

## தென் மராட்சியில் ஒன்பது இணக்கசபை

(சாவகச்சேரி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒன்பது இணக்க சபைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒன்பது இணக்க சபைகளிலும் ஒவ்வொன்றிலும் தலா 7 உறுப்பினர்கள் கொண்டகுழு இயங்கும்.

இந்த இணக்க சபைகள் ஒன்பதிற்கான உறுப்பினர்களை அவ்வத் தொகுதி மக்களே தெரிவு செய்து கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு, சாவகச்சேரி முன்னணி அமைப்பாளர் திரு. சோதிநாதன் திருத்தி அமைக்கப்பட்ட இணக்க சபை யாப்பை வாசித்துக் காட்டினார்.


## யாழ் நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 2.30 4.45 700
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)



## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

கல்வியாண்டு 1990/91
பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரி மாணவர்களுக்கான விரிவுரைகள்

★ கலைமாணி B. A.
★ விஞ்ஞானமாணி B. Sc (புள்ளிவிபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிநெறியை மேற்கொள்ளலாம்.

ரூ. 8250 - 7 X 250 - 10000
(மாதமொன்றுக்கு)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும், விபரங்களும் இப்பல்கலைக் கழகத்தில் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முக வரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23 X 10 ச. மீற்றர் அளவுடைய தபாலுறையனுப் பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங் களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமை களையும் / அல்லது அனுபவத் தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக் கப்படுவார்.

குறித்ததிகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவாக விபரங்கள் குறிப் பிடப்படாத விண்ணப்பங் களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 . 03 . 30. B.508

---

## நினைவு நாள்

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை திருமலை மாதாஜி என அழைக்கப்படும் சச்சிதானந்த சிவானந்த மாதாஜி யின் நினைவு நாள் யாழ். திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம் பெறும்.

---

மீட்டெடுப்பதற்கு இவ்வர்த்தக விளம்பர சேவை முன்னோடியாக சேவையாற்றுகின்றது என்பதை தங்களுக்கு அறிவிக்கின்றோம்.

**மக்கள் குரல் தமிழ் ஓசை**
**கிளிநொச்சி.**

(B/405)

---

## அன்னை பூபதி



மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
என்று திலீபன் சொன்னான்.
மக்கள் மத்தியில் ஒரு மாதர் தலைவி
புரட்சித் தலைவியாய் மட்டுநகரில்
தோற்றம் பெற்றாள்.
விடுதலைப் போரை
மக்கள் போராட்டமாக
மாற்றி அமைத்தாள்.
அன்று அன்னை பூபதி
ஏற்றி வைத்த சுடர்
இன்று தீவெங்கும் அணையாத
தீபமாய் ஒளி வீசுகிறது.
அமரதீபமாய் அன்னை
எங்கள் நெஞ்சங்களில்
வாழ்கிறாள்.

**வர்த்தக ஊழியர் சங்கம்,**
**சுன்னாகம்.** B.54

---

ஏய்த்து விட்ட நாளோடா
என்றுதான் உனைக் காண்போம்?
எம் இனிய வீர வேங்கையே!

சோடாக் கொம்பனி லேன்,
மல்லாகம்.
01 - 04 - 1990.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அண்ணன்மார், அண்ணி,
தங்கைமார், மைத்துனன்,
பெறாமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்

B 509

---

# அன்னை பூபதியின்

## தியாக வரலாறு தமிழினத்தின் விடுதலைப் பாதைக்கு ஒளியூட்டட்டும்



தாய் நடத்தவில்லை
தள்ளாத வயதினிலோர்
யாகம் நடத்தினை நீ
தாயே, தாயகத்தில்
நேயம் மிகக் கொண்டு
நீ செய்த தியாகத்தின்
தீரம் யார்க்கு வரும்?
திசையெட்டும் தொழுது நிற்கும்
அசைவற்றுப் போன — எம்
அன்னைக்கு அஞ்சலிகள்!

**ஊழியர்கள்,**
**சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**

(R.55)

---

அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிநெறியை மேற்கொள்ளலாம்.

**புதிய பிரிவு விரிவுரைகள் 1-04-1990 இல் ஆரம்பமாகின்றன.**

★ இதுவரை பதிவுசெய்யத் தவறிய மாணவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

உதவிப் பதிவாளர்
**பட்டப் படிப்புகள் கல்லூரி**
**148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

R.56

---

## தொழிற்சங்க நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளபாதுகாப்பு அலவன்ஸ் ஆசிரியர்களுக்கு வழங்கப் படாவிடில், வடக்குக் கிழக்கில் உள்ள பாடசாலை கள் அடுத்த தவணை ஒரு நாள் ஸ்தம்பிதமடையும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித் துள்ளார்.

ஆசிரியர்களின் பாதுகாப்பு அலவன்ஸ், வழங்கும் விடயம் சம்பந்தமாகஅகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு பொது நிர்வாக அமைச்சு ஆகியவற்றுடன் ஏற் கனவே தொடர்பு கொண்டுள் ளது.

இந்த ஏப்ரல் மாதத் திற்கு இடையில் இது சம்பந்த மான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும், இல் லையேல் ஆசிரியர்கள் தமது ஆட்சேபனையை, ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் குதித் துத் தெரிவிப்பார்கள் என அவர் மேலும் கூறினார். (36)

## தென்னிலங்கை அரசியல் ஒரு நோக்கு...

# புதிய அமைச்சர்கள் நியமனத்தால்

# ஜனாதிபதி நாட்டை அபிவிருத்தி செய்வாரா


நாடு முழுவதும் வழமைக்குத் திரும்பிவிட்டது. (அதாவது தெற்கில்) மக்கள் தப துஅன்றாடகருமங்களைச் செய்கின்றனர் என்று அரசாங்க தரப்பிலிருந்து தெரிவிக்சப்படுகிறது. சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் கூட்டத்திலும், இனிமேல் அமைச்சர்களுக்கு பாதுகாப்பு தேவையில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அதனையடுத்து ஓரிரு வாகனங்களைத் தவிர ஏனையவை நேற்று முன்தினம் அமைச்சுக்களிலிருந்து எடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

ஆனால் அதே சமயம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது சதிநாசகாரநடவடிக்கைகள் (ஜே.வி.பி.) சிலநடை பெறுவதாக தொடர்பு சாதனங்களும், பத்திரிகைகளும் தெரிவிக்கின்றன. வீதியில் சடலங்கள், ஆற்றில் சடலங்கள் என்ற செய்திகள் தற்போது குறைந்துள்ளன. அத்துடன் மர்மக் கொலைகளும் சற்றுக் குறைந்துள்ளன. இவற்றுக்கு காரணம் சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டனங்களும் எதிர்க்கட்சித் தலைவியின் வெளிநாடுகளுக்கான புகார்களுமே என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர் இது குறித்து அரசாங்கமும் அமைச்சர்களும் பல்வேறு கருத்துக் களைக்கூறி வந்தனர்.

தெற்கில் எத்தனையோ படுகொலைகள் நடந்தன. ஆனால் அவற்றிற்கு விசாரணைகள் இல்லை. சிலவிசாரணை செய்யமுடியாதவாறு நடந்துள்ளன. சட்டத்தரணி லியனாராய்ச்சி, பத்திரிகையாளர் ரிச்சர்ட் டீ சொய்ஸா கொலைகள்இரண்டுமே இன்று வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் வந்துள்ளன. மற்றது வவுல்கல பன்னிருவர் படுகொலைகள்.

லியனாராய்ச்சி கொலை வழக்கில் பொலிஸ் சுப்பிரின்டன், ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு கான்ஸ்டபிள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். ஆனால் இதில் முக்கிய சாட்சியான பிரதிப்பொலிஸ் மா அதிபர் பி. உடுகம்பொல வெளிநாடு சென்றுள்ளார். அமெரிக்காவில் அவர் சிகிச்சை பெறுவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார். திரு. உடுகம்பொல ஜே. வி. பி எதிர் நடவடிக்கைக்கு பொறுப்பானவர். லியனாராய்ச்சி அடிகாயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானவர். மரண விசாரணையில் அவருக்கு என்ன நடந்தது என்பது தெரிவிக்கப்பட்டது. இந்த சட்டத்தரணிக்காக பல சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் பொலிஸாருக்கா ஆஜராகவும் மறுத்தனர்.

இனி ரிச்சார்ட் டீ சொய்ஸாவின் கொலையிலும் சீருடையில் ஆயுதபாணிகளாக வந்து கூட்டிச்சென்றனர். பொலிஸுக்கு உடன் தெரிவிக்கப் பட்டும் பதில் இல்லை. இதனைச் செய்தவர்கள் ஜே.வி. பி. இந்திய புலனாய்வுத்துறை (றோ) என அரசாங்கம் தெரிவித்தது. தற்போது நீதிமன்ற விசாரணை நடைபெறுகிறது. ரிச்சார்ட் டீ சொய்ஸா ஒரு நடிகன். கலைஞர், பத்திரிகையாளர் அரசுக்கு எதிரான கலை நிகழ்ச்சியில் இவருக்கு முக்கியபங்கு உண்டு.



றிச்சாட் டீ சொய்ஸா

அதனால் யார் செய்திருப்பார்கள் என்று மக்களுக்கு ஓரளவு தெரிகிறது. பாராளுமன்றத்திலும் குரல்கள் எழுப்பப்பட்டன. இரத்தினபுரி அரசாங்க அதிபரின் வாகன இலக்கமுடைய வாகனத்தில் வந்தவர்கள் என கண்டவர்கள் கூறினார்கள். ஆனால் பின்னர் அது போலி என்று கூறப்பட்டுள்ளது.

அண்மையில் நித்தம்புவவில் பன்னிருவரின் சடலங்கள் மீட்கப்பட்டு மரணவிசாரணையும் நடைபெற்றது. பொலிஸ் மா அதிபரின் நடவடிக்கையால் சில பொலிஸார் இக்கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். சில அதிரடிப்படை வீரரும் இதில் சேர்ந்ததாகக் கூறப்பட்டு பின்னர் அது தவறு என படைத்தளபதி கூறினார். இக்கொலைகள் தொடர்பாக சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டனர். கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் சில சந்தேக நபர்கள் வெளிநாடு போகலாம் என்று கண்காணிப்பும் போடப்பட்டுள்ளது. இந்த மூன்று கொலைச்சம்பவங்கள் தான் இன்று நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் யார் இவற்றைச் செய்திருக்கலாம் என பொதுமக்கள் பேசக்கூடிய அளவுக்கு வந்துள்ளன.

முன்னர் வடக்கு - கிழக்கில் இப்படியாக நடந்தவை அவசரகால பயங்கரவாதச் சட்டத்தால் மறைக்கப்பட்டன. அதனையே தெற்கிலும் செய்துவந்தனர். பின்னர் அவசரகால விதிகளில் சில சரத்துக்கள் நீக்கம் என்றதால் நித்தம்புவவில் படுகொலை செய்யப்பட்ட சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணையும் நடைபெற்றன. இதில் பொலிஸார் சம்பந்தப் பட்டதாகத் தெரியவந்துள்ளது.

யூ. என். பி. தலைவர் ஹாஸா அபயவர்த்தனா, விஜயகுமாரணதுங்கா உட்படப் பல பிரமுகர்களின் கொலைகள் பற்றிய விசாரணைகளே இல்லை. அது மட்டுமன்றி கடந்த இரண்டு வருட காலத்தில் இரண்டாயிரம் பேர்வரை படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச்சபை கூறுகிறது. இவற்றின் சூத்திரதாரிகள் யார்?

நித்தம்புவகொலைகளுக்குப் பின்பு ஆயுதப்படையைச் சேர்ந்த சிலர் கொள்ளை, கற்பழிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர் இராணுவ அதிகாரியின் மைத்துனியை விசாரணை செய்வதாக மற்றொருஇராணுவத்தினர் அழைத்துச் சென்றனராம். இவ்வாறாக நாட்டின் பொதுமக்களைப் பாதுகாக்கின்றவர்களே இச் சம்பவங்களில் ஈடுபடுவதை தென்பகுதி மக்கள் இன்று அறிகிறார்கள்.

### அமைச்சரவையில்மாற்றம்:

ஜனாதிபதி பிரேமதாஸ அமைச்சர்களை மாற்றம் செய்துள்ளார். தற்போதைய பிரதமர் பதவி ஒரு றபர் ஸ்டாம்பே அலரி மாளிகையில் இருப்பது ஒன்று தான் அவருக்கு பெருமை மற்றும்படி அவர் ஒன்றுமே செய்யமுடியாதவாறு அரசியல் யாப்பு மாற்றப்பட்டுள்ளது. திரு. பிரேமதாஸாவும் முன்னர் பிரதமராகவிருந்த போதும் வீடமைப்பு, உள்ளூராட்சி அமைச்சுக்களையும் பொறுப்பாக வைத்திருப்பதால் சில உருப்படியான வேலைகளைச் செய்தார். பிரதமர் டி. பி. விஜயதுங்காவும் தமது பதவியால் எதனையுமே செய்ய முடியாது. சில அமைச்சர்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவதில்லை என்பதை ஜனாதிபதி அரசபாராளுமன்றக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். பத்துக் கார்கள், ஹொட்டல்களில் ஆடம்பர விருந்து தேவையில்லை என்றும் கூறியுள்ளார். உண்மைதான் சுதாதார அமைச்சர் திருமதி றேணுகா ஹொரத்பல ஆஸ்பத்திரிளுக்கு நோடி விஜயம் செய்தார். கியூவில் நின்றதால் சரியாக கடமை செய்யாத சுகாதாரப்பகுதி ஊழியர்கள் சிலரை வேலை நீக்கம் செய்தார். போக்குவரத்து அமைச்சர் விஜயபால மென்டிஸ் பழுதடைந்த சுமார் இரண்டாயிரம் பஸ்களைத் திருத்தி சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுத்தார். இவ்வாறு சில அமைச்சர்கள் தமது அமைச்சுக்களை திறமையாக செயற்பட வைத்தனர். அதன்படி ஒன்பது அமைச்சுக்களை அதே அமைச்சுக்களுக்கே ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இவ்வாறு குறுகிய காலத்தில் அமைச்சர்கள் மாற்றப்படுவது இதுவேமுதற் தடவையாகும். எனவே சரியாகப் பணிபுரியாத அமைச்சர்கள், அமைச்சு செயலாளர்கள் இனி மாற்றப்படுவார்கள் என்பது திண்ணமாகி விட்டது.

இதில் அமைச்சர் காமினி திஸநாயக்காவுக்கு ஒருஅமைச்சும் வழங்கப்படவில்லை. அவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி, சபாநாயகர் பதவி அல்லது வேறு உயர்பதவிகள் வழங்கப்படலாம் எனக் கூறப் படுகிறது. இல்லையேல் ஐக்கிய தேசிய கட்சியில் பிளவு ஏற்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

காமினிதிஸநாயக்கா தான் தொடர்ந்தும் ஐ. தே. கட்சியில் இருக்கப் போவதாகவும் கட்சிக்கு உழைக்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

கல்வியமைச்சராக நியமனம் பெற்ற லலித் அத்துலத்முதலியை தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தை ஏற்படுத்தி இன்னும் பல மாணவர்கள் பயன்பெற வழிவகுத்தவர். அவர் கல்வி அமைச்சரானதால் கல்வித் துறையில் அபிவிருத்தி ஏற்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

வவுனியா எம் பி. திருமதி. புலேந்திரனுக்கு கல்வி ராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. வடக்குகிழக்கு பகுதியின் கல்விநிலை அமைக்காலங்களில் எவ்வாறு பாதிக்சப்பட்டது என்பது அவருக்குதெரியும். இந்த சந்தர்ப்பத்தில் அவர் இப்பகுதியை கல்வியில் வளர்ச்சியடைய பாடுபடவேண்டும். கல்வி, உயர் கல்வி அமைச்சரான லலித் அத்துலத் முதலிக்கும் வடக்கு கிழக்கு கல்வி எந்த நிலைக்கு இருந்தது, தற்போது எந்த நிலைக்கு இருக்கிறது என்பது தெரியும். எனவே இரு அமைச்சர்களும் இப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரூபன்

அவருக்கு உதவியாக் ராஜாங்க கல்வி அமைச்சராக வவுனியா மாவட்ட எம் பி திருமதி ம. புலேந்திரனை ஜனாதிபதி நியமித்துள்ளதால் தமிழ் மாணவர்கள், தமிழ் ஆசிரியர்களின் பிரச்சினைகளை சுலபமாகத் தீர்க்கலாம் என்றே கூறலாம்.

இம்முறை திட்ட அமுலாக்கங்களுக்கு ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர்களை நியமிக்சப்பட்டுள்ளதால் அமைச்சராக சுமை குறைவதுடன் திட்டங்களை விரைவாக செயற்படுத்தவும் முடியும் என எதிாபர்க்கப்படுகிறது.

## உலக அரசியல் நோக்கு

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் உள்ள உறவுகள் தற்போது மேலும் மோசமாகிக் கொண்டே வருகின்றன. திரு. ராஜீவ் காந்தியின் இந்திரா காங்கிரஸ் ஆட்சியின் போது, பஞ்சாப்பில் சீக்கிய தீவிரவாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக், எவ் ரக மிக் போர் விமானங்களை அமெரிக்காவிடம் இருந்து அதிகமாகக் கொள்வனவு செய்தார். அத்துடன் பாகிஸ்தான் அணுவாயுதம் தயாரிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இவை இந்தியா ஒரு பகுதியினர் இந்தியாவிலிருந்து பிரிந்து தனிநாடு கேட்கின்றனர். மற்றொருபிரிவினர் பாகிஸ்தானுடன் சேர்ந்து இருக்கவேண்டும் எனக் கோருகின்றனர். இங்கு முஸ்லிம்களே பெரும்பாலும் வாழ்கின்றனர் இந்த தீவிரவாதிகளின் நடவடிக்கையை முறியடிக்க இராணுவ நடவடிக்கையை இந்திய அரசு முடுக்கி விட்டுள்ளது. பல முஸ்லிம்கள் கொல்லப் பட்டதால் பாக்கிஸ்தானும், தெரிவித்த வண்ணம் இருக்கின்றன. காஷ்மீர் பிரச்சினையால் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பிலும் விரிசல் ஏற்படலாம் என்ற ஒரு நிலைமையும் உருவாகியுள்ளது.

இலங்கையிலிருந்து இந்தியப்படைகள் வெளியேறுவதற்கு முக்கிய காரணங்களில் தெற்காசியப் பிராந்திய அமைப்பும் ஒரு காரணம். இந்த அமைப்பின் கூட்டங் பேச்சு நடாத்த வேண்டும் என்கிறது. இலங்கை, நேபாள விடயங்களில் இந்தியா சற்று இறங்கிவந்து பேச்சு நடாத்தியதுபோல காஷ்மீர் பிரச்சினைக்கும் பாகிஸ்தானுடன் பேச்சு நடாத்த இந்தியா முன்வரவேண்டும். இல்லையேல் காஷ்மீர் பிரச்சினை மோசமாகிக் கொண்டு வருவது மட்டுமன்றி பாகிஸ்தான் இந்திய உறவுகளும் பாதிப்படை

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு

### மீண்டும் வேலைக்கு சேர்க்கப்படுவார்கள்

(கொழும்பு)

1981 ஆம் ஆண்டு வேலை இடை நிறுத்தம் செய்யப் பட்ட புத்தளம் சீமேந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் இருவரை மீண்டும் வேலைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அண்மையில் புத்தளத்தில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் அலுவலகத்தில் இது தொடர்பாக அமைச்சர் சிறி சேனகூரேயிடம் எடுத்துக் கூறப்பட்டதையடுத்து இவர்களுக்கு வேலை வழங்க ஒப்புக் கொண்டுள்ளார்.

பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர்

# இந்தியாவும் - பாகிஸ்தானும்

# பேச்சு நடாத்த வேண்டும்

களை இலங்கை பகிஷ்கரித்ததால் இதனைப் பிரியவிடாது ஏனைய அங்கத்துவ நாடுகள் தலையிட்டன. அதேபோல காஷ்மீர் பிரச்சினையால் இந்த அமைப்பில் பிளவு ஏற்படலாம்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி அணமையில் அங்கு இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில், பாகிஸ்தான் இனிமேல் பயப்பட



ராஜீவ்

குப் பாகிஸ்தான் உதவி செய்வதாக ஆதாரங்களுடன் இந்தியா குற்றம் சாட்டி வந்தது. திரு. ராஜீவ் காந்தி ஆட்சியின்போது, பஞ்சாப் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்

வுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே இருந்தது.

ஜெனரல் ஸியா உல் ஹக் மறைவுக்குப் பின்னர் இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் புதிய திருப்பம் தென்பட்டது. திருமதி பெனாசீர் பூட்டோவும் பதவியேற்ற பின்னர் இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்திக் கொண்டார்,

கடந்த வருடம் திரு வி. பி. சிங் தலைமையிலான புதிய கூட்டணி அரசு பதவியேற்றதும், பாகிஸ்தானுடன் இந்தியா நல்லுறவை வளர்க்க விரும்புவதாக அறிவித்தார். திரு. ராஜீவ் காந்தி அரசுக்கு பஞ்சாப் பிரச்சினை போல, திரு. வி பி. சிங்கிற்கு காஷ்மீர் பிரச்சினை பெரிய தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியது. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக காஷ்

பாகிஸ்தானும் ஆயுதப்பலத்தை பெருக்கி வருகிறது. ஆனால் இந்தியாவுக்கு எச்சரிக்கை செய்யவில்லை. இந்தியாவோ பலத்தடவைகள் பதிலடி தரப்படும் என்று பாகிஸ்தானை எச்சரிக்கை செய்வது மட்டுமன்றி பாகிஸ்தான் அணுவாயுதம் உற்பத்தி செய்கிறது, அமெரிக்காவிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்கிக் கொண்டேயுள்ளது எனக் குறை கூறிவருகிறது.

மிக மோசமாகி வந்தன. பாகிஸ்தானுக்கு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டன. எல்லைகளிலும் சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றன.

இதே நேரம் அன்றைய

மீரில் நிலைமை மோசமாகி வருகிறது. பாகிஸ்தான் இதில் சம்பந்தப்படுவதாக இந்தியா நேரடியாகவே குற்றம் சாட்டுகிறது.

இங்குள்ள தீவிரவாதிகளில்



பெனாசிர்

பங்களாதேஷகம் இதனைக் கண்டித்தன இந்தியா இதனை உள் நாட்டு விவகாரம் என்று பதில் கூறியது.

பாகிஸ்தான் தலையிடுவதாகவும், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆதரவும் உதவியும் செய்வதாக இந்தியா குற்றம் சாட்டியது. இதேவேளை காஷ்மீர் மக்களுக்கு ஆதரவாக பாகிஸ்தான் கருத்து வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து இரு நாடுகளும் ஒன்றை ஒன்று குறைகூறி கண்டனங்களைத்

படாதிருக்க மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் அண்மையில் இந்தியாவுககு விஜயம் செய்து காஷ்மீர் பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் தேசிய தினத்தில் பாகிஸ்தான் தனது இராணுவ பலத்தை அணிவகுப்புக்களில் காண்பித்ததுடன், இந்தியா தனது அயல்நாடுகளை மிரட்டுவதாகவும் குற்றம் சாட்டியது.

நேபாளத்துடன் வர்த்தக உறவுகளைத் துண்டித்துக் கொண்ட இந்தியா புதிய கூட்டணி அரசு பதவிக்கு வந்த பின்னா, தனது உறவுகளை வலுப்படுத்திக் கொண்டது. அதேபோல இலங்கையுடனும்

## கரவையூரான்

இந்தியப் படையை வாபஸ் பெற்றுக்கொண்டதையடுத்து தனது உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தானுடன் பேச்சு நடாத்த முடியாது என இந்தியா கூறுகிறது. பாகிஸ்தான்



வி. பி. சிங்

மாட்டாது என்றும் உள்ளே புகுந்து தாக்கக்கூடிய வலுப் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார். இது இந்தியாவை மறைமுகமாகவே காட்டுகிறது. எனவே பாகிஸ்தானும் இந்தியாவும் ஒன்றையொன்று கண்டிப்பதையும், எச்சரிக்கை செய்வதையும் தவிர்த்து சமாதானமான முறையில் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். □


## பொது முகாமையாளர்

சங்கத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்குறிப்பிடும் விபரங்களுக்கு அமைவாக விரும்புவோர் 30 04. 1990 ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பத்தினை பதிவுத் தபால் மூலம் தலைவர், பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

சம்பளத்திட்டம் ரூபா 1305 - 2370 / 60/4 - 75/11

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் அரசாங்க விசேட உரிய படிகளும்.

ரொக்கப் பிணை ரூபா 6525/-

ஆதனப் பிணை ரூபா 15000/-

வயது 23 - 50

தகைமை:

(அ) முகாமை / மேற்பார்வை தரத்தில் 7 ஆம் சம்பளத் திட்டத்தில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ள கூட்டுறவுப் பணியாளர் அல்லது

(ஆ) முகாமை / மேற்பார்வை தரத்தில் 8 ஆம் சம்பளத் திட்டத்தில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ள கூட்டுறவுப் பணியாளர் அல்லது

(இ) வர்த்தக அல்லது கைத்தொழிற் தாபன மொனறில் முகாமைத்தர மேற்பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்சழக பட்டதாரி அல்லது பட்டதாரிக்குச் சமனான தரம் உள்ளவர் அல்லது

(ஈ) வர்த்தக அல்லது கைத்தொழிற்தாபனமொன்றில் முகாமைத்தர மேற்பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அல்லது கூட்டுறவுப் பணியாளர் உயர்தர தராதரப் பத்திரம்.

(கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழு சுற்று நிருபம் 108/81 இன் பிரகாரப்)

தலைவர்,
பண்டதரிப்புப் பரிஷ் ப. நோ கூ. சங்கம்
பண்டத்தரிப்பு (B. 476)

ஈழநாதம்

# மறுக்கப்பட்டுவரும் மனித உரிமைகளைவழங்க ஆவன செய்க

## விடுதலைப் புலிகளிடம் பள்ளிவாசல் நிர்வாகம் கோரிக்கை

(காத்தான்குடி)

கடந்த 10 ஆண்டுகளாக அடிப்படை மத - மனித சுதந்திர உரிமைகள் ஐ. தே. க. அரசாங்கத்தால் முஸ்லிம் மக்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. ஜனநாயக அரசியலமைப்புக்கு முரணாக கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மறுப்புகளால் முஸ்லிம் மக்கள் பலதரப்பட்ட இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவற்றை நீக்கி எல்லோரும் எல்லாமும் சம நீதியாய்ப் பெற்று வாழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி துரிதமாய்ச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு காத்தான்குடி. பத்ரிய்யா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையினர் காத்தான்குடி பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவு பொறுப்பாளரிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பள்ளிவாசலை முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம் முஸ்லிம் மதத்தவமாக அங்கீகரிக்க மறுத்து வருவதனால் புதிய பள்ளிவாசல் கட்டிட நடவடிக்கையை மேற்கொள்ள இயலாதுள்ளன.

ஒலி பெருக்கி பாவிக்க தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசல் நிர்வாகத்தால் நடாத்தப்படும் அரபுக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறும் மௌலவிமார்கள் கல்விச் சேவையில் நியமனம் பெற முடியாதுள்ளனர்.

இப்பள்ளிவாசல் மீதும், மற்றும் சமய ஸ்தாபனங்கள் மீதும், இதன் ஜமா அத்தார்கள் மீதும் இன ஒதுக்கல் நடவடிக்கைகள் கடந்த பல ஆண்டுகளாக அரசாங்கத்தாலும், முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தாலும் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம்களின் ஐக்கியத்துக்காகவும், அவர்களின் நலவுரிமைகளுக்காகவும் பாடுபடுபவர்கள் எனக் கூறிக் கொள்ளும் முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களிடமும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிடமும், எமது விலங்கிடப் அடக்குமுறை வாழ்க்கை பற்றி முறையிட்டுள்ளோம் எவரும் எமக்குரிய அரசியல் உரிமைகளை, அடி[illegible] மத - மனித உரி[illegible] பெற்றுத்தர தவறி[illegible]

இச்சமயத்தில் ஜன[illegible] அரசியல் வழிக்கு வ[illegible] பேசும் மக்களின் [illegible] துக்காக பாடுபடும் [illegible] லைப்புலிகள் மக்கள் [illegible] ணியின் அரசியற் பிரி[illegible] எமது அவலம் நி[illegible] முறையீட்டை சமர்ப்பி[illegible] றோம்.

தமிழ்பேசும் மக்க[illegible] ரீதியில் நாம் பிறந்தமண்[illegible] எமக்கான அடிப்பை[illegible] மைகளை பெற்றுத்தர [illegible] செய்ய ாவண்டும்.

இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். புகையிரத நிலையத்தில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. குறிப்பாக சைக்கிள்கள் ரயில் நிலையத்திற்கு வெளியே விடப்படும்போது இவை நடைபெறுகின்றன.

கடந்த வாரம் பதினைந்து சைக்கிள் வரை காணாமல் போனதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணம் அனுப்ப வருவோர்கள் தமது சைக்கிள்களை வெளியே விட்டு விட்டு ரயில் வரும் வரை மேடையில் நிற்கும்போதே இத்திருட்டுக்கள் இடம் பெறுகின்றன.

இதேவேளை கொழும்புக்கு ரயில் மூலம் அனுப்பக் கொண்டுவந்த சருவாடு, வெங்காயம் அடங்கிய பார்சல் ஒன்றும் மாயமாக மறைந்துள்ளது.

திட்டமிட்ட ஒரு கோஷ்டியே இதனைச் செய்து வருவதாக பொதுமக்கள் எமது நிருபரிடம் தெரிவித்தனர்.

## மாடுகள் திருட்டு அதிகரிப்பு!

(வவுனியா)

வவுனியா ஓயார் சின்னக்குளம், பத்தினியார் மகிழங்குளம் ஆகிய பகுதிகளில் மாட்டுக் களவுகள் அதிகரித்து வருகின்றன.

இரவு நேரங்களில் வீட்டுக்காரர் நித்திரை செய்து கொண்டிருக்கும் பொழுதில் தோட்டங்களில் அல்லது கொட்டில்களில் கட்டப்பட்டிருக்கும் எருது மாடுகளை திருடர்கள் அவிழ்த்துச் செல்கின்றனர்.

சில தினங்களுக்குமுன் ஓயார் சின்னக்குளம் பகுதியில் எஸ். இராசையா என்பவரின் காணிக்குள் கட்டப்பட்டிருந்த எண்ணாயிரம் ரூபா பெறுமதியான உழவு வேலை செய்யும் மாடுகள் இரண்டு களவுபோய் உள்ளது.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (தி)

## கூட்டுறவு ஊழியர்களுக்கு நேர்மை, விசுவாசம் தேவை

(களுவாஞ்சிக்குடி - கல்லாறு)

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஏனைய துறை ஊழியர்களின் சம்பளத்தைவிட அதிகமாகப் பெற்றுக்கொள்வதற்கு சங்கத்திற்கு விசுவாசமாகவும் நேர்மையாகவும் உழைக்கும்போது விற்பனையைப் பெருக்கி சம்பளத்துக்கு மேலான தொகையை ஊக்குவிப்பு பணமாக பெறுவதற்கு ஊழியர்களுக்கு உரிமையுண்டு.

இவ்வாறு மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ரீ. ஒக்கர்ன்ஸ் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் பிரதி கூட்டுறவு ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுச்சென்ற திரு. ஒக்கர்ஸ்ஸிற்கு வரவேற்பு உபசாரம் வழங்கப்பட்டது:

மண்முனை தென் ஒருவில் பலநோக்கக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபையின, ஊழியர்களும் இந்த வைபவத்தை ஏற்பாடு செய்தனர்.

தொடர்ந்து பேசிய அவர், கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் லாபத்தில் கணிசமான ஒரு தொகை பொதுமக்களை நேரடியாக சென்றடைவதற்கு ஒவ்வொரு சங்கமும் நடவடிக்கை எடுக்கவேண்டும். சங்கத் தொழிற்பரப்பில் சுய தொழில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும்.

கண்டி போன்ற இடங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தமது சம்பளத்துக்கு மேலாக இரண்டாயிரம் ரூபாவை மாதாந்த ஊக்குவிப்பு பணமாக பெறுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் பேசிய மட்டக்களப்பு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. லோகநாயகம், களுவாஞ்சிக்குடி கோட்டக்கல்வி அதிகாரி திரு. ப. கணபதிப்பிள்ளை, பிராந்திய கூட்டுறவு பரிசோதகர் திரு. ப. பேரின்பம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

## செஞ்சிலுவைச் சங்கம் 15,000 ரூபா அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

பனைஓலை கைத்தொழில் உற்பத்தியைப் பெருக்கவும், ஊக்குவிக்கவும் பனை அபிவிருத்தி சபையும் யாழ். செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்திய பயிற்சியை பூரணப்படுத்திய 30 பெண்களுக்கு, செஞ்சிலுவைச் சங்கம் 15 900 ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

பனம் பொருள் அபிவிருத்தி சபை முப்பது யுவதிகட்கும், பனைஓலை வாரும் இயந்திரங்களையும், பனைச் சத்தகங்களையும் வழங்கி தொழிலூக்கங் கொடுத்துள்ளது.

மேற்படி யுவதிகள் தலா 500 ரூபாவை மூலதனமாகக் கொண்டு பனை உற்பத்திப் பொருட்களை செய்யத் தொடங்கியுள்ளனர்.

ரொக்கப்பண அன்பளிப்பை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் அதன் வேலனைப் பிரதிநிதி திரு வி. வரதலிங்கம் வேலனை கற்பகம் பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கினார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பூனகரி மண்ணித்தலைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பழம் பெரும் ஆலயம் ஒன்றின் ஆய்வு பற்றிய கருத்தரங்குகொன்று அதனை ஆய்வு செய்யும் விரிவுரையாளர். பி. புஸ்பரத்தினம் அவர்களால் பல்கலைக்கழக வீதிஈவிலின் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பத்மநாதன் உட்பட பல வரலாற்றறிஞர்கள் பங்குபற்றினர். (லோ)

## பழைய இறாத்தல் படிகள் பயன் படுத்தின் தண்டனை

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் அனேகமான தனியார் விறகுகாலைகளில் பழைய இறாத்தல் படிகளே இன்றும் பாவிக்கப்படுகின்றன. இச்சட்ட விரோத நடவடிக்கைகள். கண்டு பிடிக்கப்படின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்று யாழ்மாவட்ட அளவைகள் நிறுவைகள் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் எச்சரித்துள்ளார்.

விறகு காலைகளில் பயன் படுத்தப்படும் படிகள் தராசுகளுக்கு கட்டாயம் முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும் என்றார். யாழ். நகரில் விறகு காலை உரிமையாளர்கள் எவரும் இன்றும் தமது தராசு படிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளவில்லை என்றும் விறகு காலைகளில் கிலோ கிராம் படிகளையே பாவிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (24)

## விடுமுறை நாட்களில் கடைகள் திறக்கலாமா?

(விசேட நிருபர்)

''சனி, ஞாயிறு நாட்களில் கடைகள் திறக்கலாமென்று சொல்லவில்லை. அரசால்புதிதாகக் கொண்டு வரப்பட்ட சட்டம் கூடிய விரைவில் காலநேர மாற்றங்களுடன் நடைமுறைக்கு அமுல் செய்யவரும்.''

உதவித் தொழில் ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் ஈழநாதம் விசேடநிருபர் கேட்ட கேள்விக்கு மேற்படி பதில் சொன்னார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

''தேனீர்க்கடை, மருந்துக் கடை, பத்திரிகைக் கடைகள் தவிர்ந்த கடைகளுக்கே அது பொருந்தும். மேலும் யாழ்ப்பாணத்தில் நகைக் கடைகள், புடவைக் கடைகள் இரவு 10 மணிவரை திறந்திருந்தால் பொதுமக்கள் அந்நேரங்களில் கொள்வனவு செய்ய வந்து செல்வதென்பது முடியக்கூடிய காரியமா?'' இவ்வாறு கேள்வி எழுப்பினார். (21)

## சாளி திருட்டு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் சாளித் திருடு அதிகரித்துள்ளது சாளி மோட்டார் சைக்கிள்கள் இரண்டு யாழ்ப்பாணப் பகுதியில் அண்மையில் திருடப்பட்டுள்ளது. 30ஆம் திகதி இரவு எட்டு மணியளவில் யாழ். நட்டாதெரு சந்தியில் 109 - 3794 இலக்கத்தையுடைய ஒரு ''கொண்டா சாளியும்'' பெருமாள் கோயிலடியில் கடந்த 17ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இன்னோர் சாளியும் (நம்பர் A. A. 102) திடீரென மறைந்து விட்டதாக யாழ். பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

யாழ் சாளி சொந்தக்காரர்களை ஜாக்கிரதையாக இருக்குப்படி பொலிசார் வேண்டிக் கொள்கின்றனர். (லோ)

யாழ். நகரில்

## கண்ட இடங்களிலும் சைக்கிள் விடுவதற்கு தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் பெரிய கடைப்பகுதியில் கண்ட கண்ட இடங்களிலும் விடப்படும் சைக்கிள்கள் நேற்று முதல் அப்புறப்படுத்தப்பட்டு பாது

இதேசமயம் நகரின் முக்கிய சந்திகளில் தொண்டர்கள் போக்குவரத்துச் சேவைகளை சீராக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பஸ் நிலையத்தில் இருக்கும்

வைத்தியசாலை...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

தின் பின் தாம் இந்நிலைக்குள்ளானதாகவும் பின்பு தாம் உரியவர்களிடம் இது பற்றி முறையிட்டுள்ளதாகவும் அக் காவலாளி தெரிவித்தார். (லோ)

நச்சு இரசாயன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகைகளிலுள்ள இரசாயன பொருட்கள் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## தியாகிகள் நினைவாக

இரு முஸ்லிம். . .

இடங்களிலும் விடப்படும் சைக்கிள்கள் நேற்று முதல் அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

இவற்றை இவ்வாறு விடுவதால் போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் ஏற்படாது இருக்கவும், சைக்கிள் திருட்டுக்கள் நடைபெறாது இருக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சைக்கிள்களை பாதுகாப்பு நிலையங்களில் விடாது கண்ட இடங்களிலும் இனிமேல்விடப்பட்டால் அவற்றுக்கு தண்டம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## சீக்கியர்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் தமது இயக்கத்தின் சார்பில் எந்தப் பிரதிநிதியும் சீக்கியத் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவில்லை என்றும், அவ்வாறு யாராவது பேசியிருந்தால், சம்பந்தப்பட்டவர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## பத்திரிகையாளர்களை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பிவிட்டு இந்திய இலங்கை மற்றும் வெளிநாட்டு வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் பரப்பிய வதந்திகளுக்கு கடந்த வியாழக்கிழமை தலைவர் பிரபாகரன் யாழ்நகர் வந்தார் என்று ஈழநாதம் வெளியிட்ட செய்தியின் மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இன்று காலை அவர் உள்ளூர் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசுகிறார்,

சீராக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பஸ் நிலையத்தில் இருக்கும் அன்னாசிப்பழ வியாபாரிகளினால் பஸ்களை பஸ் நிலையத்தினுள் செலுத்தவோ வெளியே கொண்டுவரவோ முடியாதுள்ளதாக போக்குவரத்துச்சபைஅதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

## நினைவுத்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரராசா, செயலாளர் யோகி, செயற்குழு உறுப்பினர் கவிஞர் காசி ஆனந்தன், முல்லை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் கைலாஸ், முல்லை மாவட்டப் பொறுப்பாளர் திவாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கு மகளிர் அணியைச் சேர்ந்த ஜெயா தலைமை தாங்கினார்.

## 326 பல்கலை. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளனராம். மிகுதிப் பேர் பொலிஸ் நிலையங்களிலும் பாதுகாப்புப் படையின் முகாம்களிலும் பரவலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக் கழகங்கள் தை மாதம் ஆரம்பமாகியும் இவர்கள் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை.

சென்ற வருடம் டிசம்பரில் பாதுகாப்பு அமைச்சு 74 மாணவர்களை விடுதலை செய்து பெற்றோர்களிடம் கையளித்துள்ளதாகப் பல்களைக் கழக மான்யக் குழு தெரிவிக்கிறது.

விடுவிக்கப்பட்ட மாணவர்களில் 56 பேர் ருகுணைப் பல்கலைக் கழகத்தையும், 9 போ கொழும்புப் பல்கலைக் கழகத்தையும், 4 பேர் பேராதனைப் பல்கலைக்கழகத்தையும், இருவர் மொறட்டுவ, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களையும் சேர்ந்தவர்கள் என்று அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

# தியாகிகள் நினைவாக விளையாட்டுப்போட்டி

(வண்ணார்பண்ணை)

வீர மரணமடைந்த விடுதலைப்புலிகளான லெப்டினல் கேணல் ராதா, போராளிகள் இன்பம், கிறிஸ்டி, மாபி, இவர்களின் ஞாபகார்த்தமாக வண்ணார் பண்ணைப்பகுதியில் ஐயனார் சனசமூகநிலைய முன்றலில் இன்று (ஞாயிறு) பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தியாகிகளின் பெற்றோர்களால் பரிசு வழங்கப்படும்.

இவ்விழாவில் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஆஞ்சனேயர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (45)

## நயினாதீவில்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்த நயினாதீவு பிரதான பாதை (முகாம் இருக்கும் ஊடாகச் செல்லும் வீதி) யும் நேற்று முன்தினத்தில் இருந்து பொதுமக்களது பாவனைகளுக்காக சடற்படையினரால் திறந்துவிடப்பட்டுள்ளது (14

## வடக்கு கிழக்கு . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மீறி தேவாலயத்துக்கும் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கும் சென்றவர்களையும், சென்று திரும்பியவர்களையும் துன்புறுத்தினார்களென்றும், ஆயர் தியோகுப்பிள்ளை தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இராணுவம் வழிபாட்டுத் தலங்களுக்குள் அத்துமீறிப் பிரவேசித்துப் பொதுமக்களைப் பெரும் சித்திரவதை செய்ததையும், ஆயர் தியோகுப்பிள்ளை தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## மட்டக்களப்பில் மீன் விற்பனையில் வீழ்ச்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுவாக பெரும்பாலான மக்கள் மீன் வாங்குவதை நிறுத்தி உள்ளனர். தற்போது மீன்களில் ஒருவிதமான வைரஸ் நோய் தோன்றி உள்ளது. இதுபற்றி கடந்த வாரம் சுகாதார திணைக்கள அதிகாரிகளினால் மீன் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து தற்போது பெரும்பாலான மக்கள் மாசியை அதிகளவில் கறிக்காக வாங்குவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

## மட்டக்களப்பில். . .

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் இம்முறை இல்லையெனப் பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஈழநாதத்திற்குத் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கண்காணிப்பு செலுத்தி வருவதால் தான் பரீட்சை அமைதியாக நடைபெறுகின்றன.

வட - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு புதிய செயலாளர் திரு. இ. ஜெ. சற்குணராஜா பரீட்சை நிலையங்களுக்கு விஜயம் செய்தார். (37(

## இரு முஸ்லிம். . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி சூட்டுச் சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த விடுதலைப் புலிகள் இச்சம்பவத்தில் உபயோகித்த மூன்று துப்பாக்கிகளைக் கைப்பற்றினர்.

பன்னிரெண்டுபேர் துப்பாக்கிகள் சகிதம் இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்றும் இதனையடுத்து ஆண்டியா புளியங்குளம் பகுதியில் பதற்றம் நிலவி வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள்தெரிவிக்கின்றன.

எம்.எம்.காலதீன்(வயது36) அ. முஸ்தபா (வயது 47) தெளபீக்(வயது7) ஆகியோரே மேற்படி சம்பவத்தில் கொல்லப் பட்டவர்களாவார்கள்.

எம். எம். சிராப்தீன் மௌலவி.பு. செய்யது இபுறாஸிம், எம் எஸ். றம் வான் பு. ஜிப்ரி ஆகியோரே காயமடைந்தவர்களாவார்கள். (தி)

## ஊர்காவற்றுறையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் காலபோகத்தில் இக்குளங்களில் தண்ணீரைச் சேரித்து வைத்து விவாசயத் தேவைளுக்குப் பாவிப்பதற்கும் மாகவும், குளங்களில் நல்ல தண்ணீர் தேங்கி நிற்பதால், அருகில் உள்ள கிணற்று நீர்களை நல்ல தண்ணீராக மாற்றும் முகமாகவுமே இந்த நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் ஊர்காவற்றுறை உத அரசாங்க அதிபர் திரு எஸ். எஸ். ஜீவரத்தினம் தெரிவித்துள்ளார். (14)

## ஏப்ரல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

தோரணங்கள் கட்டி தினமும் ஆண்களும் பெண்களும் சுழற்சி முறையில் உண்ணா நோன்பிருந்து வருகிறார்கள்

வவுனியா மாவட்டத்தில் உள்ள சிற்றூரவைகள் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன. (தி)

(லோ)

## கடற்றொழிலாளர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான அமைப்புகளின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

## அம்பாறை . . .

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரமான நிலையில் முஸ்லிம்கள் தமது மதகடமைகளில் ஈடுபடுகின்றனர்.

இது இவ்வாறிருக்க காத்தான்குடியில் விடுதலைப் புலிகள் மகள் முன்னணி கிளையினால் அறிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

புனித ரம்ழான் நாட்களில் பகிரங்கமான இடத்தில் புகைத்தல், சிற்றுண்டி, குளிர்பான வகைகள் பகிரங்க இடத்தில் விற்பனை, கேளிக்கைகள், களியாட்டங்கள், புனித அல்குர் ஆன் பாடல்கள் தவிர ஏனைய பாடல்கள் பொது இடங்களில் ஒலிபரப்புதல், கஞ்சா, அபின், லேகியம் போன்ற போதைப் பொருள் வாங்குதல், விற்பனை என்பன தடைசெய்யப்பட்டுள்ளது.

ஹோட்டல்கள், சிற்றுண்டி சாலைகள் பி ப 3 மணிக்குப் பின்புதான் முற்றாக திறக்கப்படல் வேண்டும்.

ஆண், பெண் சகலரும் இரவு நேர தராவீஹ் தொழுகையில் கலந்துகொள்வதற்காக திருடர்கள், ஏனைய சக்திகள் பயமின்றி சுதந்திரமாக பள்ளி வாசல் செல்ல பாதுகாப்பு உத்தரவாதம் தருகிறோம்.

மத அனுஷ்டான நேரத்தில் திருடர்கள் கைவரிசை காட்டலாம். இதற்காக ரோந்து சேவை செய்யப்பட்டுள்ளது.

புனித நோன்பு நாட்களில் சகல தரப்பிலும் ஒத்துழைப்பு தரப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது (37)

பொருட்கள் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

வாவி மீன் வகைகளில் ஒருவிதமான புண் ஏற்பட்டு நோய் காரணமாக இறந்து மிதக்கும் சம்பவம் தொடர்கிறது.

கடந்த கால சம்பவங்களின் எதிரொலியாக கடைசி நேரத்தில் இந்தியப் படையினர், தமிழ் தேசிய இராணுவம் என்பன ஆயுதங்கள், வெடிமருந்து வகைகளை வாவிக்குள் எறிந்துவிட்டு சென்றுள்ளார்கள் என பொதுமக்கள் தகவல் மூலம் தெரிய வந்துள்ளது.

உன்னிச்சை குளத்திலும் மீன்களுக்கு மேற்படி நோய் ஏற்பட்டுள்ளது. அக்குளத்திலும் ஆயுதங்கள் வெடிமருந்துகள் கடைசி நேரத்தில் தமிழ் தேசிய இராணுவம் வீசிவிட்டு தப்பிச் சென்றனர்

இந்நிலையில் தன் ஆயுதங்கள், வெடிமருந்துகளின் நச்சுத்தன்மைகள கலந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

அதே நேரம் கடந்தவாரம் பதில் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகர் திரு. எஸ். ரி. ஜோர்ஜ் அழைப்பின பிரகாரம் நீர்வாழ் விலாங்கியல் ஆய்வு உத்தியோகத்தர்கள் வருகை தந்தனர்.

வாவியில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட மீன் இனங்கள் பரிசோதனை செய்யப்பட்டு நோய் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

நீரின் உப்புத்தன்மை, வெப்பநிலை என்பன ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி ஆய்வுமூலம் தெரியவந்ததாவது

இந் நோய்க்கு காரணம் பல்வேறு வகையான இரசாயண நச்சுத்தன்மைதான் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நோய் காணப்பட்ட மீன் சாப்பிடாமல் ஏனைய மீன் சாப்பிடலாம் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (37)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது

# ஈழநாதம்

## ஞாயிறு மலர்


“போராளிகளின் வாழ்க்கை அவன் வாழும் காலத்தில் வரலாறாகவும் மரணித்த பின்னர் மற்றோர்க்குப் பாடமாகவும் அமைகிறது.
போராடும் காலத்தில் அவர்கள் சுயலாபத்தையோ, கௌரவத்தையோ எதிர்பார்ப்பதில்லை. மரணித்த பின்னரும் அப்படியே எதனையும் எதிர்பார்ப்பதில்லை.
- அவர்கள் மக்களின் வாழ்க்கைக்கு முன்னுதாரணமாகவே இருக்கின்றனர்”

மகேந்திரராஜா (மாத்தையா)






மீண்டும் ஒருமுறை-...?

கவிதை

இந்த விரல்களுக்கும்
நகம் முளைக்கும் என்று - அவர்களுக்கு
தெரியாமல் போய்விட்டது!
இந்த மண்ணில்
பூவின விதைகளைக் கண்டவர்க்கு;
ஒரு பூகம்பத்தின் வித்து
புதைந்து கிடந்ததை
காண முடியாமல் போய் விட்டது!
ஒதுங்கி, ஒதுங்கி நின்ற
கால்களைக் கண்டவர்கள் - மேலே
ஓங்கி வளர்ந்த கடப்பாரையைக் காணவில்லை.
பலகாலமாக எம்மண்ணில்
குழிபறித்தவர்கள்-
பாதாளத்தைக் கண்டு
பயப்படுகிறார்கள்
முகமூடிகள் பலதை - தாங்கள்
மாற்றி, மாற்றி போட்டு,
எங்கள் முகங்களைக் கிழித்தவர்கள்,
முட்களின் முனைப்பைக் கண்டு
தங்கள் முகத்தையே மாற்றிக் கொண்டார்கள்!
எம குடல்களைக் கிழித்து
செங்கடலை ஓடவிட்டவர்கள்- அதில்
சிலிர்த்து எழுந்த வேங்கைகளை
நினைக்கவில்லை.
இந்த சின்னச் சின்ன விதைகளுக்கு
உரமிட்டவர்களே நீங்கள் தான் இன்று
பென்னம் பெரிய விருட்சமாய் -அவை
விழுதூன்றி நிற்கின்றது
இனியும் ஒருமுறை
உங்கள் வால்கள் ஆடத்துவங்காது
என்றே நம்புகின்றோம்!
இல்லையென்றால்,
இந்த மண்ணின் சிசுக்களும்
வாள் ஏந்தும்
வயிற்றின் கருவும்
கனல் கக்கும்!!

-சந்திரபோஸ்

## மலர்க் கோலம்



மலர் நடுவே ஒரு மழலை மலர்ந்து
மகிழ்ந்து சிரிக்கிறது - நிதம்
மகிழ்ந்தே சிரிக்கிறது.

புலரும் அமைதிப் பொழுதைக் கண்டு
முறுவல் கொள்கிறது - புன்
முறுவல் கொள்கிறது.

நாளைய உலகின் நாயகன் நானென
வீரம் பகர்கிறது - யுக
வீரம் பகர்கிறது.

வேளை வருகையில் தாயகம் காத்திட
விரைவேன் என்கிறது - நான்
விரைவேன் என்கிறது.

வளரும் பயிரை முளையில் தெரியும்
வளர்க இவன் வாழ்வு - தினம்
உயர்க இவன் வாழ்வு.

ஈழம் இவனின் இதயத்தாகம்
இலங்கும் இவன் காலம் - பார்
இனிமேல் பொற்காலம்.

— கரவையூர் மோகன்




“உன்போன்றோரின்...
இறப்புகளின் பின்னணியில்
இந்தியப்படை வெளியேறும்
சாவுகளின் மேட்டில் - ஒரு
சரித்திரம் உருவாகும்.”

மேஜர் பிரசாத் நினைவாக அன்றொருநாள் “சுதந்திரப் பறவைகள்” பாடி வைத்த கவிதை இது. இன்று இந்தியப் படைகள் முற்றாக வெளியேறிய நிலையில் இந்தக் கவிதையும் ஒரு முத்தாய்ப்பாக அமைந்துள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த கந்தையா முரளீதரன் என்ற மாணவனை 1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் ஆழமாகச் சிந்திக்க வைத்தது. கல்வியிலும், விளையாட்டிலும் அபார திறமை பெற்று விளங்கிய முரளீதரன் இனப்பற்றும், [illegible] மேலிட்டமை [illegible]

இக்கோரக் கொலை நிகழ்வுகளின் பின்னர் இச்சதிகாரக் கும்பலின நோக்கங்களைப் புரிந்துகொண்ட மக்கள் இவர்களை இப்பகுதியிலிருந்து இனம்கண்டு ஒதுக்கத் தொடங்கினர். இக்கொலைவெறிப் பயங்கரவாதிகளிடமிருந்து அந்நியப்பட்ட மக்கள் விடுதலைப் போராட்டத்திலின்றும் அந்நியப்படாதவகையில் அவர்களை போராட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டிய தேவை இருந்தது. இக்காலகட்டத்தில் சுழிபுரப் பகுதியில் வாழ்ந்து மக்களைப் போராட்டத்தின்பால் அணிதிரட்டி அவர்களுக்கு ஒரு சரியான புரட்சிகர தலைமையைப் பிரசாத் கொடுத்தான். வட்டுக்கோட்டைத் தொகுதியில் விடுதலைப் புலிகள் என்ற விதை வேரூன்றி விருட்சமாக வளர்ந்து விடுதலை அபிமானிகளுக்கு நிழல் கொடுத்தது என்றால் அதற்கு முதுகெலும்பாகநின்று உழைத்தவன் பிரசாத் என்று [illegible]

இவனிடம் காணப்பட்ட இன்னொரு சிறப்பு இவன் பலகலையும் கற்றுத் தேர்ந்த ஒரு சகலகலா வல்லுனன். அரசியல், பொருளியல், சமூகவியல், உளவியல், அழகியல், நுண்கலைகள், கிரிக்கட் முதலான விளையாட்டுக் கலைகளோடு பஸ், லொறி, வாகனங்கள் இயந்திரப் பொறிமுறைகள் இயக்குவதிலும் பழுதுபார்த்தலிலும் இவனிடம் அபரிமிதமான அறிவு காணப்பட்டது.

### முறுவல் நிலைமை

இந்திய இராணுவம் இலங்கைக்குள் இறக்கப்பட்டு விடுதலைப்புலிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அதனை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்த வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டது. “போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது” என்று தலை[illegible]

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

### யாழ்.மாவட்ட பொறுப்பாளர்

திலீபனின் மறைவைத் தொடர்ந்து மேஜர் பிரசாத் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். பிரசாத் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக இருந்த காலகட்டத்தில்தான் இலங்கை - இந்தியப் போர் மிக உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டு இருந்[illegible]



துவிச்சக்கரவண்டியில் ஆர். கே. எல். எம். ஜி. ஒன்றும் ஏ. கே. எல். எம். ஜி. ஒன்றும் கட்டிக்கொண்டு வந்து போராளிகளிடம் ஒப்படைத்தான். இந்திய இராணுவத்தின கவச வாகனங்கள் வீதிகளை நிறைத்து ரோந்து சுற்றும்போது செயின் [illegible] ளக்குள் [illegible] தார் போட்டவீட்[illegible] ளக்கூட உழுது கொண்டு [illegible] திரியும்போது-

## நேதாஜி

ஆகாய மார்க்கமாக இந்திய ஹெலிகள் போராளிகளின் நடமாட்டம் பற்றி தரையில் நின்ற சிப்பாய்களுக்கு வேவு பார்த்து உளவு சொல்லிக் கொண்டிருக்க, சிப்பாய்களோ வேலிகளையும் மதில்களையும் தகர்த்து வீடுகளுக்குள் புகுந்து போராளிகளைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருக்கும்போது [illegible]

கில் பிரயாணம்செய்துகொண்டிருந்த திருவாளர் துரோகியார் ஒருவர் பிரசாத்தை அடையாளம் கண்டு இந்தியத் துருப்புக்களுக்குக் காட்டிக் கொடுத்தார். இந்திய இராணுவத்துடனான மோதலின் போது காயப்பட்ட நிலையில் இயக்க மரபுகளுக்கமைய மேஜர் பிரசாத் சைனைட் வில்லைகளை உட்கொண்டு வீரமரணமுற்றார். பல வீர வேங்கைகளின தியாகத்தை தனகத்தே தாங்கி நிற்கும் தமிழீழ விடுதலை வரலாற்றுடயறி மேஜர் பிரசாத்தின மரணத்தை 6-2-1988 இல் பதிவு செய்து கொண்டது. மேஜர் பிரசாத்தின மரணத்தைக் கேள்வியுற்ற தலைவர் பிரபா பின்வருமாறு சக போராளி ஒருவரிடம் சொன்னார்.

“இலட்சியத்திற்காக இறுதி வரை நின்று உழைத்த தலை[illegible]

முரளீதரன் இனப்பற்றும், ஒழுபிப்பற்றும் மேலிட்டமையால் தன்னையும் ஒரு போராளியாக்க விரும்பினான். இலட்சியப் பற்றும் தியாக உள்ளமும் உறுதியும் கொண்ட விடுதலைப் புலிகளின் பாசறை அவனுக்கு பயிற்சிக் களமாயிற்று.

"The Battles of Trafelquar and water-loo were won on the playing field of Eton and Harrow."

என்பது ஒருபிரபலம் பெற்ற ஆங்கில பழமொழி. அதாவது ஆங்கிலேயர்கள் நெப்போலியனை என்ற மாபெரும் வீரனைத் தோற்கடித்த வரலாற்று புகழ் பெற்ற நிகழ்வு Eton and Harrow என்ற இரண்டு கல்லூரிகளின் விளையாட்டு மைதானத்தில் அவர்கள் பெற்ற அனுபவ முத்திரைகளின் வெளிப்பாடாக நிகழ்ந்தது என்பது இதன் பொருளாகும். நெப்போலியனை 1805 இல் தளபதி நெல்சனும் 1815இல் தளபதி வெலிங்டனும் இரண்டுதடவை தோற்கடித்தனர்.

இதேபோல விடுதலைப்புலிகள் இயக்கத்திலும் பாடசாலை நாட்களில் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு காட்டிய மாணவர்கள்பின்னர்போராட்டக்களத்தில் முன்னணிப் போராளிகளாக விளங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விளையாட்டிலும் கல்வியிலும் தலைசிறந்த மாணவர்களான பொன்னம்மான், ராதா, கேடில்ஸ், திலீபன், காண்டீபன் போன்ற போராளிகள் வகுப்பறையிலும் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் முன்னணியில் திகழ்ந்தது போல விடுதலைப் புலிகளின் பாசறையிலும் பின்னர் எதிரியுடனான மோதலில் போர்க்களத்திலும் முன்னணி வியூகத்தில் இடம் பிடித்துக்கொண்டனர். யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழ்



பெற்ற அதிபரான 'பிச்னல்' ஞாபகார்த்த விளையாட்டு மைதானம் மேஜர் பிரசாத்திற்கு இத்தகைய அனுபவ முத்திரையின் பின்தளமாயிற்று.

### பாசறையில் பயிற்சி

விடுதலைப் புலிகளின் அணியில் இணைந்துகொண்டு இராணுவப் பாசறை ஒன்றில் சிறப்பான முறையில் இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய பிரசாத் பிரதேச ரீதியாக பல இடங்களிலும் அமைக்கப்பட்டு இருந்த இராணுவப் பயிற்சிக் கூடங்களில் போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பில் அமர்த்தப்பட்டான். அவன் பெற்றிருந்த இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களைக் கையாள்வதில் அவனுக்கு இருந்த அறிவும் ஒருமுகப்படுத்தப்பட்டமையால் அவனால் பயிற்சி அளிக்கப்பட்ட பலர் உயிர்த்துடிப்பும் உத்வேகமும் ஆற்றலும் திறமையும் பெற்ற போராளிகளாக பரிணாமம் பெற்றனர்.

### சுழிபுரத்தில் பிரசாத்

1984 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் புளொட் சதிகாரக் கும்பலின் அடாவடித்தனங்கள் சுழிபுரம் பகுதியில் வாழ்ந்த மக்களைக் கொடுமைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன. விடுதலைப்புலிகளின் பாசறையில் முதலில் களப்பலியான லெப். சங்கரின் (சத்தியநாதன் - கம்பர்மலை) இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலிப் பிரசுரம் ஒன்றை ஒட்டுவதற்காக இப்பகுதிக்குசென்ற ஆறு போராளிகள் புளொட் சதிகாரக் கும்பலால் துடிக்கத் துடிக்க வெட்டிக் கொல்லப்பட்டு பனிப்புலம் காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டனர்.

அதற்கு முதுகெலும்பாகநின்று உழைத்தவன் பிரசாத் என்று ஒருமுறை தியாகி திலீபன் குறிப்பிட்டார். 1986 ஆம் ஆண்டளவில் பிரசாத் வட்டுக்கோட்டைப்பகுதி பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட பிரசாத் அரசியல் வேலைகளை முழுமையாகவும் திறமையாகவும் செய்து வந்தான்.

லாம். ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது" என்று தலைவர் பிரபா சுதுமலையில் விடுத்த அறைகூவலுக்கு அமைய ஆயுதப் போராளியான திலீபன் அக்காலச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டான். ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்த தினம் மேஜர் பிர



> இந்திய இராணுவத்தின் கவசவாகனங்கள் வீதிகளை நிறைத்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையில் - செயின்புளக்குகள் தார் போட்ட வீதிகளைக்கூட உழுதுகொண்டு திரிந்த நேரத்தில் - ஆகாய மார்க்கமாக இந்திய ஹெலிகள் போராளிகளின் நடமாட்டம் பற்றி தரையில் நின்ற சிப்பாய்களுக்கு வேவுபார்த்து உளவு சொல்லிக் கொண்டிருந்த நிலையில் - சிப்பாய்களோ வேலிகளை வெட்டியும் மதில்களை உடைத்தும் வீடுகளுக்குள் புகுந்து போராளிகளைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்த வேளையில் இவர்கள் எல்லோரது கண்களிலும் மண்ணைத் தூவி விட்டு மேஜர் பிரசாத் வட்டுக்கோட்டையில் இருந்து பலாலிவரை தன்னந்தனியனாக ஒரு துவிச்சக்கர வண்டியில் ஆர். கே. எல். எம். ஜி ஒன்றையும் ஏ. கே. எல். எம். ஜி ஒன்றையும் கொண்டுவந்து போராளிகளிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

### பிரசாத் மேற்கொண்ட ஆராய்ச்சிகள்

மேஜர் பிரசாத் தனது பிரதேசத்தின் சமூக நிலைமைகள், பொருளாதார வளங்கள், கல்வி வளர்ச்சிக்கான ஆதார தேவைகள் என்பன தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு அவை பற்றிய பூரண அறிவைப் பெற்றுக் கொண்டான். ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கு அந்தச் சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சி சம்பந்தமான பூரண தெளிவும் அறிவும் இருத்தல் அவசியமாகும். இத்தகைய கட்டுமானங்களைப் பிரசாத் தெளிவாகப் புரிந்துகொண்டு தான் திட்டங்களை வகுத்தான். சிறப்பான தலைமைத்துவத்தையும் மக்களுக்கு வழங்கினான்.

சாத் ஆற்றிய உரை பிரசித்தமானது.

திலீபன் முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றெடுத்தும்பாராத இந்திய மத்திய அரசு திலீபனின் இறப்புக்கு காரணமானது. திலீபன் கண்மூடிய போதுதான் தமிழ்ச் சமூகம் கண்விழித்துக் கொண்டது. இந்தியாவின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளுக்கு எதிரானது தான் என்பதைப் புரிந்து கொண்ட மக்கள் ஆங்காங்கே பறியல் போராட்டங்களில் ஈடுபடலாயினர். இதைத் தொடர்ந்து குமரப்பா, புலேந்திரன் முதலான பன்னிரு புலிகளின் மறைவைத்தொடர்ந்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வெற்றுத்தன்மையும் இந்தியாவின் கையாலாகாத்தனமும் அம்பலப்படுத்தப்பட்டது. நன்றாக அம்பலப்படுத்தப்பட்ட இந்தியா விடுதலைப்

தது. இக்காலகட்டத்தில் பிரசாத் ஆற்றிய பணி பலராலும் வியந்து பாராட்டப்பட்டது. இந்திய இராணுவத்தால் மிக மோசமாகத் தேடப்பட்ட பிரசாத் கேந்திர இராணுவ முக்கியத்துவம்வாய்ந்த இடங்களுக்கூடாக வெகு சுறுசுறுப்பாக இயங்கினான். அவனுக்காகப் பல இடங்களில் இந்திய இராணுவத்தால் விரிக்கப்பட்ட வலைப் பின்னலை அவன் ஊடறுத்துக் கொண்டு எதிரியின் கையில் அகப்படாமல் சாமர்த்தியமாகப் பணியாற்றினான்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையில் யுத்தம் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வட்டுக்கோட்டையிலிருந்துபலாலிவரைதன்னந்தனியனாது ஒருநாள் ஒரு

...போட்டுத் தேடிக்கொண்டிருக்கும்போது வட்டுக்கோட்டையிலிருந்து பலாலிவரை பல மைல்கள் தூரம் குர்சு ஒழுங்கைகளைத் தாண்டி கனரக ஆயுதங்களோடு சென்று மேஜர் பிரசாத் ஆற்றிய பணி மகத்துவமானது.

இவனது இந்த துணிகர செயல்பற்றி இயற்றப்பட்ட கவிதை ஒன்றின் வரியில்

"இருபக்க வீதியிலும்
இந்தியப்படை காத்திருக்க
பீதியடைந்த மக்கள்
வீதிகளை மறந்தோட
நீயோ...

அடிபாட்டுக்குத்
தேவையான

ஆயுதங்களைச் சுமந்து

சந்திகளையும்
முடக்குகளையும்

சாதாரணமாய்க்
கடந்து வந்தாய்."

### கடைசி நாட்கள்

இந்தியப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடந்த போரின் வேகம் சற்று குறைந்து ஆனால் இந்திய இராணுவத்தின் ரோந்து சுற்றலும் தேடுதல் வேட்டையும் அதிகரித்து இருந்தபோது ஒரு நாள் மேஜர் பிரசாத் வட்டுக்கோட்டையில் உள்ள வீதி வழியாக துண்டுப் பிரசுரம் ஒன்றை அச்சடிக்குமுகமாகச் துவிச்சக்கரவண்டி ஒன்றில் சென்று கொண்டிருந்தான். அப்போது இந்தியத் துருப்புகளை ஏற்றிய மூன்று ட்றக்குகள் ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றுகொண்டிருந்தன. அந்த மூன்றாவது ...

"இலட்சியத்திற்காக இறுதி வரை நின்று உழைத்த தலைவன் ஒருவனை நாம் இழந்து விட்டோம்"



மேஜர் பிரசாத்தை நினைக்கும் போதெல்லாம் சுபாஷ் சந்திரபோஸ் தனது படை அணிக்கு கூறிய ஒரு வாசகம் தான் நினைவுக்கு வருகின்றது.

வாளேந்தியவன் முன்னே
வாளுடனே செல்!
வார்த்தைகள் அர்த்தமற்று
போய்விடலாம்.
துணிவிருந்தால் பயமேது?
பயமில்லையெனில்
தோல்வியேது?
நான் சுதந்திரத்துக்காக
"பேசவரவில்லை"
எனக்குத் தேவையானது
ஆயுதமும் துணிச்சலுமே!

□

> **பிரசாத்தின் மரணம் பற்றி....**
>
> **"இலட்சியத்திற்காக இறுதிவரை உழைத்த தலைவன் ஒருவனை நாம் இழந்து விட்டோம்.**
>
> **— தலைவர் பிரபாகரன்**

கடந்த காலத்தின் பதிவுகள் -



# சேவல் கூவாது விடிந்த நாட்கள்

## (1)

ஜூலை 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் வந்திறங்கிய இந்திய இராணுவத்தினர் வெள்ளைக் கொடி உயர்த்திய வாகனங்களில் திரிந்தனர். மக்களைக் கண்டதும் கையுயர்த்தி அசைத்து புன்முறுவலித்து இன்முகம் காட்டினர். இப்படி நடமாடிய ஜவான்களுக்குப் 'போ'ரடித்தது.

கீழ் மட்டத்தில் – ஜவான்கள் மட்டத்திலுள்ளவர்களுக்கு தாம் ஏன் இங்கு வந்தோம் ஏனிப்படி வெள்ளைக் கொடியுடன் பல்லிளித்துக் கொண்டு திரிகிறோம் என அலுத்து விட்டது. தாம் ஏனிங்கு கொண்டுவரப்பட்டார்களென்று அவர்களுக்குத் தெரியாது அவர்களிடமே பலவித ஊகங்கள்: கற்பனைகள் பலருக்கு இது எந்த நாடு என்று கூட விளங்கவில்லை. யாழ்ப்பாணத்தை சில ஜவான்கள் இது சிங்கப்பூராயிருக்குமோ என்று கூட ஐயுற்றனர். இங்குள்ள விசாலமான கல்வீடுகள், வீட்டிற்கொரு கிணறு, மோட்டார் பூட்டிய தண்ணீர் தாங்கிகள், தாராள மின்சார பாவனை, வீதிகளில் இளம் பெண்கள் சைக்கிள்களில் சுதந்திரமாக சிட்டுக் குருவிகள் போல கலகலப்பாக, துரு துருவென ஓடிக் கொண்டிருந்த பாங்குயாவும் அவர்களிடம் ஒரு பொறாமையுணர்ச்சியைக் கூட ஏற்படுத்தியிருந்திருக்க வேண்டும்.

எதை எதையோ கற்பனை செய்து எதிர்பார்த்து இங்கு வந்தவர்களுக்கு இங்கு நிலவிய சூழ்நிலை அவர்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு நேர் மாறாக இருந்தது. இது அவர்களுக்கு எரிச்சலை, ஏமாற்றத்தைக் கொடுத்திருக்க வேண்டும். சிலர் இதனை வெளிப்படையாகவே கூறிஉள்ளனர். ஆனால் அவர்களுடைய சல்ப்பான இந்த நிலைமை நீடிக்கவில்லை. ஏதோ புயலுக்கு முந்திய அமைதி போன்ற மாயத் தோற்றம் மாறுவதற்குரிய காரணிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழத் தொடங்கின.

ஒருநாள் விடிகாலை ஐந்தரை மணி இருக்கும். ஈழத் தமிழரின் நம்பிக்கை அமைதி பாதுகாப்பு எல்லாமே அழிந்து விட்டன என கட்டியங் கூறுவது போல் பலத்த குண்டு வெடிப்புச் சத்தங்கள் யாழ்நகர மக்களை விழுந்தடித்துக் கொண்டு நித்திரையிலிருந்து எழுந்திருக்கச் செய்தன.

நாவலர் வீதியில் உள்ள ஈழமுரசு காரியாலயமும், ஸ்ரான்லி வீதியிலுள்ள முரசொலி காரியாலயமும் குறிப்பாக அங்கிருந்த அச்சியந்திரங்களும் பலம் வாய்ந்த குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டன. ஒரு ஒளிவுமறைவுமின்றி இந்திய இராணுவத்தினர் மிக வெளிப்படையாக இந்த உலகம் கண்டறியாத அநியாயத்தைச் செய்தது மட்டுமல்லாமல், இதை ''ராஜீவ்காந்தியின் நேரடி உத்தரவின்படியே செய்திருக்கிறோமென்'' அயலிலுள்ள மக்களிடம் தெளிவாகவே சொல்லிச் சென்றார்கள். அவர்கள் அதைக் கூறாவிட்டாலும், இப்படிப்பட்ட படு பாதகமான உலகத்தின் மனச்சாட்சியையே உலுக்குகின்ற ஒரு கொடிய ஜனநாயக விரோத செயலுக்கு எந்தவொரு இடைநிலை, உயர்நிலை அதிகாரியும் பொறுப்பாயிருக்கவே முடியாது.

தினமும் காந்தியஞ்சலி செலுத்தியும் அஹிம்சையை தனது கொள்கையாகப் பறைசாற்றியும் தர்ம சாஸ்திரங்களும் வேதங்களும் பிறந்த ஞானபூமியென வைதிகர்களாலும், மிகப் பெரிய ஜனநாயக நாடு என நவீன உலகத்தாராலும் வர்ணிக்கப்படுகின்ற இந்தியா, அயலிலுள்ள சின்னஞ்சிறிய நாட்டில் அடக்கியொடுக்கப்பட்டு இன விடுதலைக்காக உலகே திகைக்கும் வீரத் தியாகங்களைச் செய்யும் சின்னஞ் சிறு இனமான தமிழ் இனத்திற்கு எதிராகச் செய்த மிகக் கொடிய கோழைத் தனமான செயல். ஆனால் என்ன அநியாயம்! இந்தத் தகவல் நாகரீக உலகின் காதுகளுக்கு எட்டாதவாறு மிக பந்தோபஸ்தாக இந்தியா இந்த அநியாயத்தை மூடி மறைத்து விட்டது இது இந்தியாவின் மிகப் பெரிய இராஜதந்திரம் தான். கபட ராஜதந்திரத்தில் இந்திய அரசுக்கு இணை இல்லை. பாரதத்தின் இழந்த மண்ணை விடுவிக்க வக்கில்லாத இந்திய இராணுவம் கோழைத் தனமாக கோட்டையிலிருந்தும், பலாலியிலிருந்தும், நாவற்குழியிலிருந்தும் மற்றும் பல முகாம்களிலிருந்தும் நாலா பக்கமும் சுழ சுழற்றி குடிமக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீது இருபத்து நாலு மணி நேரமும் ஷெல் அடித்தவண்ணமேயிருந்தது.

மக்கள் திகைத்தார்கள். இந்தியப் படையினர் தமிழ் மக்கள் மீது ஷெல் அடிக்கிறார்கள் என்று கூறினால் நம்பவே மறுத்தார்கள். இந்தியா தமிழ் மக்களின் காவலன் என்றும், தமது விடுதலைப் போராட்டத்துக்குஅனுதாபம் காட்டி உதவி செய்து வரும் நாடு என்று தான் அவர்கள் இது காறும் நம்பியிருந்தார்கள். இந்தியாவும் தன்னை ''நசுக்கப்படும் மக்களின் நண்பன்'' என பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தது தானே! மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் ஒடுக்கப்பட்ட கறுப்பு இன மக்களுக்காகப் விட்ட பின்பு சாட்டுக்காக அதிக விளம்பரமில்லாத குறுகிய அறிவித்தலை இந்தியா செய்தது. மக்களை எல்லோரும் பாதுகாப்பிற்காக யாழ் இந்து மகளிர் கல்லூரி நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆகிய இரு இடங்களுக்குப் போய்ச் சேருமாறு உத்தரவு விடுக்கப்பட்டது. இவ்விரண்டு இடங்களும் யாழ் தீபகற்பத்தில் வாழும் பத்து லட்சத்திற்கு அதிகமான மக்கள் அனைவருக்கும் பொதுவான அகதி முகாம்களாக பிரகடனப்படுத்தப்பட்டன.

இந்திய அமைதிப் படையினரால் நியமிக்கப்பட்ட இடங்களான நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் எத்தனை மக்கள்தங்கமுடியும். காலமோ மழைகாலம். கோவிலின் உள் வீதியில் நூற்றுக் கணக்கில் தான் மக்கள் தங்கலாம். ஆனால் அங்கு வந்த சேர்ந்த மக்களின் தொகை... கணக்கில் அடங்காதது.

இந்த மகளிர் கல்லூரியிலும் சற்றேறக்குறைய அவ்வாறே மலசல கூடங்களில்லை. மருத்துவ வசதிகளைப்பற்றி நினைக்கவும் முடியாது ஒரு ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரிகள், நேர்சுகள் எல்லாம் சுடப்பட்டபின் வைத்தியருக்கு எங்கு போவது? இந்து மகளிர் கல்லூரியில் உள்ள மலசல கூடங்கள் எண்ணிக்கையில் மிகச் சில மட்டுமே. அவையும் அளவுக்கு மீறிப் பாவிக்கப்பட்டதால் அடைபட்டு மேற்கொண்டு பாவிக்க முடியாத நிலை. இந்த நிலைமை பற்றி பெண்களின் சார்பில் ஒரு இந்திய கமாண்டரிடம் மிக மன்றாட்டமாக முறையிடப்பட்ட போது அவர் மிகச் சாதாரணமாக ''இந்தப் பெரிய விளையாட்டு மைதானமிருந்துமா இப்படி குறைபட்டுக் கொள்கிறீர்கள்'' என்று கூறினாரே பார்க்கலாம். அங்கிருந்த தாய்க்குலத்தினருக்கு என்னவோ போலாய்விட்டது. இவர்கள் எங்கள் பெண்களை என்ன நினைத்துக் கொண்டார்கள்?

இது இப்படியிருக்க இந்திய வானொலி, அமைதிப்படையினர் தமது உணவை தாம் உண்ணாமல் தமிழ் அகதிகளுக்கு கொடுத்து தாம் பட்டினி கிடப்பதாக ஒரு செய்தி வெளியிட்டது. இன்னொரு செய்தியில் இந்திய அமைதிப் படைகள் நல்லூர்க் கோவில் பகுதியில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த மக்களுக்கு அமைதிப்படையினர் விமானங்களிலும் ஹெலிகொப்டரிலிருந்தும் உணவுப் பொட்டலங்கள் போட்டதாக இந்திய வானொலியில் ஒரு செய்தியும் கூறப்பட்டது. நல்லூர்கோவிலுக்குச் செல்லுமாறு மக்களைப் பணித்த பின் மக்களைப் பற்றியோ அவர்கள் நலன்கள் பற்றியோ எந்தவொரு கவனமும் இந்திய தரப்பில் எடுக்கப்படவில்லை. அதுவுமல்லாமல், மக்கள் முக்கியமாக குழந்தைகள் உணவின்றிக் கஷ்டப்படுவதாக அமைதிப் படையினரிடம் மக்கள் முறையிடப்பட்டபோது– ''நாங்கள் மட்டுமென்ன, நாங்களும் பட்டினியாகப் பல நாட்கள் உணவின்றித்தான் இருக்கின்றோமென அமைதிப் படை அதிகாரிகள் கூறினர்!

(தொடரும் ...)

## நவ பாரதி

போராடிய நாள் தொடக்கம் சுதந்திரப் போராட்டகால நிகழ்வுகள் யாவும் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் இந்தியாவைப் பற்றி ஒரு பக்தி பூர்வமானஉணர்வையே ஏற்படுத்தி வந்ததும் அல்லாமல் தங்களுக்கு இந்தியாவே தஞ்சம் என்றும் ஒரு நம்பிக்கையையும் வளர்த்திருந்தது. தனது காலைத் தொட்டு பக்தியாக வணங்குமொரு பக்தனின் முதுகில் கத்தியால் குத்தி விட்டது இந்தியா!

மக்கள் நடப்பது இன்னது என்று அறியாது கலங்கிகால் போன திசையில் ஓடத் தலைப்பட்டார்கள். தமிழ் மக்கள் மீது பிரகடனப்படுத் தப்படாத யுத்தம் ஒன்றை இந்தியா கட்டவிழ்த்து

## அப்புக்காத்து ஆறுமுகம்...

**களம் 1**

கரடிப் போக்கில் உள்ள ஒரு கடையில் சுதசாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அது ஒரு காலை நேரம்.

எனது அருகில் ''ஒரிஸா'' புகழ்ப் படைவீரர் ஒருவரும் உணவு அருந்தினார்.

காலைச் சாப்பாட்டிற்காக அவர் செலவிட்ட பணம் ரூபா 55

எனது கணக்கு 4 ரூபா 90 சதத்துடன் முடிவடைந்தது.

**களம் 2**

மாங்குளத்தில் நான் பயணம் செய்த மினி பஸ் வந்து கொண்டிருந்தது.

பஸ்சை மறித்த சில இயக்கங்கள் தலா 50 ரூபாய்களைப் பிரயாணிகளிடம் பறித்தெடுத்தனர்.

இதற்கு அவர்கள் கூறிய காரணம்.

''நாம் நீதியான கொள்ளையர்''

**களம் 3**

## வடக்கு கிழக்கு

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் நிற்பார்கள் என இந்திய இராணுவத்தினர் சொன்னார்கள்.

இந்தியப் படையினர் மேற்கொண்டு இராணுவ நடவடிக்கையில் போது முதலில் மன்னாரைச் சேர்ந்த யோகன் என்ற இளைஞன் பலியானான். இது குறித்து பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் ஜெயக்கொடி அப்போது பின்வருமாறு சொன்னார்.

''யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இந்திய இராணுவத்தால் இந்தியத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் இருந்த நேரத்திலேயே மன்னாரில் அவர்களால் இலங்கைப் பிரசை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சமாதானத்தை ஏற்படுத்த இங்கு வந்தவர்கள் எமது நாட்ட

வம் இரத்தக் கறைபடிந்தகரங்களோடு ஈழத்தைவிட்டு வெளியேறியுள்ளது.

### இந்தியத் தலையீடுகள்

1983 ஆம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்து இந்திரா காந்தி அம்மையார் இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டார். கலவரத்தைத் தொடர்ந்து அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் நரசிம்மராவை (இவர் இப்போது பதவியில்இல்லை.) இலங்கைக்கு அனுப்பிவைத்தார். அதன் பின் இந்திய வெளியுறவு கொள்கை வகுப்பாளர் ஜி. பார்த்தசாரதியை தனது விசேட தூதுவராக அனுப்பி வைத்தார். (இவரை ராஜீவ் ஒதுக்கிவிட்டார்) அமைச்சர் ப. சிதம்பரம் (இப்போது இவர் அமைச்சர் அல்ல) வெளியுறவு அதிகாரி ரொமேஸ் பண்டாரி (இவரைத் தற்போதைய அரசு

டுமல்ல எப்போதுமே பதில் சொல்ல முடியாது.

### அடுத்தது என்ன?

இப்போது இலங்கையரசுடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா? என்பதும் விடுதலைப் புலிகளின் அடுத்த நடவடிக்கை என்ன என்பதும் மக்கள் முன்நிற்கும் கேள்விகளாகும். கடந்த காலங்களில் சிங்களத் தலைமைகளுக்கும் மிதவாதத் தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் கசப்பான அனுபவங்களைத் தந்தது போல மீண்டும் ஒரு நிலை உருவாகுமா? என்றும் மக்கள் அலசி ஆராய்கிறார்கள். இவ்வாறான கருத்து மோதல்கள் ஆரோக்கியமான கருத்து வளர்ச்சிக்கு ஏதுவாக

சேர். ஜோன் கொத்தலாவலையும், சு. நடேசபிள்ளையை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும் ஏமாற்றியது வரலாற்றில் ஜீரணிக்க முடியாத உண்மைதான். தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்த டட்லி. சேனநாயக்கா அதனை நிறைவேற்றத் திராணியற்றவராக அதனைக் கைவிட்டார். டட்லி ஒப்பந்தத்தை கிழித்தமையால் மு. திருச்செல்வமும் ஏமாற்றப்பட்டார். 1981 தொடக்கம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் முதலான மிதவாதிகள் உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இப்பேச்சுவார்த்தைகள் 1983 வரை இடம்பெற்றன. இரண்டு ஆண்டுகளாக இடம் பெற்ற பேச்சுவார்த்தையின்

இவர்கள் யாவரும் பலவீனமான நிலையில் நின்று கொண்டே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதனைச் சிங்களத்தலைவர்கள் புரிந்து கொண்டே ஏமாற்றினார்கள் இந்தக்கசப்பான பாடங்களை நாங்கள் மறந்துவிடவில்லை என தலைவர் பிரபாகரனும், நாங்கள் பலமான கட்டுமானத்தில் நின்று கொண்டுதான் பேசுகிறோம் என தளபதி மாத்தையாவும் கூறியுள்ளார்கள்.

கடந்தகாலமிதவாதத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தும் போது பேச்சு வார்த்தை குழம்பிவிடக் கூடாது என்றும் குழம்பினால் தாம் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்டு விடுவோம். என்ற பலவீனமான நிலையில்

**களம் 3**

இந்திய அமைதிப்படையினர் வெளியேறியதும் காட்டில் இருந்த விடுதலைப் புலிகள் றோட்டில் கால் வைத்தனர். சிலர் சிறிய கொள்கலன்களில் இருந்து நீர் ஊற்றி முகத்தைக் சழுவினர். அவர்கள் மினி பஸ்சை மறித்தனர். அப்போது ஒரு கிழவி ஒரு விடுதலைப் புலிப் போராளியைப் பார்த்துக் கேட்டாள்.

'' தம்பி... காலையில் சாப்பிட்டு விட்டீரா? ''

**களம் 4**

ஓடிய ரயிலைச் சில துப்பாக்கி வாலிபர்கள் மூன்று மாதங்கட்கு முன்பு மாங்குளத்துக்கும் ஓமந்தைக்கும் இடையில் மறித்தனர். இது ஒரு கொள்ளைக் கூட்டமாக இருக்கும் என எண்ணிய பெண்கள் தமது தாலிகள், காப்புக்கள், சங்கிலிகளைக் கழற்றி ஒழித்து வைத்தனர்.

ஆனால் வந்தவர்கள் விடுதலைப் புலிகள் என அறிய மக்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. எப்படி அதை அறிந்தனர்?

(1) துப்பாக்கி ஏந்திய இளைஞர்கள் பனங்கிழங்கு விற்றவரிடம் வாங்கிய கிழங்கிற்குப் பணம் கொடுத்ததே! அடுத்தது சில போராளிகளின் காலில் காற் செருப்புக் கூட இருக்கவில்லை.

களங்கள் 1, 2 ஒரிஸ்ஸா புகழ் வீரர்கட்கும், களம் 3, 4 விடுதலைப் புலிகட்கும் சமர்ப்பணம்.

## “கோணர் கிக்”

**வ**வுனியா மாவட்டத்துக்கு ஈ. பி. ஆர். எல். எப் இணைப்பு அதிகாரியாக இருந்தவர் திரு. பராபரன். 3 நாட்கள் கச்சேரி இயங்கியபோது 5 நாட்கள் இயங்க வழிவகை வகுக்க அவர் முயன்றார்.

தமது பஸ் 5 நாட்கள் ஓடும் என்றும், அந்த பஸ்சில் வந்தால் விடுதலைப் புலிகளையும் சந்திக்கவாம் என்றும் கூறினார். காலம் வேகமாகக் கடந்து போனது. அவர் பஸ்சில் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்?

விடுதலைப் புலிகளை நாம் சந்தித்து இருக்க முடியாது. ஒரிஸ்ஸாவின் பழங்குடி மக்களையே கண்டுமுக்க முடியும்

-அங்கதன்

தவர்கள் எமது நாட்ட வரையே சுட்டுக்கொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இந்திய இராணுவத்தின இந்த அத்துமீறிய செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இலங்கை – இந்திய ஒப்பந்தம் அநீதியையும் மக்களுக்கு அடிமைத்தனத்தையும் ஏற்படுத்தி விட்டது ''

இன்று இந்தியாவுக்கு சென்ற அமைப்படைக்கு வரவேற்புக் கொடுத்த வைபவத்தில் கலைஞர் கருணாநிதி பங்குபற்ற மறுத்துவிட்டார். ஈழத்தில் ஐயாயிரம் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்த இந்தியப் படைக்கு வரவேற்பு கொடுக்க தான் தயாரில்லை எனக் கூறி விட்டார்.

அமெரிக்க இராணுவம் வீர வியட்னாமிய மக்களிடம் தோற்றுநாட்டைவிட்டு வெளியேறியது போல ரஷ்யா இராணுவம் முஜாகுதீன் கெரில்லாக்களிடம் தோற்று அங்கிருந்து வெளியேறியதுபோல இந்தியத் துருப்புகள் விடுதலைப் புலிகளிடம் தோற்று ஈழத்தைவிட்டு வெளியேறியுள்ளனர். அமைதிகாக்கும் படை என்ற பெயரில் வெள்ளைக் கொடியோடு ஈழத்திற்குள் புகுந்த இந்திய இராணு

ரைத் தற்போதைய அரசு அந்தமானுக்கு கவர்னராக நியமித்தது. ஆனால் இவர் இராஜினாமாச் செய்துவிட்டார்.) அமரர் எம். ஜி. ஆர் (முன்னாள் முதல்வர்) தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் (இவரின் தற்போதைய மேல் விலாசம் தெரியவில்லை) இந்துப்பத்திரிகை ஆசிரியர் ராம் (இப்போது இவர் உள்ளூர் விடயங்களோடு நின்று கொள்கிறார்) தூதுவர் டிக்சிற் (இவர் இப்போது பாகிஸ்தானுக்கும் - இந்தியாவுக்கும் பிரச்சினையை வளர்க்கிறார்.) பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் (இவர் இந்திரா காங்கிரசை விட்டே விலகிவிட்டார்.) இவர்களுடன் அமைச்சர் நட்வர்சிங் (இவர் இப்போது எம். பி. யும் அல்ல.) இவர்களோடு குஜீர் ஆலம் கான், பி. ஆர் பசத் சிவசங்கர், சிந்தாமணி பாணிக்கிரகி இப்படி எத்தனை பெரிய மூளைசாலிகள் எல்லாம் இலங்கைப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தப் பட்டனர். 1983 – 1990 வரை இதில் தலையிட்ட பேர் வழிகள் எத்தனைபேர். கடைசியாக இந்தியா பெற்றுக்கொண்ட நன்மைதான் என்ன? இந்தக் கேள்விகளுக்கு இப்போது மட்

கருத்து வளர்ச்சிக்கு ஏதுவாக அமையும் என்றாலும் சில கருத்துக்களைக் கூறுதல் பொருத்தமேயாகும்.

கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைமையை ஏமாற்றியமை வரலாற்றில் கசப்பான உண்மை தான். சேர். பொன். இராமநாதனை பாரன் ஜெயதிலகா ஏமாற்னார். சேர். பொன். அருணாசலத்தை கே. ஜேம்ஸ் பீரிசும், ஜி. ஜி. பொன்னம்பலத்தை டி. எஸ். சேனநாயக்காவும், பேராசிரியர் சுந்தரலிங்கத்தை

ண்டு ஆண்டுகளாக இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பேசும்போது பின்வருமாறு சொன்னார்' கடந்த இரண்டு ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகள் நடத்தினோம். தேனீர் குடித்ததைத் தவிர வேறு பலன் ஏதும் ஏற்பட்டதில்லை என்றார். இதில் அமிர், சிவா மட்டுமல்ல கலாநிதி நீலன் திருச்செல்வம்' கலாநிதி வில்சன் ஆகியோரும் ஏமாற்றப்பட்டனர். இவர்கள் யாவரும் ஏன் ஏமாற்றப்பட்டனர்.

பலவீனமான நிலையில் நின்றுகொண்டு பேசினார்கள் ஆனால் இன்றுள்ள நிலைமையில் இலங்கை அரசாங்கம் தமிழ்த் தீவிர வாத தலைமையுடனான பேச்சு வார்த்தைகள் குழம்பினால் பாரதூரமான விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடும் என்பதில் விழிப்போடு அணுகிக்கொள்கிறது. இன்றைய பேச்சுவார்த்தைகள் பலமான கட்டுமானத்தில்தான் நடைபெறுகின்றது. □


# உதயம் சேர்விஸ் நிலையம்

அதிசிறந்த முறையில் துரிதகெதியில் உங்கள் வாகனங்களை பளிச்சிடும் வண்ணம் சேர்விஸ் செய்யவென யாழ். நகரில் புதிய இயந்திர சாதனங்களுடன் உங்களை எதிர்பார்த்து நிற்கின்றது.

**உதயம் சேர்விஸ் நிலையம்**
(சட்டநாதர் சிவன்கோவில் அருகாமை)
**கல்வியங்காடு.**

B.448



மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

## கிளிநொச்சி மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள், கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பணக் கரும பீடத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|---|
| 1. | பரந்தன் கிளை | (1989. 09. 27 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990. 04. 02<br>1990. 04. 03 | திங்கள்<br>செவ்வாய் |
| 2. | கிளிநொச்சிக் கிளை | (1989. 06. 23 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990. 04. 04 | புதன் |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8. 30 மணி தொடக்கம் நண்பகல் 1. 00 மணி வரை அடகு நகைகளை மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமூகம்தந்து நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி.
பிராந்தியத் தலைமையகம், யாழ்ப்பாணம்.
(B/458)

# இலக்கியத்தடம்

இளங்கவிஞரான சார்ள்ஸ் எழுதிய ஏழு கவிதை நூல்களின் அறிமுக விழா அண்மையில் நடைபெற்றது. இளம் வயதினரான அவரின் முயற்சியும் ஆர்வமும் பாராட்டுக்குரியது.

நமது அறிமுக விழாக்கள், விமர்சன அரங்குகளில் பொதுவாக ஒரு வியாதி உள்ளது. மாறாத தன்மை உள்ளதாக விளங்கும் அதுதற்போதைக்கு குறையும் அறிகுறிகூட இல்லை.

மேடையில் ஏறுபவர்கள் அவர்கள் எந்தப்பேச்சை நிகழ்த்துபவர்களாக இருந்தால் என்ன (வரவேற்புரை, தலைமை உரை, ஆய்வுரை, விமர்சனஉரை, வெளியீட்டு உரை, வாழ்த்துரை வகைகள்) தாங்கள் வந்த நோக்கம், எடுத்துக்கொண்ட பொருள், என்பதையெல்லாம் மறந்து போய், தேவையில்லாத சங்கதிகளையெல்லாம் பேச்சில் கொண்டு வருகின்றார்கள்.

விமர்சன உரை ஆற்ற வந்தவர்கள் தாங்கள் எடுத்துக் கொண்ட பொருள், அதனோடு தொடர்பாக சில கருத்துக்களைச் சொல்வது தான் பொருத்தமான செயலாகும். அதனால் சம்பந்தப்பட்ட நூலாசியருக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் உபயோகமாக இருக்கும். ஆனால் யாருமே அப்படியும் நடப்பதாக இல்லை.

சார்ள்ஸ் இன் கவிதைநூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்திய பலரும் இவ்வாறு எடுத்துக்கொண்ட பொருளை விட்டுவிட்டு எங்கேயோ நின்றார்கள். தனியே சார்ள்ஸ்சின் கவிதைநூல் அறிமுக விழாவில் மட்டும் இப்படி நடப்பதில்லை. எந்த இலக்கியக் கூட்டமாக இருந்தாலும் நிலைமை இதுதான்.

மேடையில் ஏறி இலக்கிய ஆர்வலர்களை அல்லது இரசிகர்களை (?) சிரிக்கவைத்து விட்டால் போதும் என்று நினைப்பவர்கள் தாங்கள் எளிமையாகப் பேசுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் சிரிக்க மட்டும் வைத்தால் போதுமா? அல்லது எவ்வளவு காலத்திற்கு சிரிக்க வைப்பது?

சமீப காலமாக பல்கலைக் கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்களைப் பற்றியும் அவர்களது ஆய்வுரைகள், ஆராய்ச்சிக்கட்டுரைகள் பற்றியும் ஆராய்ச்சிகட்டுரைகளில், அவர்கள் குறிப்பிடும் அடிக்குறிப்புக்கள் பற்றியும் கொச்சத்தனமாக சிலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். இதன் பின்னணி என்ன?

இவ்வாறு மட்டம் தட்டி அல்லது கேலியாக பேசினால் தான் தங்களைத் தாங்கள் உயர்த்திக் கொள்ளமுடியும்? என்று நினைக்கின்றார்களா?

சார்ள்ஸின் கவிதைநூல்கள் ஏழில் உண்மையில் ஐந்து தொகுப்புக்கள்தான் என்றும், மூன்று நூல்களைச் சேர்த்து ஒன்றும், இரண்டு நூல்களைச் சேர்த்து மற்றொன்றுமாகவே ஏழு என்றும் கூறப்படுகிறது. இது உண்மையா?

கவிதை நூல்களின் விலைகள் மிகமிக அதிகம். மிகக் குறைந்த பக்கங்களில் வெளிவந்த கவிதை நூல்கள் ஏன் இவ்வாறு அதிகவிலையில் விற்கவேண்டும்?

□

## □ கணையாளி சஞ்சிகையில் சுஜாதா

"நம் தமிழ் வார மாதப் பத்திரிகைகளின் தாத்தைப் பற்றி வருத்தப்பட வேண்டியது படித்தவர்களின் பொறுப்பு. ஒரு முக்கியமான தமிழ்ப் பத்திரிகையில் வெளியான சிறுகதையின் ஆரம்பம் இப்படி:

சாப்பிட்ட களைப்பால் சோபாவில் சாய்ந்திருந்த சேகரை மெல்லத் தோளில் தொட்டாள் உஷா. தொடர்ந்து இந்தாருங்கள் என்று அழைத்தாள்.

உஷா மேலே என்ன செய்தாள் என்று நமக்கு ஆர்வம். இந்த ஒரு ஆங்கிலக் கதையின் ஆரம்பத்தை ஒப்பிடலாம்.

தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த அந்த ஆசாமிக்கு ஒரு தலை இல்லை.

இந்த ஆரம்பம் திடீரென்று நம்மைக் கவர்கிறது. மேலே அவசரப்பட்டுப்படிக்கிறோம். இம்மாதிரி துவங்கி எப்படி ஆசிரியர் தப்பிக்கப் போகிறார் என்று. இப்படித் தப்பிக்கிறார்.

"தலை இல்லை என்றா சொன்னேன்? மன்னிக்கவும் எனக்கு ஞாபக மறதி அதிகம். ஒரு கை இல்லை. அவனுக்கு எப்படியோ உங்களைக் கதைக்குள் இழுத்து விட்டார்.

தமிழில் நல்ல சிறுகதைகளே இல்லை என்று சொல்ல வரவில்லை. என் வருத்தம் ஏன் இப்போது கு. அழகிரிசாமியின் "ராஜா வந்திருக்கிறார்" கு.ப.ராஜகோபாலனின் "விடியுமா?" போன்ற கதைகள் வருவதே இல்லை என்பதுதான்.

## "அழலாடிக்குட்டன்"

## □ பேராசிரியர் கைலாசபதி இலக்கிய கர்த்தாக்கள் பற்றி:

தனிப்பட்ட ஒரு எழுத்தாளன் காதல், புகழ், பணம், சமய நம்பிக்கை, அரசியல் சமூக பாடு முதலிய பல்வேறு காரணங்களில் ஒன்றோ பலவோ உந்துவதால் எழுதுகிறான்.

எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப்பிராணி. சமுதாயத்தில் எல்லாக் காலங்களிலும் முரண்பாடுகளும் போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான். இந்நிலையில் மூன்று நிலைப்பாடுகளைப் பொதுவாக எழுத்தாளரிடையே காணக்கூடியதாய் உள்ளது,

ஒரு பிரிவினர் பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் துன்பதுயரங்களையும் எதிர் நோக்காதவராய் அவற்றுடன் சம்பந்தப்படாமல் இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு அதற்கியையக் கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும் உணர்ச்சிகளையும் இலக்கிய மாக்குபவர்கள் வாழ்க்கை பலருக்குத் துன்பமாயுள்ளது. எனவே துன்பத்தின் மத்தியில் துளி நேர மாற்றத்தை அளிப்பதாய் கற்பனையிலேனும் கணிப்பையும் கவர்ச்சியையும் நாம் கொடுத்து உதவ விரும்புகிறோம். இவ்வாறு அவர்கள் கூறுவர். நடைமுறையில் பெருவணிக நிறுவனங்களின் குரலாகவே இது இருப்பதைக் கண்டு கொள்ள அதிக நேரம் பிடிக்காது.

இன்னொரு பிரிவினர் சமுதாய முரண் பாடுகளையும் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு நோக்கி அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பவர்கள் சமுதாயத்திலே பரவலாய்க் காணப்படும் துன்ப துயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அனுதாபத்துடன் பார்க்கும் இப் பிரிவினர் முந்திய பிரிவினரோடு ஒப்பு நோக்குமிடத்து தம்மை சுற்றியுள்ள யதார்த்தத்தை எதிர் நோக்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. அதாவது முதற் பிரிவினர் பிரச்சினைகள் இருப்பதையே எழுத்தில் பிரதிபலிக்கவில்லை. அப்பிரச்சினை இலக்கியத்துக்கு உகந்த உரிய பொருள்கள் அல்ல- என்னும் கருத்தைக் கொண்டவராய் உள்ளனர். இரண்டாவது பிரிவினர் சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம் பெறுவதை ஏற்றுக் கொள்கின்றனர்.

சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி அதனை மாற்றி அமைக்கும் பணியில் பங்கு பற்றுவதுடன் அப்பணி வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக் கொள்வதும் இன்றைய தேவையாகும் என வற்புறுத்து வோரே மூன்றாவது பிரிவினர் ஆகும். இவ் வார்த்தை இலகுவில் ஒதுக்கி விட முடியாது. அனுபவமும் அனைத்துலகப் போக்கும் இவ் வாதத்துக்கு அரண் செய்வனவாகவே உள்ளன.

□

## □ நல்ல கவிதை எது?

நல்ல கவிதை எது என்பது பற்றி மலையாளக் கவிஞர் அய்யப்பப் பணிக்கரின் கருத்து
( நன்றி : கலைச்சுவடு )

"நல்ல கவிதை என்று ஒன்று இல்லை என அறிவித்து ஒருவன் இக் கேள்வியிலிருந்து தப்பித்துக் கொண்டு விட முடியுமா? அவ்வாறு ஒருவன் உண்மையாகவே உணர்ந்தான் என்றால் அப்படிச் செய்யலாம் தான். ஆனால் நல்ல கவிதைகள் இருக்கின்றன சந்தேகம் இல்லை. நல்ல கவிதைகளுக்குரிய வரையறைகள் சார்ந்த எண்ணங்களுடன் அவை ஒத்துப்போகாதவை என்பதால் தரமானவையாக அவை ஏற்றுக் கொள்ளப் படாமல் இருக்கலாம். பிடித்து வைக்கப்பட்ட எல்லா வரையறைகளையும் மீறுபவைதான் நல்ல கவிதை என்றுகூடச் சொல்லிவிடலாம் வரையறுக்கப் பட்டபின்பு தானே வரையறை சார்ந்த அளவு கோல்கள் உருவாகின்றன மேலும் வரையறைகளும் அப்படி ஒன்றும் உறுதியானவையும் அல்ல நல்ல கவிதை பற்றிய சிந்தனை வழுக்கிக் கொண்டு போகக் கூடியது. அக்கவிதை களைப் போலவே

ஒவ்வொரு நல்ல கவிதையும் ஒரு புதிய விடைபெறுதல் வேறு எந்த கவிதைக்கும் செல்லுபடி ஆகாத ஒரு புதிய வரையறை அது உருவாக்குகிறது எண்ணற்ற கவிதைகளுக்கு ஒரு வரையறை செல்லுபடி ஆகுமென்றால் அது அதிகம் பொதுமைப்பட்டு உபயோகம் இல்லாமலே போய் விடும். கவிதையில் வரையறைகளை தேடுபவர்கள் நிச்சயம் தோற்றுப் போவார்கள்.

ஒரு நல்ல கவிதை சுயமானதாக இருக்க வேண்டும் என்று சொல்லலாம். அது ஒருமோசமான கவிஞனை ஆசை காட்டி ஏமாற்றும் அது ஒரு நல்ல வாசகன் மனதில்- சஹிருதயன் மனதில் - அதை அவன் சவனிக்கும் முன்னரே விர்ரென்று புகுந்து விடும்.

சுருங்கக்கூறுவது எனில் ஒரு நல்ல கவிதை நல்ல கவிதையாக இருக்க வேண்டும்.

□

## அபிவிருத்தி விவசாயம்

### சென்ற வாரத் தொடர்ச்சி ..,...

### பொறியியல் முறை

பொறியியல் முறையிலான சட்டுப்பாடு என்பது இயந்திரங்கள் அல்லது உபகரணங்களின் பொறிமுறையால் உருவாகும் சக்தி அல்லது இவை இரண்டும் சேர்ந்து தொழிற்படுவதன்மூலமும் பீடைகளின் பரம்பலை கட்டுப்படுத்தும் ஒரு நிகழ்வாகும். இந்த இயந்திரங்கள் அல்லது உபகரணங்கள் வலுவில் இயக்கப்படுபவையாகவோ அன்றி உயர் தொழில் நுட்பத்தால் இயங்குபவையாகவோ அன்றி மிகவும் எளியவைகளால் இயக்கப்படக் கூடியவையாகவோ இருக்கலாம்.

(அ) உணவுப் பொறிகள்

நெற்பயிர், கிழங்குவகைகள் போ[illegible]றவற்றில்சேதங்களை

திரும்ப ஏற்படும் செலவுகள் தேவையில்லை.

2. நிரந்தரமான ஒரு கட்டுப்பாட்டினைப் பெற முடியும்.

3. பீடைகள் எதிர்ப்புத் தன்மையுடையனவாக மாறுதலும், சூழல் மாசடைதலும் தவிர்க்கப்படுகின்றன.

ஆனால் இம்முறையில் எல்லாப்பீடைகளிற்கும் பொருத்தமான இயற்கை எதிரிகள் இல்லை. அத்துடன் அதிக முதலீட்டை வெற்றியைப் பற்றி எந்தவித உத்தரவாதமும் இன்றி இடவேண்டியுள்ளது.

உயிரியல் முறையிலான கட்டுப்பாட்டிற்கு பின் வரும் சில

### ஏனைய முறைகள்

இவற்றைவிட சட்டத்துணைமுறை, நவீனமுறை என்பனவற்றின் மூலமும் பீடைகள் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

அ) சட்டத்துணை முறை

சட்டத் துணை முறையில் பிற நாடுகளில் இருந்து நம் நாட்டிற்கு தரைமார்க்கமாகவோ அன்றி கடல் மார்க்கமாகவோ அன்றி ஆகாய மார்க்கமாகவோ பூச்சி பீடைகள் பொருட்களுடன் வந்து சேர்வதைக் கட்டுப்படுத்தலாம். தமது நாட்டிற்குள் குறித்த ஓரிடத்தில் பூச்சி பீடைகள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு பெருகிவிளை பொருட்களைப்பாதித்தால் பதார்த்தங்களில் நச்சுத்தன்மை உண்டாதல், இரசாயனங்களிற்கு சகிப்புத்தன்மை கொண்டனவாக பீடைகள் மாறுதல் இரசாயனங்களிற்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட புதிய குலவகைகளின் தோற்றம், சூழல் மாசடைதல் போன்றன உருவாகியுள்ளன. அத்துடன் இன்று அதிகரித்துச் செல்லும் இரசாயனங்களின் விலையினால் பயிர் பாதுகாப்பில் இரசாயன முறையிலான கட்டுப்பாடு சிக்கனமற்றது எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இது சார்பாக ஏற்படும் ஆபத்துக்கள் இனியும் புறக்கணிக்க முடியாதவை, தவிர்க்க முடியாதவை என உணரப்பட்டு 1980 இல் அதி கூடிய

□□□□□□□□□

## விண்வெளி விஞ்ஞானம்

வெள்ளிக் கிரகத்தின் தரைப்பிரதேசம் உஷ்ணம் கூடியது என்ற எண்ணம் வெறும் ஊகமாக இருக்கலாம். வெள்ளியில் இருந்து வந்த நீளம் குறைந்த மைக்ரோ அலைகளை ஆராய்ந்து உஷ்ணத்தைக் கணித்தபோது சூழலின் அடிப்பாகத்து உஷ்ணம் 170 பாகை F ஆக இருக்கலாம் என ஊகிக்கப்பட்டது. அதனுடைய தரைப்பகுதிகூட, ஏறத்தாழ இதே உஷ்ண முடையதாக இருக்கலாம் எனக்க




அந்தக் கிரகத்தை ஆராய்ந்தது அந்த விண்கலத்திலே மைக்ரோ அலைகள், அகச்சிவப்பு ஒளிக்கதிர், ஆகியவற்றை எல்லாம் அளந்து கணக்கக்கூடிய நுணிய கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன மூன்று கோடியே எழுபது லட்சம் மைல்களுக்கு அப்பால் உள்ள பூமிக்கு இத்தகவல்களை - மரீனர்-2 அனுப்பிவைத்தது. வெள்ளியைப்பற்றி மேலும் பல விபரங்களை அறிந்து கொள்ள உதவியது.

[illegible]தையில் கிடைத்த அலைகளின் அளவு குறைவாகவும் இருந்தது வெள்ளியின் தரைப் பகுதி உஷ்ணமானது என முடிவு செய்யப்பட்டது.

வெள்ளி குளிர்ந்த சுவாத்தியம் உடையது என்றால் அதனுடைய அயன மண்டலம் தடிப்பாக இருக்கும். தடிப்புள்ள அயன மண்டலத்தின் ஊடாக வரும் சாய்வான மைக்ரோ அலைகளின் அளவும் அதிகமாக இருக்கும். நேர்ப் பாதையில் செங்குத்தாக வரும் மைக்ரோ அலைகளின் அளவு குறைவாக இருக்கும் மரீனர்- இரண்டு அளித்த தகவல்களின் படி - நேராகக் கிரகிக்கப்பட்ட அலைகளின் அளவு அதிகமாகவும், சாய்வான பாதையில் கிடைத்த அலைகளின் அளவு குறைவாகவும் காணப்பட்ட படியி

# ஒருங்கிணைந்த பீடை நோய் கட்டுப்பாடு

● பொன்னுத்துரை பாலகுமார்

டோ றனவற்றில்சேதங்களை ஏற்படுத்தும் எலிபோ றவற்றைக் சட்டுப்படுத்த உணவுப் பொறிகள் பயன்படுகின்றன.

**(ஆ) ஒளிப் பொறிகள்**

ஒளிப் பொறியானது பிரகாசமான ஒளியை உருவாக்கும் பகுதியையும், அதனைச் சூழ நீர் கொண்ட கொள் கலங்களையும் கொண்டிருக்கும் இவற்றை இரவிலேயே பாவிக்க முடியும். பிரகாசமான ஒளியினால் கவரப்படும் பூச்சிகள், பீடைகள் தண்ணீரிற்குள் அகப்பட்டுக் கொள்கின்றன. அண்மையில் இந்தியாவில் பல்வேறு நிற ஒளிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலிருந்து வெண்ணிற ஒளிப்பொறியிலேயே கூடுதலான பூச்சிகள் கவரப்படுவது அறியப்பட்டுள்ளது.

**(இ) கைகளால் அழித்தல்**

கைகளால் புழுக்களின் முட்டைக் குவியல்களையும், முதிர் பருவ பூச்சி புழுக்களையும் கைகளால் அழித்தல் வினைத்திறனான ஒரு முறையெனலாம். உதாரணமாக பழ ஈயினால் தாக்கப்பட்ட பூசனிக் குடும்ப தாவரக்காய்களை காய்துளைப்பானால் தாக்கப்பட்ட சத்தரிக் காய்களையும் கைகளால் தாவரத்திலிருந்து பிரித்து அழிப்பதன் மூலம் அவற்றின் பரம்பலைத் தடுக்கலாம்.

## உயிரியல்முறை

உயிரியல் முறையிலான கட்டுப்பாடு என்னும் போது ஒட்டுண்ணிகள், இரை கவ்விகள் நோயாக்கிகள் போன்றனவற்றைப் பாவித்து பீடைகளின் தொகையைக் குறைத்தலாகும். இக் கட்டுப்பாட்டுமுறையினால் குறித்த பீடைகளின் கூட்டங்களே தாக்கப்பட்டு அழிக்கப்படும். இதனால் ஏனைய நன்மை பயக்கும் உயிரினங்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. இம் முறையிலான சட்டுப்பாட்டில் காணப்படும் நன்மைகள்.

1. இம்முறையில் திரும்பத்

உதாரணங்களைக் கூறலாம். 1. சில குளவிகள் பழ மரங்களைத் தாக்கும் செதிற் பூச்சிகளை அழித்து விடுகின்றன. 2. தென்னையில் இலைச் சுருங்கியான புரோமோத்திக் காமுகுஞ்சி, டிமோக்கியாய வாணிக்காவினால் வெற்றிக்கரமாக அழிக்கப்படுகிறது.

## இரசாயன முறை

இரசாயன முறையிலான சட்டுப்பாடு என்பது சேதன அல்லது அசேதன இரசாயனங்களின் சேர்க்கைகளை பயன்படுத்தி சட்டுப்பாட்டினை மேற்கொள்வதாகும். இவ் இரசாயனங்கள் தூள்களாக சிறுமணிகளாக (குறுணல்) திரவ இரசாயனங்களாகக் காணப்படுகின்றன. நமது நாட்டில் பெருமளவில் உள்ள இரசாயனங்கள் திரவ நிலையிலேயே காணப்படுகின்றன.

இரசாயன முறையிலான சட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் போது பல விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

அ) சிபார்சு செய்யப்பட்ட மருந்தை சிபார்சு செய்யப்பட்ட அளவில் கலந்து விசிற வேண்டும்.

ஆ) காலை அல்லது மாலை நேரங்களில் பயிர்கள் நன்கு நனையும் படி இலைகளின் கீழ் புறமும் மேற்புறமும் நனைய விசிற வேண்டும்.

இ) விசிறும் போது தெளிகருவியின் பீச்சுமுனையை பயிரின மேற்பரப்பிலிருந்து ஏறத்தாள 1—1 1/2 அடி தூரத்தில் மடித்து விசிற வேண்டும்.

அப்பகுதியை தடைசெய்யப்பட்ட பிரதேசமாக்கி அவற்யும் றின் பரம்பலைத் தடுக்க முடி 1924ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டம் நம்நாட்டில் இதற்கு வழிவகுக்கின்றது.

**ஆ) நவீன முறை**

இதில் பெண்பூச்சியின் இனவிருத்திக்கான சுரப்புகளை உபயோகித்து ஆண் பூச்சிகளை கவர்ந்து அழிப்பதன் மூலம் பூச்சிபீடைகளைக் கட்டுப்படுத்தலாம்.

## ஒருங்கிணைந்த முறை

மேற் கூறப்பட்ட முறைகள் மூலம் பீடை நோய்ப் பரிபாலனத்தைமேற்கொள்ள முடியுமாயினும் இன்று பெரும்பாலும் இரசாயனமுறை மூலமாகவே நமது பிரதேசங்களில் பீடை நோய்கள் சட்டுப்படுத்தப்படுகின்றன. இம்முறையால் ஒரே பாதிரியான பூச்சிகள், பீடைகள், நோய்கள் என்பனவற்றைக் கட்டுப்படுத்த ஒரே இன நாசினியையோ அன்றி ஒரே தொழிற்படு முறை கொண்ட நாசினியையோ விசிறும் போது அந் நாசினிகளிற்கு கட்டுப்பட்டு அழியாது அவற்றிற்கு எதிர்ப்புத்தன்மையைக் காட்டத் தொடங்குகின்றன. இந்நேரத்தில் விவசாயிகள் சிபார்சு செய்யப்பட்ட அளவிலும் கூடுதலான அளவை எந்தவித ஆலோசனைகளுமின்றி விசிறலிற்கு பயன்படுத்தக் தொடங்குகின்றனர். அது மட்டுமன்றி அடுத்தடுத்த விசிறல்களிற்கு சிபார்சு செய்யப்பட்ட கால இடைவெளிகளை நீக்கிவிட்டு குறுகிய காலத்தில் திரும்பவும் விசிறுகின்றனர்.

இதன் விளைவாக உணவுப் நச்சுத்தன்மை வாய்ந்த பூச்சி நாசினிகளின் பாவனையைக் கட்டுப்படுத்த பூச்சி நாசினி தடை கொல்லிச் சட்டம் உருவாக்கப்பட்டது.

ஒரு பயிரை பல பூச்சிகள், பீடைகள் நோய் விளைவிக்கும் அங்கிகள் தாக்கலாம். அவை எல்லாவற்றையும் ஒரே நுட்பத்தினால் கட்டுப்படுத்த முடியாது. பல நுட்பங்களைப் பாவித்தே கட்டுப்படுத்தலாம். இந்த வகையில் ஒருங்கிணைந்த பீடை நோய்ப்பரிபாலன முறைகள் சிறந்ததொரு தொழில் நுட்பமாவதுடன் இன்று முன்னிடத்தையும் பெற்றுள்ளன.

இன்று நெற்செய்கையில் ஆராச்சிப் பிரிவானது ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டின் மூலம் பீடைகள் நோய்களை கட்டுப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்துகின்றது. காலப் போக்கில் இது பிரதான உப உணவுப் பயிர்களிலும் கையாளப்படலாம்.

பண்பாட்டு முறை, பொறியியல் முறை, உயிரியல் முறை இரசாயன முறை போன்ற கட்டுப்பாட்டு முறைகளின் பலவற்றிலும் மிகவும் உகந்த இணையக் கூடிய முறைகளை ஒன்றிணைத்து ஒரு திட்டமிட்ட அட்டவணையைக்கையாண்டு பயிருக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், பீடைகள் நோய்காவிகளை பொருளாதாரத்தாக்க மட்டத்திற்கு கீழ் வைத்திருக்கும் ஒருங்கிணைந்தபீடை நோய் பரிபாலனத்தினால் வெற்றிகரமாக கட்டுப்பாட்டினை மேற் கொள்ளலாம் என்பதுடன் இன்றைய விவசாயத் துறையின் தேவையுமாகும். □

னுடைய தரைப்பகுதிகூட, ஏறத்தாழ இதே உஷ்ண முடையதாக இருக்கலாம் எனக்கணித்தனர். பூமியின் உஷ்ண அளவோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, 170 பாகை F சகிக்கமுடியாத —தாங்கமுடியாத உஷ்ணமாகவே தோன்றும். ஆனாலும், பூமியில் தோன்றியது போல வெள்ளியிலும் உயிரினம் தோன்றுவது அசாத்தியமான காரியம் அல்ல மேலும், வெள்ளியின் சில பகுகிகள் விசேஷமாக துருவப் பகுதிகள் ஓரளவு குளிரான பிரதேசங்களுக்கு இருக்கக் கூடும். பூமியில் காணப்படும் உயிரினங்கள் போன்றவை வெள்ளியிலும் - அதன் துருவப் பகுதிகளிலே- தோன்றி வாழ்ந்துகொண்டிருக்க கூடும் என ஒருகாலத்தில் அபிப்பிராயப் பட்டார்கள்.

மனிதனுடைய நம்பிக்கை மிகுந்த சிந்தனை வெள்ளி, குளிரான -மக்கள் வாழ்வதற்கு இனயவான ஒருகிரகம் என நம்பவே விரும்பியது. பல வருடங்களாக அப்படித்தான் நம்பிவந்தனர். வெள்ளியானது சம சீதோஷ்ண நிலை உள்ள ஒரு கிரகம் என்றும், மிகப் புதுமையான, அழகிய தாவர வர்க்கங்களையும், மிருக வர்க்கங்களையும் கொண்டது என்றும், அதனுடைய முகிற்படலம் பிரகாசமானது என்றும் நம்பி வந்தார்கள். பூமிக்குச் சமீபத்திலே, அதனுடைய அயற்கிரகமாக விளங்கும் வெள்ளி உஷ்ணம் மிகுந்த கிரகம் என்றோ உயிர்கள் தோன்றி, வாழ முடியாத ஒரு கிரகம் என்றோ நம்புவதற்கு ஒரு சிலர் மட்டுமே தயாராக இருந்தனர். பெரும் பான்மையானவர்கள் வெள்ளி பூமியை எல்லாவகையிலும் ஒத்த ஒரு கிரகமென்றே நம்பி வந்தனர்.

1962 ஆம் ஆண்டிலே மரீனர் -2 என்ற அமெரிக்க விண் கலம் 109 நாட்கள் பிரயாணம் செய்து வெள்ளிக்குச் சமீபமாகச் சென்று - 21,600 மைல் சமீபமாகச் சென்று வெள்ளியைப்பற்றி மேலும் பல விபரங்களை அறிந்து கொள்ள உதவியது.

வெள்ளி, உஷ்ணம் கூடிய கிரகமா? அல்லது குளிரான கிரகமா? என்பதை ஆராய்ந்து தீர்மானிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட உபகரணம், வெள்ளியின் அயனமண்டலத்தில் இருந்து வரக்கூடிய அலைகளைக் கவரும்வகையில் கிர

உடுவில் விவியன் நமசிவாயம்

கிக்கும் வகையில் அமைந்திருந்தது. வெள்ளியின் சூழலில் இருந்து நேராக செங்குத்தாக வரும் அலைகளையும், சூழலின் மறுபகுதிகளில் இருந்து சாய்வாக வரும் அலைகளையும் இந்தக் கருவி கிரகித்துக் கணித்தது. சாய்வாக வரும் அலைகளின் பாதை நீண்டபாதை அயனமண்டலத்தின் பெரும்பாலான கூடிய பிரதேசத்தின் ஊடாக இப்பாதை இருக்கும். வெள்ளி குளிர்ந்த சுவாத்தியம் உடையது ஆயினும், அதனுடைய அயனமண்டலம் தடிப்பாக இருக்கும். தடிப்பான அயனமண்டலத்தின் ஊடாக வரும் சாய்வான அலைகளின் அளவும் அதிகமாக இருக்கும். நேர்ப்பாதையில் செங்குத்தாக - வரும் அலைகளின் அளவு குறைவாக இருக்கும்.

மரீனர் - 2 அளித்த தகவல்களின்படி நேராகக் கிரகிக்கப்பட்ட அலைகளின் அளவு அதிகமாகவும் சாய்வானபா

வான பாதையில் கிடைத்த அலைகளின் அளவு குறைவாகவும் காணப்பட்ட படியினால், வெள்ளியினுடைய அயனமண்டலம் தடிப்பானதும் அல்ல, அங்கிருந்து மைக்ரோ அலைகள் புறப்படவும் இல்லை என்பது தெளிவாயிற்று. ஆகையால், வெள்ளியின் முகிற்படலத்துக்குக் கீழ் உள்ள அதன் தரைப் பகுதி குளிரானது அல்ல என்பதும் நிச்சயமாக முடிவு செய்யப்பட்டது.

வெள்ளியின் தரைப் பிரதேசத்தில் பெரும் பகுதி சிவந்து – தகதகவென ஜொலிக்கும் உஷ்ணம் உடையது. 1967 இல் மரீனர்–ஐந்து வெள்ளியை ஆராய்ந்தது. அதிலே பொருத்தப்பட்ட மிக நுண்ணிய, நுட்பமான கருவிகளும் இந்த முடிவை உறுதிப்படுத்தும் தகவல்களைத் தந்தன. 1967 இல் சோவியத் விண் கலம் 'வெனரா–நான்கு' வெள்ளிக்கு அனுப்பப்பட்டது. இது, வெள்ளியின் சூழலுக்குள்ளே, ஒரு கலசத்தை இறக்கியது. வெனரா–நான்கு, ரேடியோ மூலமாக உஷ்ண நிலையை அறிவித்தது. இந்தக் கலசம் அனுப்பிய அளவுகளின் படியும் – வெள்ளியின் தரைப் பிரதேசம் உஷ்ணம் குறைந்ததாகவோ– குளிரான

(4ஆம் பக்கம் பாரக)

□ 'விண்வெளி வினோதம்' தொடர் முன்னர் ஈழமுரசு வாரமலரில் வெளியான விஞ்ஞானக் கட்டுரையின் தொடர்ச்சியாகும்.

□ பலரினதும் வேண்டுகோளிற்கிணங்க இவ் வாரத்தில் இருந்து இக்கட்டுரை தொடர்கிறது.

□ விஞ்ஞான ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்கும் உபயோகமான பல தகவல்களை இக்கட்டுரைத் தொடர் தரவுள்ளது.

## சென்ற மாதம் 23ஆம் திகதி மக்கள் எழுத்தாளர் கே. டானியல் அவர்களது நான்காவது நினைவு தினமாகும்..

# இலக்குத் தவறாத இலக்கியவாதி தோழர் கே. டானியல்



"டானியல் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துடையவர்." என்ற பிழையான கருத்து ஒரு சிலரால் கூறப்பட்டு வருகின்றது.

ஆனால் அவர் மனிதருக்குள் கூறுகளைப் பிரித்துப் பார்த்து சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளைப் போதிக்கும் கருத்துக்கும், நடைமுறைக்கும் எதிரானவர் என்பதுதான் சரியானது.

டானியலின் இறுதிக் காலத்தில் அவரால் படைக்கப்பட்ட போராட்ட நாவல்கள் எனப் பெயர் பெற்ற 'பஞ்சமர்', 'கோவிந்தன்', 'அடிமைகள்' 'கானல்' போன்ற நாவல்கள் சாதிப் பிரச்சினைகளை முன்வைத்து எழுதப்பட்டன வற்றைக் காரணம் காட்டியே அவ்வாறு அவரது எழுத்துக்கள் கொச்சைப் படுத்தப்பட்டு வந்தன.

அவரது இளமைக்கால அனுபவங்கள் சாதி அடக்கு, ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அந்த மக்களுடன் ஒருவராகத் தானும் சேர்ந்து போராடிய தன் நிமித்தம் நாவல்களாகத் தோற்றம் பெற்றன. அவையும் விடுதலைப் போராட்ட நாவல்கள் என்பது தெளிவு.

அவரது நாவல்களின் வீரியத்தையும், வெற்றியையும் எதிர் கொள்ளும் ஒருசிலரால் மட்டம் தட்டுவதற்காக முன் வைக்கப்பட்ட கருத்துக்களே அதுவாகும்.

"தமிழர்களின் நிகழ்கால பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு சாதிப் பிரச்சினையைத்தான் உங்களால் எழுத முடிகிறது".

மேற்கண்ட கூற்றில் ஒரு பக்க நியாயம் தெட்டெனத் தெரிவதை அவதானிக்கலாம். அவருடைய அனுபவங்களை வைத்து படைக்கப்பட்ட சிருஷ்டியை உகந்த முறையில் மதிப்பீடு செய்வதை விட்டு அந்த அனுபவங்களுக்கு உட்படாத ஒருவரை நோக்கி இதுபோன்று அதைச் செய்தாலென்ன என்று கேட்பது தமிழில் உள்ள ஒரு பழமொழியை நினைவூட்டவில்லையா?

"மக்களிடமே படிக்கவேண்டும்; அவர்களிடம் படித்ததை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டும்." என்னும் கோட்பாட்டை இலக்கிய வழியாக வரித்துக் கொண்டிருந்த டானியல் மிக நீண்ட ஆயுள் உள்ள ஒரு மனிதராக எப்படி இருக்க முடியும்?

அப்படி அவர் உயிர் வாழ்ந்திருந்தால் நிச்சயமாக அவரது பேனாவுக்கு உள்ளிருந்தும் நிகழ்கால போராட்ட இலக்கியம் பிறந்திருக்காது விட நியாயமில்லை.

எனினும் டானியல் மேற் குறிப்பிட்ட குற்றச்சாட்டை சுமத்தும் போதெல்லாம் மிகத் தெளிவாக அவர்களுக்கு பதில் தெரிவித்து வந்திருப்பதும் அவரத இலக்கியக் கோட்பாட்டில் இம்மியும் பிசகாத தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம்.

"சாதிப்பிரச்சினை தமிழர்களின் நிகழ்காலப் பிரச்சினை இல்லையா? சாதிப்பிரச்சினை தமிழனின் அன்றாடப் பிரச்சினை. முற்றிலும் முற்றத்தில் நடக்கும் பிரச்சினை. தமிழர்களாக இருக்கும் ஒரு பகுதித் தமிழர்களைத் தமிழர்களாக அங்கீகரிக்கும் [illegible]ச்சினை. இதை ஒப்புக்கொ[illegible]ளப் பிடிவாதமாக மறு[illegible]கும் மனித நேசமற்ற நோயாளர்களின் மனதை எனது பேனா பு[illegible] படுத்துமானால் நான் சரியானதையே செய்கிறேன் என்பதுதான் அர்த்தம்." (தாரகை இதழ் 12 ஜூலை செப்ரம்பர் 1984, பொன். பொன்ராசாவுடன் செவ்வியில்)

அமரர் கே. டானியல் இவ்விதம் ஒருபக்க சார்பாக மூர்க்கத்தனமாக கொச்சைப் படுத்திக் கூறப்பட்ட சமயங்களில் மேற் சொன்ன விதத்தில் மட்டும் அல்லாமல் அவர்களது சிந்தனையை சரியான முறையில் சிந்திக்க வைத்துக் கொள்வதற்காக தெளிவு படுத்தி வெளியிட்ட கருத்துக்களில் கீழ்வருவனவும் ஒன்று.

"நான் எழுதுவது, எழுதாதது பற்றிய விடயத்தை விடுங்கள். அவர்கள் அதை எழுதட்டுமே; அப்படி எழுதுவதற்கு நான் தடையாக நின்றதோ, தடைபோட்டதோ இல்லையே! சாதியைத் தொடாமல் என்னால் சிருஷ்டிக்கப் பட்டவைகளை சரியாக இவர்கள் படிக்கவில்லை என்று தான் அர்த்தம்." ('தாரகை' இதழ் 12. பூமணிமைந்தன் தொகுப்பில்)

இருப்பினும் அவர் இறுதிக் காலங்களில் எழுதிய நாவல்களில் அளவில் பெரியதான 'பஞ்சகோணம்', என்னும் நாவல் தமிழகத்தில் பிரசுரிப்பதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன. அந் நாவல் வெளிவந்ததும் அமரர் கே. டானியல் சமகாலப் பிரச்சினையைத்தொடவில்லை என்னும் குறைபாட்டையும் விட்டு வைக்காமல் அந்தப் பிரச்சினைகளை உள்வாங்கிய படைப்பாக "பஞ்சகோணத்"தைத் தந்து ஓய்ந்ததை வாசகப் பெருமக்கள் தரிசிக்கலாம்.

டானியலால் எதிர் பார்க்கப்பட்ட, நோக்கப்பட்ட மனித சமூகத்தின் விடிவுக்கான அந்தப் புதியயுகத்தை; பொதுவுடமைச் சமூகத்தைக் காண்பதில் அவரது இறுதி மூச்சுவரை ஓய்ந்துவிடாமல் ஈடுபட்டிருந்ததும், அல்லாமல் வயோதிப காலத்தில் நோய் வாய்ப்பட்டு சித்தம் பிசகிய நிலையில் மேற்சொன்ன கருத்துக்கு எதிரான கருத்தை தன்னூடாகப் பெறப்பட்டால் அது புத்தி சுவாதீனம் அடைந்த நிலையில் தெரிவித்த கருத்தாகத்தான் இருக்கும் என்பதை 'தாரகை' இதழுக்கு எடுக்கப்பட்ட செவ்வியில் ஆணித்தரமாக வலியுறுத்தி இருப்பதைக் கீழே காணலாம்.

கேள்வி: உங்களுடைய நோக்கங்கள் என்றாவது நிறைவேறும் என்று நம்புகிறீர்களா?

பதில்: அந்த நம்பிக்கையை இழந்து விடும் அளவுக்கு என் சிந்தனைகள் இன்னமும் வக்கரித்து விடவில்லை. இது நிறைவேற முடியாதது என்று நானே சொல்வேனாகில் எனது மூளையில் பழுது ஏற்பட்டு விட்டதாக நீங்கள் நம்பலாம். மனித வரலாறு ஒரு தொடர்ச்சியான போர். அதற்கு இலக்கியமும் விதி விலக்கானதல்ல. நான் இல்லாவிட்டால் எனக்குப் பின் இன்னொருவன்; அவனுக்குப்பின் வேறொருவன் இப்படியே உலகின் சுகபோகங்களை தனித் தனியே தன்னது, தன்னது ஆக்கிக் கொண்டிருக்கும் வர்க்கத்தை அழித்தொழித்து எல்லாம் எல்லாருக்கும் என்ற எல்லைவரை இந்தப் போரை நடத்தி வெற்றி பெறுவர் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ('தாரகை' இதழ் 12 ஜூலை செப்ரம்பர் 1984)

1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் நாள் ஆனைக் கோட்டையில் இறகரிமரியாள் தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்த டானியல் 1951 ஆம் ஆண்டில் நல்லூரில் பிலோமினம்மாவை திருமணம் செய்து இரண்டு ஆண்களையும், நான்கு பெண்களையும் பிள்ளைகளாகக் கொண்டு வாழ்ந்தவர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணக் கிராமப் புறங்களில் நடைமுறையில் இருந்து வந்த 'திண்ணை' க்கல்வி முறையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பெற்ற டானியல் பிற்பாடு தகப்பனார் செய்துவந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டு உழைத்தார்.

ஆரம்பகாலத்தில் காந்திய இயக்கம் திராவிடமுன்னேற்ற இயக்கங்கள் மூலம் அரசியலில் காலடி வைத்த டானியல் காலப்போக்கில் அனுபவ முதிர்ச்சி, அறிவுத் தெளிவு பெற்று மாக்ஸிஸ சித்தாந்தக்கோட்பாட்டைக்கொண்ட கம்யூனிஸ இயக்கத்துடன் தன்னை இணைத்து சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் கம்யூனிஸ இயக்கம் இலங்கையில் வளர்ச்சிபெற அயராது பாடுபட்டவர்.

சகல அடக்கு, ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான மாக்ஸிஸ வழியில் ஈடுபட்ட டானியல் எழுத்திலும், செயலிலும், பேச்சிலும் மட்டுமன்றி முழுமூச்சாகவும், இறுதிவரை செயற்பட்டு வந்ததால் அவரால் படைக்கப்பட்ட இலக்கியங்களும், பேச்சுகளும், செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கை பெற்று ஈழத்து, இந்திய இலக்கியக்காரர்கள் மத்தியிலும் கவனத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தன.

கிராமப் புறங்களில் அவ்வப்போது எழுந்த சாதிப் பூசல்களில் தன்னை இணைத்துச் செயல்பட்டது போன்றே ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் காலத்துக்குக் காலம் பலரால் ஏற்படுத்தப்பட்ட புரளிகளையும் முறியடித்து உடைத்தெறிந்து அம்பலப்படுத்தியும், சரியான இலக்கியப்பாதையை முன்னெடுத்து வளர்க்கவும் பாடுபட்டவர் டானியல்.

டானியல் சார்ந்த இலக்கியப் பார்வையும், அரசியல் நிலைப்பாடும் அவற்றில் ஏற்பட்ட; ஏனையவர்களால் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களின் போதெல்லாம் சரியான பக்கத்தைத் தேர்ந்தெடுத்து உறுதி குன்றாமல் நின்று சேவை ஆற்றியமைக்கு கீழ் வரும் உதாரணங்கள் போதிய சான்று பகர்கின்றன.

"அறுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கம்யூனிஸ இயக்கத்தின் தேசிய, சர்வதேசிய மார்க்கம்பற்றிய முக்கியமானதும் உக்கிரமானதுமான தத்துவார்த்தப் போராட்டம் நடைபெற்று கட்சி பிரிவடைந்தபோது தோழர் டானியல் சற்றும் தயக்கம் இன்றி சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து தோழர் சண்முகதாஸன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளனாகச் செயற்பட்டார். ('தொழிலாளி' டிசம்பர் 1986)

"பிரேம்ஜி ஞானசுந்தரம், டொமினிக் ஜீவா, பேராசிரிய இலக்கியவாதிகள் தவறான வழிகாட்டலில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆரம்பக் கொள்கைகளைக் கைவிட்டு பிற்போக்குடன் கைகோர்த்து சாத்வீக, சமரச மார்க்கத்தையும், எல்லா மக்களுக்கும் பொதுவான இலக்கியம் என்ற வர்க்கப் பார்வையற்ற கோட்பாட்டையும், இலக்கியவாதிகள் வர்க்கத்துக்கு அப்பாற்பட்டவர்கள், மேலானவர்கள் என்னும் மாயைக் கருத்தையும் மேற்கொண்ட போது தோழர் டானியல் அவற்றை நிராகரித்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார்." ('தொழிலாளி' டிசம்பர் 1986)

இவ்விதம் அரசியலிலும், இலக்கியத்திலும் டானியல் தேர்ந்தெடுத்த பாதை உலகப் புதிய நாகரீக வளர்ச்சிக்கு வித்திடக்கூடியதாலேயே என்றைக்கும் மறக்கவோ மறைக்கவோ கூடியவராக அல்லாமல் அவரது நாமம் ஆழப் பதிக்கப்பட்ட ஒன்றாகி விட்டது.

**தேவிபரமலிங்கம்**

1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி தமிழ் நாடு தஞ்சை மாவட்டத்தில் காலமான அவர் வைத்திய சிகிச்சைக்காக சென்றிருந்த சமயம் ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக இறக்க நேரிட்டது. நோய்வாய்ப்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் தமிழகத்தில் பல்வேறு இலக்கியக் கூட்டங்களில் பங்குபற்றியும், தமிழ் இலக்கியக்காரர்களைச் சந்தித்தும் பரிமாறிக்கொண்ட கருத்துக்கள் அனந்தம். இறுதி மூச்சுவரை இலக்கியத்தை நேசித்ததுபோலவே நசுக்கப்பட்ட மக்களையும் நேசித்தவர்.

சாதிக் கொடுமையால் கிராமங்களில் குடிநீருக்காக பாதிக்கப்பட்ட சம்பவங்கள் வட பகுதிச் சிறுபான்மை மக்களின் வாழ்க்கையில் ஏராளம். கரவெட்டி கிழக்குப் பகுதியில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவந்தான் இறுதி நாட்களில் எழுதிமுடித்த "தண்ணீர்" நாவலது கருவூலம். "அடிமைகள்", "பஞ்சமர்", "கோவிந்தன்", "கானல்", "பஞ்சகோணம்" போன்ற இவரது ஏனைய நாவல்களும் நசுக்கப்பட்ட மக்கள் சார்பாக அவர்களின் விடுதலைப் போராட்டத்தை சித்தரிப்பனவாக எழுதப்பட்டுள்ளன. □

> நம்பிக்கையை இழந்துவிடும் அளவுக்கு என் சிந்தனைகள் இன்னமும் வக்கரித்து விடவில்லை. இது நிறைவேற முடியாதது என்று நானே சொல்வேனாகில் எனது மூளையில் பழுது ஏற்பட்டு விட்டதாக நீங்கள் நம்பலாம். மனித வரலாறு ஒரு தொடர்ச்சியான போர். அதற்கு இலக்கியமும் விதி விலக்கானதல்ல.

---

1962 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க வெள்ளை அரசால் அவர் கைது செய்யப்பட்டார்.

சக சறுப்பர்களை போராடத் தூண்டிய குற்றத்

கைப்பிடித்துக் கொண்டார். மண்டேலாவின் தீவிரவாதத்தை விரும்பாத அவள், திருமண வாழ்க்கையை பாதியில் முறித்துக் கொண்டு திசை மாறினாள்.

அவள் பிரிவின் வேதனை மண்டேலாவின் திசை

உடல் பலம் கொஞ்சம் தேய்ந்திருந்தாலும், அன்றைய அதே மனோபலத்துடன்தான் மாவேங்கை மண்ணில் கால்

# மனவலயம்

## கறுப்பு நெருப்பு

விடுதலை பெற்று விட்டது அந்தக் கிளி. சுமார் 27 ஆண்டுகள் சிறைக்குள் சுவாசித்திருந்துவிட்டு, அந்தப் பறவை கூடுவந்து சேர்ந்துள்ளது.

இந்த வருஷத்தில் மனிதாபிமான முள்ள அனைவருக்கும் சந்தோஷம் தந்த நிகழ்வு இதுதான்.

'நெல்சன் மண்டேலா விடுதலை'

அந்த மாபெரும் மண்ணின் மைந்தர் தன் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கத்தி முனையில் கால் வைத்து நடந்திருக்கிறார். பல தடவைகள் முட்களை முத்தமிட்டிருக்கின்றார்.

ஆரம்பத்தில் ஆதிக்க வெறியர்களிடம் பணிந்து நின்று உரிமைகள் கேட்டார். வெள்ளை மிருகங்கள் விரட்டின, மிரட்டின.

சருகால், தீயைப் பணிய வைக்க முடியாது. அவரும் தீயானார்.

தென்னாபிரிக்காவில் கறுப்பர்களுக்கு எதிராக நிறவெறி மட்டுமல்ல, இனவெறியும் இடம் பிடித்திருந்தன. அத் தேசம் காட்டு மிராண்டிகளின் கூடாரமாய்க் காட்சி தந்தது.

அங்கே –

கறுப்புச் சிறுவர்கள், கல்லுடைப்பதற்கும், விறகு வெட்டுவதற்கும் பயன் படுத்தப்பட்டனர் என்று தகவல் ஒன்று சுட்டுகிறது.

ஐரோப்பிய நாகரீகம் இதயத்தை இழந்தது போல காட்சி தந்தது.

அத் தேசத்தில் பெரும்பான்மையாக வாழும் கறுப்பர் வாழ்க்கை கருமை படிந்து கிடந்தது.

மக்களையும், மண்ணையும் நேசிக்கும் மனசு, மௌனமாக இருக்குமா?

மண்டேலா என்னும் மக்கள் பிரதிநிதி புரட்சிக்குப் புறப்பட்டது.

வன்முறைக்கு வன்முறைதான் பதிலடி !

1962 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க வெள்ளை அரசால் அவர் கைது செய்யப்பட்டார்.

சக கறுப்பர்களை போராடத் தூண்டிய குற்றத்திற்காகவும், வேலை நிறுத்தத்தில் மக்களை ஈடுபடுத்தியதற்காகவும் மண்டேலா கைதுசெய்யப்பட்டார் என்று காரணம் சொல்லப்பட்டது.

மேற்படி காரணங்களினால், அவருக்கு 1964ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

அட !

அன்று அடைக்கப்பட்ட அந்தச்சிங்கத்தின் கூண்டு, கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆந் தேதிதான் திறக்கப்பட்டது.

சிறை வாசம் அனுபவித்த 27 ஆண்டுகளில் ஒரு முறைதானும் அவர் தன் சொந்த மண்ணை மிதிப்பதற்கும், பறவைகளைப் பார்ப்பதற்கும், வானத்தை ரசிப்பதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று அறியப்படுகிறது.

சொல்லுங்கள் தோழர்களே !

சொந்த மண்ணில் சுகமாய் சுவாசிக்க நினைத்தது தப்பா ?

தான் பிறந்த கூட்டில் இருந்து சுதந்திரமாய்க் கூவுவதற்கு அந்தக் குயிலுக்கு வாயடைப்பு! தான் புழுதியளைந்து பூரித்த முற்றத்தை முத்தமிட அந்த மாமனிதனுக்கு மறுப்பு !

கறுப்பு இனத்தை ஆணிவேருடன் அழிப்பதற்காக அந்த இனத்திற்கே உரிய கலை, கலாசாரத்தைக் கூட அழிக்க நினைத்தது ஏகாதிபத்திய அரசு.

பல கலைஞர்கள், கவிஞர்கள் கூட கைது செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது.

போத்தா அரசு, மண்டேலாவை சிறையில் புன்னகைப்பதற்கு கூட அனுமதிக்கவில்லையாம். 'சிறையில் சும்மா தீனி வழங்க முடியாது. கல்லுடைத்துத் தா! என்று அவரை அந்த அரசு கஷ்டப்படுத்தியதாம்.

சிறைக்குள் அவர் வாசிப்பதற்கு நூல்கள், பத்திரிகை எதுவுமே வழங்கப்படவில்லையாம்.

எப்படி !

அறிவு ஜீவி ஒருவன் ஒரு நாளில் ஒரு வார்த்தை எழுத்தைக் கூட வாசிக்காமல் இருக்க முடியுமா?

அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது அவர் சொன்னாராம். 'எமது அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளது. நான் அரசுக் கைதியாக இருக்கிறேன். எப்படி இந்நிலையில் உங்களுடன் பேசவரமுடியும்?

★ ★ ★

புரட்சிக்கு முன்னர் மண்டேலா தன் மனசுக்குப் பிடித்த 'எவலின் நோமா' என்னும் இளம் பெண்ணை கைப்பிடித்துக் கொண்டார். மண்டேலாவின் தீவிரவாதத்தை விரும்பாத அவள், திருமண வாழ்க்கையை பாதியில் முறித்துக் கொண்டு திசை மாறினாள்.

அவள் பிரிவின் வேதனை மண்டேலாவின் திசையினை மூடிவைக்கவில்லை. ஒரு நிமிஷம் சிரித்துவிட்டு, கொண்ட கொள்கையிலேயே குறியாக இருந்தது அந்தக் கறுப்பு நெருப்பு.

வாசம் பரப்புவதற்காக மொட்டவிழ்த்த அந்தப் பூ, காற்று கட்டளையிட்டதற்காக கதவடைப்பா செய்யும்? கார்ல்மாக்ஸ்க்கு ஒரு ஜென்னி பாரதிக்கு ஒரு செல்லம்மா காந்திக்கு ஒரு கஸ்தூரிபாய் இப்படி எல்லா போராட்டக்காரர்களுக்கும் மணவாழ்க்கை பொருந்தவா போகிறது? கலங்கவில்லை அந்த விடுதலை வேங்கை !

அவருக்குத் தேவை மக்கள், சுதந்திரம், விடுதலை, உரிமை !

மனைவி பிரிந்ததன் பின், 'வின்னி' என்னும் கறுப்பினப் பெண்ணை அவர் மறுமணம் செய்து கொண்டார்.

புரட்சிக்கு அவள் பூ வீசினாள் !

□ □ □

**'உங்களை உலகம் எப்போதோ மறந்து விட்டது!'**

மண்டேலா சிறைப்பட்டிருக்கும் போது அச்சிறையின் காவலாளி ஒருவன் இவ்வாறு அவரைப் பார்த்துக் கூறினானாம்.

அடைத்து வைத்த பின்புதானே அகிலமே அவரை உச்சரிக்கிறது !

## வவுனியா திலீபன்

அந்தச் சிறைக் காவலாளிக்குள் தேங்கியிருந்த நிற வெறியின் செறிவைப் பாருங்கள்!

அந்தக் கூலிக்காரன் இப்படியென்றால். அடைத்து வைக்க ஆணையிட்ட அரசிற்கு எந்தளவு வெறித்தனம் இருந்திருக்கும் என சிந்தியுங்கள்.

உலகம் அவர் பெயரை திருக்குறள் போன்று மனப்பாடம் செய்து கொண்டிருக்கிறது.

சர்வதேசத்தில் மிசப் பலம் வாய்ந்த ஏகாதிபத்திய அரசுகள் கூட அவர் விடுதலைக்காக அழுது வடித்திருக்கின்றன ! ஹி...ஹி... இந்தியா கூட!

மண்டேலாவிற்கு காச நோய் கண்டபோது,

'தாமதிக்காமல் விடுதலை செய்!' என பல நாடுகள் தென்னாபிரிக்க அரசை வற்புறுத்தின.

இதன் காரணமாக புதிதாய் ஆட்சிக்கு வந்த, ஜனாதிபதி, டேகிளார்க் மண்டேலாவை விடுதலை செய்தார்.

தான் விரித்து வைத்த கொள்கைப் புத்தகத்தை மூடிவைக்காமல் அவர் வெளியே வந்துள்ளார்.

குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தான் பறக்க வேண்டும் என்று கொக்குக்குச் சொல்ல முடியுமா?

உடல் பலம் கொஞ்சம் தேய்ந்திருந்தாலும், அன்றைய அதே மனோபலத்துடன்தான் மா வேங்கை மண்ணில் கால் வைத்துள்ளது.

'இனஒதுக்கல் போராட்டத்தின் முடிவின் ஆரம்பம் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால்–எனதுவிடுதலைப் போராட்டத்தை விட்டுக் கொடுப்பதற்கானதருணம் இது என அர்த்தப்படாது.

அந்த வானம் சிறையை விட்டுவந்த சில மணிகளுக்குள் மேற்கண்டவாறு முழங்கியுள்ளது!

'மண்டேலா !
உன் சப்தத்துடன்
உன் மௌனமும்
எனக்குப் பிடிக்கும் !
உன் பிடிவாதத்தின் மீது
எப்போதும்
எனக்குப் பிரியம் !
மண்டேலா !
மண்ணின் மணமகனே !
இருண்ட கண்டத்தின்
சிவப்புச் சூரியனே ...!
ஆதிக்க வர்க்கத்தால் –
அர்த்தமற்ற
அஹிம்சையினைத் தான்
அடக்கி வைக்க முடியும் !
தீவிரவாதத்தால் -
கட்டப்பட்ட
சிறகுகளை
சிதைக்க முடியாது !
இது –
சத்தியம் !'
உன்விடுதலைச் செய்தி -
கேட்டு
கோடி ஜீவன்களுடன்
இந்தப் பிஞ்சுப் -
பேனாக்காரனும்
முகம் மலர்ந்தது
நிஜம் ! நிஜம் !

இன்னும் ....

□

## சிறுகதை

**1987-ஆம்** ஆண்டு அன்று நவம்பர் 17. விடியலை என் மனது வேண்டிநின்றது.

ஒரு மாதத்திலும் கூடிய இடைவேளையின் பின் அன்று கோப்பாயில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்ட நாள்.

வீட்டைப்போய்ப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தை விட, என் அன்னை என்ன நிலையிலிருக்கிறார் என்று பார்க்கவேண்டுமென்ற ஆவல் என் மனதை உந்தித் தள்ளிக் கொண்டிருக்கிறது.

என் அன்னைக்கு நான் ஒரே மகன் என்பதால் அவர் என்னைப் பிரிந்திருக்கச் சந்தர்ப்பங்களேற்பட்டதில்லை. இறுதிவரை என் அருகிலேயே வைத்திருக்க நினைத்த அவரை இப்படி பிரியநேருமென நான் எதிர்பார்க்கவே இல்லை.

அக்டோபர் பத்தாந்திகதியின் நினைவு வருகிறது. அறையை காலைப் பொழுதில் நினைத்திருப்போமா இத்தகைய பயங்கரமொன்று எம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கிறதென்று. இங்கு சமாதானத்தை நிலைநாட்ட வந்தவர்கள் எப்படியும் அமைதியை நிலைநாட்டுவார்கள் என்ற ஓர் எதிர்பார்ப்பு. ஆயுதங்கள் போய் அகிம்சை வந்துவிட்டதென்றொரு நம்பிக்கை.

இவற்றிடையே அமைதியாக விடிந்த அந்தக் காலைப் பொழுதில் அத்தனை நம்பிக்கைகளும் சிறகடித்துப் பறப்பது போல படபடவென்ற சத்தங்கள். பரபரப்பான வதந்திகள்.

எங்கள் வானில் சூழ்ந்த இருள் விலகப்போவதேயில்லையா என்ற ஏக்கத்துடன் அன்று இரவு படுக்கைக்குச் செல்கிறோம். நட்ட நடுநிலையில் கேட்ட வேட்டுச் சத்தங்களால் விழித்துக் கொள்கிறோம்.

எங்கள் வீட்டின் பின்புறமாகச் சூட்டுச் சத்தங்கள். 'யார் சுடுகிறார்கள்? ஏன் சுடுகிறார்கள்?' எனவுமே புரியவில்லை.

அடுத்து ஷெல் விழும் சத்தம். பிள்ளைகள் பயந்து அழுகிறார்கள்.

''கொஞ்ச நாளாய் இல்லா [illegible]

வராந்தாவில் அவருக்குப் பாதுகாப்பாக ஓர் அறை அமைத்தோம்.

இப்போது அந்த இடத்தில் எல்லோரும் ஒதுங்கினோம். ஓயாத சத்தங்கள்.

அருகே வீடுகளின்றித் தனித்து நின்ற எங்கள் வீட்டின் அசௌகரியம் அப்போது புரிகிறது. என்ன நடக்கிறது? என்ன செய்யலாமென அண்டை அயலிலே கூட விசாரிக்க முடியாத நிலை. விடியலுக்காகக் காத்திருக்கின்றோம்.

எங்கள் வீட்டின் பின்புறமாக இங்கிருந்து செல்லும் வேட்டுகளுக்கு எதிர்வேட்டு மிக அருகிலிருந்து வருவது போலத் தெரிகிறது. ஷெல்களும் வருகின்றன.

ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி அருகிலுள்ள இராணுவ முகாமில் பாதுகாப்புத் தேடுமாறு வானொலி அறிவிக்கிறது. நடக்காததையும் நடக்க முடியாததையும் கூறிப் பழகிவிட்ட வானொலி.

நாங்கள் வீட்டை விட்டும் புறப்பட்டும் போய்விடலாம். ஆனால் அம்மா?

''அம்மா'' என்ன செய்யப் போறீங்கள்?''

''நான் இங்கையே இருக்கப் போறன்''

''ஷெல் லடிக்கிறார்கள் அம்மா''

''இந்திய ஆமிதானே. ஒண்டும் செய்யமாட்டார்கள்''

''சண்டையெண்டு தொடங்கினால் என்னவும் நடக்கும் அம்மா''

''என்னாலை கோயிலுக்கும் அங்கையும் இங்கையும் அலைய ஏலாது. பத்தடி நடக்கிறதே கஷ்டம்'' கூன் விழுந்து தடதடக்கும் அவர் கூறுவது உண்மைதான். அதற்காக எப்படி விட்டுச் செல்வது?

''கடவுள் ஒருத்தர் இருக்கிறார். நீங்கள் வாழுற பிள்ளையள் போய்த்தப்புங்கோ'' அவரின் பிடிவாதம் குறைவதாயில்லை. நானும் முடிந்தவரை விவாதிக்கின்றேன்.

''என்னாலை கண்டு நின் [illegible]

வரை தினந்தோறும் என் கணவர் அம்மாவைப் போய்ப் பார்த்துவருகிறார்.

இதனிடையே அங்கு பலரை ஷெல் பலிகொண்டு விட்டது. எங்கள் வீட்டையும் ஷெல் பதம்பார்க்கத் தவறவில்லை. 18-10-87 காலைவரை அம்மாவிற்கு எதுவும் நடக்கவில்லை. 19-10-87 இல் அமைதிகாக்கும் படையினர் எமது வீடிருந்த பகுதியினுட் புகுந்துவிட்டதாக அறிகிறோம்.

ஊரடங்குச் சட்டம் எப்போது நீங்குமென்ற எதிர்பார்ப்புடன் ஒரு மாதங்கழிகிறது.

அதற்கிடையிலே கண்ட கேட்ட செய்திகளெல்லாம் எனக்கிருந்த அற்ப நம்பிக்கையையும் வரளச் செய்து கொண்டிருந்தன. யாழ் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்ரர்களே கொல்லப்பட்டுவிட்டனராம். ஆனாலும் ஒரு நப்பாசையின் பியில் அந்த விடியற்போதில் நான் இயங்குகிறேன். உணவுக்காகத் திண்டாடிய வேளையிலும் [illegible]

''நாளைக்கு உங்களைக் கூட்டிக்கொண்டுபோறம்.''


அம்மா வேலைக்குப் போய் விடத் அவர்களை தாயாக இருந்து சீராட்டி வளர்த்த அம்மம்மாவின் நேசக்கரங்களைக் காண அந்தப் பிஞ்சு உள்ளங்கள் தவிப்பது எனக்குப் புரிகிறது.

ஆனால் கோப்பாய் செக்கிங் பற்றி கேட்டவை என்னைத் தயங்கவைக்கின்றன.

கோப்பாய்ச் சந்தியை அண்மிய வீடுகளில் வசித்தவர்கள் சிலர் சேர்ந்து வெள்ளைக் கொடிசகிதம் செல்கிறோம். நாங்கள்தான் முதலிலேபோகிறோம் போலத் தெரிகிறது.

வீதி மருங்கிலிருந்த வீடுகளனைத்தும் ஒரு வீடும் தவறாது விரிந்த கதவுகளுடன் வெறிச் சோடிக்கிடக்கின்றன. உறவினர் இருவரின் வீடுகளை எட்டிப்பார்த்தபோதே உறைந்து போகிறேன். வீடு முழுவதும் பொருட்கள் சிந்திச் சிதறிக் கிடக்கின்றன.

கடைகளும், வீடுகளும் உடைந்தும் இடிந்தும் எரிந் [illegible]



கிறோம். ஒரு வீதித் தடுப்பு கண்ணில் படுகிறது. யாருமே கண்ணிற்படவில்லை.

''ஹோல்ற்''

இந்தக்குரல் எங்கிருந்து வருகிறது?

திடீரெனப் பெற்றோல் நிலையப்பக்கமிருந்து இருவர் தோன்ற, பஸ்தரிப்பிலிருந்து பலர் வெளிவருகின்றனர்.

கைகளை உயர்த்திக் கொண்டு நாங்கள் நிற்கிறோம்.

துப்பாக்கிகளையும் தூக்கிக்கொண்டு அவர்கள் நிற்பதைப் பார்த்தால் எதிரிகளை எதிர்நோக்கும் பாவந் தெரிகிறது.

''டௌன்'' சில நிமிடங்களில் அடுத்த உத்தரவு, கைகளைத் தொங்கவிடுகிறோம், மீண்டும் ''டௌன்'' என்ற உத்தரவு. புரியவில்லை.

சில தடவைகள் கூறியபின்தான் இருக்கச் சொல்கிறார்களென்பது புரிகிறது.

நடு வீதியில் குந்தியிருந்த என் கண்கள் சுற்றுப்புறத்தை மேய்கின்றன.

அதோ வீதியோரம். அது யாராயிருக்கும்? நாகமுத்து அப்பாவோ?

ஒரு மாதத்திற்கு முன் என்னைப்பார்த்துச் சிரித்த அந்த முகம் மண்டையோடாக வீதியோரத்தில் எரிந்து கிடக்கிறது.

அம்மா எப்படியிருக்கிறாவோ?

ஒரு மாதிரியாக வருமாறு உத்தரவு கிடைக்கிறது. தாடியும் தலைப்பாகையுமாக எந்த முகத்திலும் இனிமை தெரியவில்லை. நாம் கேட்பதும் அவர்களுக்கும் புரிவதாகத் தெரியவில்லை.

அட ஆண்டவா! முன்பிருந்தவர்கள் பேசுவதில் நான்கு வார்த்தை நமக்கு தெரிந்திருக்கும். ஏதோ அரைகுறை பேசிப்புரிய வைக்கலாம். இவர்கள் எங்கேயோ இருந்து வந்து தொலைத்தது...

அம்மா என்ன கூறியிருந்தாலும் இவர்களுக்குப் புரிந்திருக்காதே.

சந்திக்கு அண்மையிலிருந்த வீடொன்றில் அவர்களின் கொமாண்டர் இருக்கிறார்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

எங்கள் வீடுகள் எங்குள்ளன என வினாவுகிறார். ஒவ்வொரு வீட்டையும் சென்று பார்வையிட இரு இராணுவத்தினரையும் சேர்த்து அனுப்புகிறார்.

பசுமையாகக் [illegible] இருந்த [illegible]

படிக்கும் அறையிலிருந்த மேசை இழுத்து விடப்பட்ட இலாச்சிகளுடன் கதவிற்கு நேரே நடுஹோலில் கிடக்கிறதே

நம்பிக்கையின் தளர்வு அதிகமாகிறது.

கேற்றைத் திறக்க முடியாதபடி வெட்டிப் போடப்பட்டு உக்கிக்கிடந்த கடதாசிப் பூமரமுட்களை அசற்ற அவர்களுக்கும் உதவுகின்றன.

சிலவேளை நல்லவர்களாய் இருப்பார்களோ? அல்லது சில பேர் நல்லவர்களாக இருப்பார்களோ?

சில மாதங்களின் முன் வாகனங்களிலிருந்து, ஏன் ஹெலிக்கொப்பரிலிருந்துகூட அசைந்து நமக்கு நம்பிக்கையூட்டிய கரங்கள் நினைவில் பளிச்சிடுகின்றன.

கேற்றைத் தாண்டுகிறேன். அம்மாவுக்காக பிஸ்கற் வைத்திருந்த தகரம் வழியிலே கறளேறிக் கிடக்கிறது.

குரோட்டன்களிடையே ஒரு பங்கர்.

வீட்டருகே செல்கிறோம். குப்பென்ற பிணவாடை பாதுகாப்பிற்காகக் கட்டிய அறையினுள் மண்டையோடும் எலும்புகளும்.

சந்தேகம் முளைவிடுகின்றது.

'திறந்த வீட்டினுள் நாயிழுத்துவந்த மண்டையோடாக இருக்குமோ? சந்தேக முளையைக் களைய முனைகிறது நப்பாசை.

'அம்மா, அம்மா'

'மாமி, மாமி'

எங்கள் குரல்களுக்குப் பதிலிறுக்க யாருமே இல்லை. காவலுக்கு வந்தவர்கள் மெல்ல நழுவி வாசலுக்குப் போவது தெரிகிறது.

உள்ளே கால் வைக்கிறேன். சுவரில் கிடந்த கடிகாரம் வெறும் ஓடாக நிலத்தில் கிடந்தவிதமே வெறியின் அளவைக் காட்டுகிறது.

படிப்பறையின் பக்கம் திரும்புகிறேன். எத்தனையோ ஆண்டுகளாகச் சேர்ந்த நூல்கள் நிலத்திலே சிதறி ஷெல்லடியால் திறந்[illegible]கிடந்த கூரை வழியே [illegible]ந்த மழை நீரில் உக்கி...

அடுத்த அறையுள் உடைகள் பொருட்கள் அனைத்தும் கொட்டப்பட்டு அதன் மேல் நெல்லும் சொட்டப்பட்டு நெற்பயிர் அவற்றின் மேல் முளைவிட்டு நிற்கின்றது.

அடுத்த அறையும் அதே போல் தேவையான சான்றிதழ்கள் கோவைகள் அனைத் [illegible]

பெட்டிவரை ஒன்றுமே வீட்டில்லை.

நாங்கள் வைத்திருந்த போலி நகைகள் அனைத்தையும் உடைத்தும் நெரித்தும் போட்டிருப்பதைப் பார்த்தபோது எனது பரிதாபநிலை மறந்துபோய் அவர்கள் மேல் பரிதாபமேற்பட்டது.

கடவுள்படமிருந்த இடத்திற்குமட்டும் மரியாதை கொடுத்திருந்தார்கள்.

ஓர் அறையின் கூரைஷீற்கள் அனைத்தும் கழற்றப்பட்டு வானந்தெரிந்தது.

பாடுபட்டு வளர்த்த வாழைகளனைத்தும் தரையிலே அடியோடும் வெட்டப்பட்டுக் கிடந்தன.

எத்தனை வருடங்களாக எவ்வளவு பாடுபட்டிருப்போம் என்னையும் என் பிள்ளைகளையும் சீராட்டி வளர்த்த அன்புக்கரங்கள் உக்கி உருக்குலையும்வரை வந்து பார்க்கவே முடியாத ஒரு நிலை. ஒரு மாத ஊரடங்குச் சட்டம் உலகிற்குத் தெரியுமா? அம்மா, நீ ஒரே நிமிடத்தில் போனாயோ வேதனையோடு எங்களைத் தேடினாயோ? உன் படுக்கையும் பின்புறச்சுவரையும் உடைத்த குண்டுகள் உன்னை எப்படிக்துளைத்திருக்கும். அன்று வானொலி அலறிய புலிகளின் எண்ணிக்கைகளில் நீயும் சேர்க்கப்பட்டாயோ யார் கண்டார்கள்?

என் இருதயம் நின்றுவிடவில்லை. எனக்குப்பைத்தியம் பிடித்துவிடவில்லை. இந்த நிலை எத்ததனையோ பேர்களுச்கு ஏற்பட்ட ஒன்றுதானே. பேரிடிகளுக்குத் தாக்குப் பிடிக்கும் வலிமை எங்களுக்கு இருந்துதானாக வேண்டும்.

வாயிலில் நின்ற காவலர் வருமாறு அழைக்கின்றனர். காலடி எடுத்து வைக்கிறேன். சிதறிக்கிடந்த நூல்களிடையே பகவத்கீதையும், உபநிடதமும் இரகுவம்சமுங் கூடக் கிடக்கின்றன. யாழ் மண்ணிலுள்ள ஒரு வீட்டிலிருந்த பிழைக்காகவோ என்னவோ பாரதியின் வீரத்திருவுருவம் உக்கி உருக்குலைந்து கிடக்கிறது, மணிமேகலையும் சிலம்பும். கண்ணகியின் கோபச்சிரிப்புப் போய் கேலிச் சிரிப்பு பிறந்திருக்குமோ? நீதி கேட்டால் அதை வழங்க எந்தப் பாண்டியன் இங்கிருக்கிறானென்று.

நான் நிமிர்ந்து பார்க்கிறேன். காந்தியும் நேருவும் சேர்ந்தமர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் படம் அதை 1967இல் ஆசையுடன் வாங்கினேன். இந்த இருபது வருடங்களும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தச் சிரிப்பை இரசித்திருக்கிறேன். இன்று அந்தச்சிரிப்பு...

றோம்.

எங்கள் வீட்டின் பின்புறமாகக் சூட்டுச் சத்தங்கள். 'யார் சுடுகிறார்கள்? ஏன் சுடுகிறார்கள்?' எவுமே புரியவில்லை.

அடுத்து ஷெல் விழும் சத்தம். பிள்ளைகள் பயந்து அழுகிறார்கள்.

''கொஞ்ச நாளாய் இல்லாமலிருந்ததாலை இப்ப சத்தங் கேட்க என்னவோ செய்யுது'' அம்மாவும் எழுந்து வருகிறார்.

ஷெல்லும் ஹெலியின் சூடும் பொம்மரின் தாக்குதலுமாகப் பரிதவித்த காலங்களில் பதுங்குகுழி அமைத்தோம். கூன்விழுந்த என் தாயாரால் அதற்குள் புகுவது இயலாதென்பதால் முன்கூறுவது உண்மைதான். அதற்காக எப்படி விட்டுச் செல்வது?

''கடவுள் ஒருத்தர் இருக்கிறான். நீங்கள் வாழுற பிள்ளையள் போய்த்தப்புங்கோ'' அவரின் பிடிவாதம் குறைவதாயில்லை. நானும் முடிந்தவரை விவாதிக்கின்றேன்.

''என்னாலை கண்டது நிண்டது சாப்பிட ஏலாது. சத்தியெடுக்கும். அலைஞ்சால் வருத்தங்கூடும். வயசு போனதுகள் வருத்தக்காறரெண்டு வசதிசெய்துதரப்போகினமே? ''அவரது இயலாமையாலேற்பட்ட பிடிவாதத்தை மாற்ற முடியாது. நாங்கள் அவரை விட்டுவிட்டுப் புறப்படுறோம்.

ஒருவாரகாலம் போராளிகள் அங்கே எதிர்த்து நின்ற கையையும் வரளச் செய்து கொண்டிருந்தன. யாழ் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்ரர்களே கொல்லப்பட்டுவிட்டனராம். ஆனாலும் ஒரு நப்பாசையின் பிடியில் அந்த விடியற்போதில் நான் இயங்குகிறேன். உணவுக்காகத் திண்டாடிய வேளையிலும் அம்மாவுக்கென்று வாங்கிப் பாதுகாத்த நெஸ்ரமோல்ற், பிஸ்கற்பெட்டி எல்லாவற்றையும் எடுத்துக் கொள்கிறேன். நானும் என் கணவருமாகப் புறப்படுகிறோம்.

''அம்மம்மாவை நாங்களும் வந்து பார்க்க ஆசையாக இருக்கு.'' பிள்ளைகள் கெஞ்சுகிறார்கள்.

றாது விரிந்த கதவுகளுடன் வெறிச் சோடிக்கிடக்கின்றன. உறவினர் இருவரின் வீடுகளை எட்டிப்பார்த்தபோதோ உறைந்து போகிறேன். வீடு முழுவதும் பொருட்கள் சிந்திச் சிதறிக் கிடக்கின்றன.

கடைகளும், வீடுகளும் உடைந்தும் இடிந்தும் எரிந்தும் கிடக்கும் காட்சிகள்.

பூவும் பொட்டுமாகப் புன்முறுவலுடன் பொலிந்துநின்ற நங்கை, கைம்பெண்ணாகிக் கதிகலங்கி நிற்பதைக் காணும்போது ஏற்படும் கலக்கம் என் மனதினுள் விரவுகிறது.

எங்கள்கிராமம் மயானமாகிவிட்டதோ?

கிறிஸ்தவக் கல்லூரியைத் தாண்டி சிறிது தூரம் செல்

## யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

எங்கள் வீடுகள் எங்குள்ளன என வினாவுகிறார். ஒவ்வொரு வீட்டையும் சென்று பார்வையிட இரு இராணுவத்தினரையும் சேர்த்து அனுப்புகிறார்.

பசுமையாகக் கிடந்த வாழைத் தோட்டங்கள் வெறுமையாகக் கிடக்கின்றன. வேலிகள் மரங்கள் அத்தனையும் சின்னாபின்னமாகி பெற்றோல் நிலைய மதிலும் உடைந்து நொருங்கிக் கிடக்கிறது. செயின் புளக் அதனால் வந்திருக்குமோ?

வீட்டை அண்மிக்கிறோம். வீட்டுக் கதவு விரிந்து கிடப்பது வீதியில் நிற்கவே தெரிகிறது.

நெல்லும் சொட்டப்பட்டு நெற்பயிர் அவற்றின் மேல் முளைவிட்டு நிற்கின்றது.

அடுத்த அறையும் அதே போல் தேவையான சான்றிதழ்கள் கோவைகள் அனைத்தும் உக்கிக் கிடக்கின்றன நினைவுச் சின்னங்களான புகைப்படங்கள் ஒளிப்பதிவு நாடாக்கள் அனைத்தும் வேண்டுமென்றே அழிக்கப்பட்டனவோ?

சும்மா சொல்லக்கூடாது. புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பார்களோவென்று நன்றாகவே தேடியிருந்தார்கள். கைக்கடிகாரம் முதல் தொலைக்காட்சிப்

நான் நிமிர்ந்து பார்க்கிறேன். காந்தியும் நேருவும் சேர்ந்தமர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் படம் அதை 1967இல் ஆசையுடன் வாங்கினேன். இந்த இருபது வருடங்களும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தச் சிரிப்பை இரசித்திருக்கிறேன். இன்று அந்தச்சிரிப்பு...

மில்க்வைற் மேலுறைகளைக் கொடுத்து என் பிள்ளைகள் வாங்கிவைத்திருந்த மூன்று குரங்குகளின் சிலை ஒரு மூலையிருந்து என்னை மேலே சிந்திக்க விடாது தடுக்கிறது.

காவலர்களின் கட்டளைப்படி நான் வாழ்ந்து மகிழ்ந்த வீட்டினின்று வெளியேறி நடக்கிறேன். நாளை நமக்கு வீடும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன்... □

---

## வள்ளுவ வாக்கியம்

நா!

ஒருவனது இதயத்தை உலகுக்கு வெளிக்காட்டுவது நா! அவனது வாழ்வை மலர்வித்துச் சிறப்பித்தும் -அல்லது கெடுத்துச் சீர்குலைப்பதும் அதுதான்!

அருளாளரின் அன்புமொழி ஆசியாய் அமைகிறது.

பண்பிலாதோனின் நாவோ தனக்கும் பிறர்க்கும் துன்பமாய் விடுகிறது. பிறர் மனதில் ஆறாத புண்ணை ஏற்படுத்த வல்லது வன் சொல்லை வீசும் நாவே!

அன்புடன் கூடிய இன்சொல் பேசுதற்கு எளியது. கேட்பதற்கு இனியது. நல்லதை வளர்க்கும் சுனை நீர் இதுவாகும். இன்சொல்லை முகம் மலர்ந்து வழங்குவோன் ஈகையில் மேலோனாகிறான்!

நல்ல நாவுடையோரின் சொல்லை உலகம் உவகையுடன் கேட்பது மட்டுமின்றி, அச்சொற்கேட்டு நடக்கவும் விரைகிறது.

அன்பை வெளிப்படுத்துவதைப் போல அறிவையும் நாவே வெளிப்படுத்துகிறது. கல்லாதோனும் கற்றோரின் நா அசைவினால் கேள்விச் செல்வம் எனும் கல்வியைப் பெறுகிறான்.

நாவல்லோன் ஆதல் ஆண்மையே. அளவறிந்து பேசு. சொல்லின் பொருளறிந்து பேசு. நீ எண்ணிய கருத்துக்கள் ஏனையோர் உள்ளத்தில் சென்றிடத்தக்கதாய் சொற்களைத் தெளிவோடும் துணிவோடும் பேசு.

நல்லிசைத் துறையிலும் நா நயன்மிக்கது. குழலிலும் யாழிலும் இனிதாகக் குழந்தையின் மழலைச்சொல் இனிமை தருகிறது. உலகுக்குத் தெரியாத இரு உள்ளங்களின் காதல் நாவின் வழிவந்து அழியாத அழகுக்காவியமாய் வாழ்கிறது!

மௌனமும் நாவின் ஒருவகைச் செயலே. அறிவுடையோனே இந்த மௌனத்தைக் கையாள வல்லவன்.

செயலோடு பொருந்தாத சொல்லும் பயனற்ற பேச்சுக்களும் தன்னைப் புகழ்ந்திடும் வார்த்தையும் நாவின் மதிப்பைக் கெடுக்கும். கேடுகளிற் கேடு புறங்கூறல். இவற்றைத் தவிர்ப்போம்.

நல்வழி கூறும் அறிஞரின் நா சிலரை அழவைத்து விடுவதும் உண்டு. ஆயினும் அத்தகைய ஒலி கேட்கப்பட வேண்டியதே!

உள்ளத்தின் உயர்வே நற்சொல்லின் வித்து. பொய்மை துன்பத்தைத் தரும். வாய்மையோ உலகறிந்த அனைத்திலும் சிறந்தது; உயர்ந்தது; நிலையான உறுதி தருவது.

புலன் வழியிலும் சுவை அடக்கம் எனும் நா அடக்கம் பெருந்தவமாகின்றது. பலதிற்கும் இதுவே அடித்தளம்.

உடல் சோர்ந்து வீழும் இறுதி வேளையில் நாவும் தன் தொழில் இழந்துவிடுகிறது. ஆயினும் நா பரப்பிய நல்லிசை நல்ல அறிவுரையாய் - நிறைமொழியாய் - நின்று உலகை வாழ்விக்கிறது! நீடூழி வாழ்கிறது!

— நாக. பத்மநாதன்

---

வாசகர்கள்
எழுத்தாளர்கள்
கவனிக்க:

வாசகர்களே...!
இவ்வாரம் முதல்
ஞாயிறுமலர்
புதிய பெரிய தோற்றத்துடன்
வெளிவருகிறது.
ஞாயிறு மலர் பற்றிய
உங்கள்
ஆலோசனைகள்
கருத்துக்கள்,
விமர்சனங்கள்
வரவேற்கப் படுகின்றன.
எழுத்தாளர்களே!
உங்களின்
ஆற்றல்மிகு
ஆக்கங்களை
நாங்கள்
எதிர்பார்க்கின்றோம்.
சமகால நிகழ்வுகள், எரியும்
பிரச்சினைகள், எமது தாயக
அபிவிருத்தி, பற்றிய
விரிவான
ஆய்வுக் கட்டுரைகள்
ஆகியவற்றிற்கு
முன்னுரிமை அளிக்கப்படும்.
நம் சமுதாய ஏற்றத்தை
முன்னெடுக்கும்
ஏவுகணைகளாக
உங்கள் படைப்புக்கள்
அமையட்டும்.
பிரசுரிக்கப்படும்
ஆக்கங்களுக்கு
உரிய சன்மானம்
வழங்கப்படும்.

---


# மாறன் பதிப்பகம், தர்மபுரம்

பின்வரும் பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மெசின் மைண்டர் (சிலிண்டர்) (MACHINE MINDER, CYLINDER)
2. அச்சக முகாமி (PRINTING FOREMAN)
3. அச்சுக்கோர்ப்பாளர் (COMPOSITORS)
4. அச்சுக்கோர்ப்பு பயிலுனர்கள் (TRAINEE COMPOSITORS)
5. ஒப்பு நோக்காளர் (PROOF READERS)
6. தட்டெழுத்தாளர் (தமிழ்) (TYPIST - TAMIL)
7. கணக்கு லிகிதர் (ACCOUNTS CLERK)

சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15-04-1990**

**விண்ணப்பங்கள்:**
சுய விபரங்களடங்கியதாகவும், சான்றிதழ்களின் பிரதிகளுடன்

**முகாமையாளர்,**
**மாறன் பதிப்பகம்**
**பிரதான வீதி,**
**தர்மபுரம்.**

என முகவரியிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் *15. 04. 1990* அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

முகாமையாளர்,
மாறன் பதிப்பகம், தர்மபுரம்.

(R-)51




(4)

வடக்கினிலும் கிழக்கினிலும் வாழ்ந்த மக்கள்
வளையாத தமிழ்ப் பற்றில் வளர்ந்து வந்தார்
அடக்குமுறை ஆயிரமாய் வந்த போதும்
அஞ்சாது அறவழியில் போர்கள் செய்தார்
''நடக்கின்ற போராட்டம் நல்லதல்ல
நாகரீகம் அற்றதன தெற்கிலுள்ள
திடக்காந்து இல்லாத தமிழர் சொன்னார்
தீமைகளை ஏற்பதற்குச் சித்தமானார்.

உடன்படிக்கை செய்தார்கள் தமிழரோடு
ஒவ்வொன்றாய் பின்னரதைக் கிழித்தெறிந்தால்
திடனற்று தம்மவரைத் திருப்தி செய்து
தீந்தமிழர் மனம் நோக நடந்து கொண்டார்
வட, கிழக்குத் தமிழர் தமை அடக்கியாள
வன் செயலைக் கையாண்டார் சிங்களவர்
உடன்பிறந்தோர் என உறவு கொண்டு வாழ்ந்த
உயர்ந்த மனத் தமிழருக்கு உலை வைத்தார்கள்.

இனக் குழப்பம் முதன் முதலில் ஐம்பத்தெட்டில்
இலங்கையிலே இடம் பெற்ற காலந்தன்னில்
பிணக்காடு ஆகிற்று இந்த நாடு
பேயாண்ட சுடலையென நாறலாச்சு
மனக் குழப்பம் கொண்டார்கள் தமிழரன்று
மாற்று வழிகாணது மடிந்து போனார்
தனக்கென்றோர் நாடில்லா தமிழர் கூட்டம்
தாயகமாய் தமிழகத்தை ஏங்கிப் பார்த்தார்.

உடல் வெட்டி, உயிர் கொன்று, உடமை கொண்டு
உபாதைகளை சிங்களர் செய்த போது
கடலுக்கு அப்பாலும் கதறல் கேட்டு
கடற்கரையில் குவிந்தார்கள் தமிழர் கூட்டம்
அடலேறு போலன்று அறிஞர் அண்ணா
அருந்தமிழர் துயர் நீங்கக் குரல் கொடுத்தார்
''திடல் செய்வோம் நீரிணையை திராவிடர்கள்
தீந்தமிழர் துயர் தீர்ப்போம்'' என்று சொன்னார்.

மத்தியில் ஆள் அரசே உன் மௌனம் போதும்
மறுகரையில் எம் தமிழர் மாளுகின்றார்
சத்தியத்தின் வழி நின்ற தமிழர் கூட்டம்
சாகடிக்கப் படுகிறார் ஆளுவோரால்
நித்தியமாய் இந்த நிலை தொடருமென்றால்
நிச்சயமாய் திராவிடர்கள் பொறுக்க மாட்டோம்
புத்தி கெட்ட சிங்களர்க்கு புகட்டுபாடம்
புறப்படுவோம் இல்லையெனில் புகட்டப்படும்

''ஏதும் நீ செய்யவில்லை என்று ஆனால்
ஏந்திடுவம் மண்வெட்டி கூடைகையில்
சேது அணை தனை நிரவிச் சென்று சென்று
செந் தமிழர் செத்தழியும் நாட்டைச் சேரும்
போது நாம் விடுகின்ற மூச்சுப் போதும்
பொசுங்கிடுவர் சிங்களவர் அந்தக் காற்றில்
யாதுமுடன் செய்து துயர் தீர்ப்பாய் அன்றேல்
யாம் பொறுப்பதில்லை'' யென்றார் அறிஞர் அண்ணா.

அண்ணாவின் குரல் அன்று ஒலித்த போது
அழுகையிலும் ஆனந்தம் தமிழர்க்கிங்கு
புண்ணான நெஞ்சுகளில் புதிய சக்தி
புகழ் பூத்த பாரதம் நம பக்கமென்று

# ● ஒரு கைதியின் நாட்குறிப்பிலிருந்து .....

**29 - 07 - 1939**

இன்றுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரண்டு வருடம் பூர்த்தியாகின்றது. இன்றைய தினத்துடன் இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்று பிரேமதாஸா கெடு வைத்திருந்தாலும், சில சிங்கள அமைச்சர்களின் ''வீராவேசப்'' பேச்சுக்களாலும் இன்று இந்தப் பிராந்தியத்தில் ஒரு மோதல் உருவாகிவிடும் என்று உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. எப்படியோ இந்த மோதல் தவிர்க்கப்பட்டுவிட்டது. அப்படியே ஒரு மோதல் ஏற்பட்டிருந்தாலும் இந்திய விஸ்தரிப்புக்கு எதிராக முதன் முதல் ஆயுதம் ஏந்திப் போராடியவர் என்ற பெருமை பிரேமதாஸாவுக்கு வந்துவிடப் போவதில்லை. உலக சரித்திரத்தில் அந்தப் பெருமை பிரபாகரனுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் இன்று முகாமைவிட்டு வெளி வரும் என்று சொல்லிவிட்டு அவர்கள் பந்தடித்து விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். I. P. K. F தான் இன்னும் வெருண்டடித்துக் கொண்டு இருக்கிறது. இரவும் பகலும் மரணபயம் இவர்கள் முகத்தில் தெரிகிறது. எம்முடன் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள். இன்றுடன் பத்தாவது நாளாக காலையில் 6 மணிதொடக்கம் 8 மணி வரையும் பிற்பகல் 3.30 தொடக்கம் 5.30 வரையும் வெளியில் 3 பேரை மட்டுமே இயற்கைச் கடன்களுக்கும், குளிப்பதற்கும் அனுமதிக்கிறார்கள். அதில் இரண்டு பேர் தண்ணீர் அள்ளி ஊற்ற வேண்டும். மீதி ஒருவர்தான் தனது வேலையைப் பார்க்க முடியும். 70 பேர் உள்ள புளக்கில் எப்படிச் சமாளிக்க முடியும்? ஒவ்வொருவராக இந்தளவு நேரத்தில் எப்படி முடிப்பது? ஆகையால் நாளை மேஜரிடம் கதைத்து இன்னும் கூடுதலாக ஆட்களை குளிக்க அனுமதிக்கும்படி ஆதரவாளர் நிலையில் இருந்து பிடிபட்ட சிலர் எமது புளக் தலைவரிடம் கேட்டார்கள். இவர்களுக்கு ஒழுங்காகக் குளித்து, முழுகிப் பழக்கமிருந்தால்தானே இவர்களால் குளிப்பின் அத்தியாவசியத்தை உணரமுடியும்? இன்று பிற்பகல் வழமையாக எமது மறைந்த போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் செலுத்தப்படும் அஞ்சலிக்குப் பின் நடைபெறும் கூட்டத்தில் எமது புளக் தலைவர் ''ஆக்கிரமிப்பாளர்களிடம் எங்களுக்கு இன்னென்ன சலுகைகள் செய்யுங்கள் என்று நாம் கேட்கக்கூடாது. ஏனெனில் சலுகைகளை எதிர்பார்க்கும் அமிர்தலிங்கம் வழி வந்தவர்களல்ல நாம். நாங்கள் உரிமைக்காகப் போராடும் புதிய பரம்பரையினர். இவர்கள் எவ்வளவு கடுமையாக எம்முடன் நடந்துகொண்டாலும் இவர்களிடம் எதையும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளக் கூடாது. இவர்களிடம் கருணையை எதிர்பார்த்தல் தவறாகும். எந்த ஆக்கிரமிப்பாளனும் இவ்வாறுதான் நடந்து கொள்வான். இந்த நேரத்தில் காட்டுக்குள்ளும், நாட்டிலும் எமது போராளிகள் படும் கஷ்டத்தைநினைத்துப்பாருங்கள். அவர்கள் படும் கஷ்டத்தில் நூறில் ஒன்றுகூட இது இல்லை. இது அல்ல இதற்கு மேலும் இவர்களால் ஏற்படுத்தப்படும் சிரமங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் இவை எம்மைப் பாதித்துவிட்டதாக நாம் காட்டிக்கொள்ளக்கூடாது. அப்படி நாம் காட்டிக்கொண்டால் எம்மை அடைத்து வைத்திருக்கும் நோக்கத்தில் இந்திய வல்லாதிக்க அரசு வெற்றி பெற்றுவிட்டது என்றே கருதும்'' என்றார். எவ்வளவு அர்த்தமுள்ள வார்த்தைகள் இவை?




''F'' புளக்கில் இப்படித்தான் முன்பும் ஒருமுறை இப்போது சாப்பிட்டபின்பு கை கழுவுவதற்குக்கூட வெளியால் விடாமல் இருப்பதுபோல ஒரு நாள் பிற்பகல் சாப்பாட்டைத் தந்துவிட்டு அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள். கைகழுவுவதற்கோ, குடிப்பதற்கோ கூட தண்ணீர் இல்லை. இனிமேல் அடுத்தநாட் காலை ஆறுமணிக்குத்தான் கதவைத் திறப்பார்கள். இந்த நிலையில் விக்சல் எடுத்த இரண்டு பேர் தண்ணீர் எடுப்பதற்காக ஆமியைக் கூப்பிட்டதற்காக மேஜர் லக்கன்பாலிடம் கொண்டு செல்லப்பட்டு ''அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்றார்கள்'' என்று குற்றஞ்சாட்டப்பட்டு குப்புறப் படுக்கவைத்து ஒவ்வொருவருக்கும் மேல் தலா இரண்டு மாமூட்டைகள் ஏற்றப்பட்டு அவர்கள் மயங்கும் வரை பின்னங்காலில் பின்னப்பட்ட வயறினால் அடித்தார்கள். அடிப்பதற்குமுன் மின்சாரம் பாய்ச்சப்படும் முறையும் தவறவிடப்படவில்லை. இந்த லட்சணத்தில் சில சலுகைகளைக் கேட்பது சாத்தியமில்லை. அப்படிக் கேட்பது தலை வணங்க மறுத்துக் களத்திலே மடிந்த போராளிகளின் தியாகங்களைக் கொச்சைப்படுத்துதல் போலாகும்.

எனவே இவர்கள் எதையும் செய்யட்டும், எப்படியும் நடக்கட்டும். நாங்கள் இவர்களிடம் எதையும் கெஞ்சிப் பெறப்போவதில்லை. எங்கள் விடயங்களைத் தீர்மானிக்க இவர்கள் யார்? □



[ ஒவியரான ஓர் கைதியின் பார்வையில் மேஜர் லக்கன் பாலின் இருவேறு தோற்றங்கள் ]

''கன காலத்துக்குப் பிறகு நேற்றைக்குத்தான் சுனாகப் பக்கம் போனனான்.'' என்றான் தாடிமாமா.

''ஏண்டாப்பா ஐ. பி. கே. எவ். இருக்கும் வரை சுன்னாகம் போகேலையோ'' என்று விக்கி கேட்டான்.

'ஏன் சிக்கல் எண்டுபோசா எல் இருந்தனான். இப்ப தானே எல்லா இடமும் பிக்கல் பிடுங்கல் இல்லாமல் போகலாம் தானே''

''அது சரி நீ சுன்னாகம் போனது இருக்கட்டும் நீ சும்மா கதையைத் தொடங்க மாட்டியே''

இரண்டு, மூன்டு யாழ்ப்பாணத்துப் பேப்பர்கள் தான் கிடந்தது''

''வேறென்ன''

''வேறை என்னவோ. கனக்கப் புத்தகங்கள் மூலைக்கு மூலை அடுக்கி வைச்சிருக்கு. அதுகளை ஒழுங்காய் புத்தக றாக்கையில் அடுக்கி வைச்சால் எவ்வளவு நல்லது. அங்கை இருக்கிறவைக்கு கொஞ்சம் தன்னும் அக்கறை இருக்கிறதாய்க் காணேல்லை'

□

''அந்தைக்கு சுழிபுரத்து மாமா வீட்டை போட்டுவரேக்க பெரிய சண்டையாய்ப் போச்சு'' என்றான் தாடி

இருக்கு மாடு மற்றக்கரையில நிடுதே யுது. ஒழுங்கையால வாறவை மாட்டின்ரை கயிற்றைக் கடந்துதான் போக வேணும். சயிக்கிள் காரர் எண்டால் சைக்கிளைத் தூக்கித்தான் வைக்கலாம்'' மாட்டுக்கரார் கெட்டிக்காரர் போல எப்படியிருக்கு

''மாட்டுக் காரரின்ரை வேலை. பாத்தியே மச்சான் ஏதோ தங்கடை வளவுக்குள்ளை கட்டுறமாதிரி ஒழுங்கையில கட்டியிருக்கினம்''

''நீ என்ன செய்தனி''

''எனக்கு ஆத்திரம் வந்திட்டுது. சைக்கிளை நிப்பாட்டிப் போட்டு மாட்டின்ரை கயிற்றை அவிழ்த்தன் அங்கால எங்கையோ நிண்ட மாட்டுக் கரார் கண்டபடிபேசிக்கொண்டு என்னோடை ச. டைக்கு




## அவகாசமில்லாத உனக்கு

இன்றும் பின்னிரவில்
தேய்பிறை நிலவு
தனியாக எழுந்துவருகிறது.
இருளில் மௌனம் பயிலும்
ஆற்றோர மரங்களூடே
எதிரியை எதிர்நோக்கும்
தயார்ப்படுத்தலுடன்,
பனிமூடும் கூதல் இரவில்
துப்பாக்கியைப் பிடித்தபடி
உன்
ஞாபகங்களைத் தேடுகின்றேன்.
மனசுக்கு நெருக்கமான தோழனைப்போல்

புகழ் பூத்த பாரதம் நம பக்கமென்று
எண்ணாத இடர் பலது வந்த போதும்
எதிர்த்தாட எம்மவர்கள் துணிவு பெற்றார்
மண்ணாகிப் போச்சுது காண் இந்த நாளில்
மனமதனில் வளர்த்த நம் பிக்கையாவும்.

வாக்குரிமை தனைப்பறித்து, மலையகத்தை
வளமாக்கும் தமிழருக்கு அடி கொடுத்து
நாக்குரிமை நமது மொழி உரிமை தன்னை
நசுக்குவதில் முன்னேற்றம் கொண்டு நின்று
ஊக்கமொடு சிங்களரை தமிழர் மண்ணில்
ஊடுருவி குடியேற்றம் செய்த தோடு
தாக்க முறச் செய்திட்டார் தமிழர் கல்வி
தரப்படுத்தல் முறையதனைக் கொண்டுவந்து.

— தொடரும்

## விண்வெளி . . .

(3ஆம் பக்கத் தொடச்சி)

தாகவோ இருக்க முடியாது என்பதை மேலும் ஊர்ஜிதப் படுத்தியது. வெள்ளியினுடைய தரை உஷ்ணம் மிகக் கூடியதுதான் என்பது முடிவாகத் தீர்மானிக்கப்பட்ட பின்னர், வெள்ளியின் மர்மங்களைத் துப்புத்துலக்கும் பணியிலே ஈடுபட்ட விஞ்ஞானிகள், அதன் தரைப்பகுதி உஷ்ணம் கூடியதாக இருப்பதற்குரிய காரணங்கள் என்ன? என்பதை அறியும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

வெள்ளியில் உள்ள உஷ்ணம் சூரியனில் இருந்து கிடைப்பதே. அதனை மேலும் அதிகரிக்கச் செய்ய உதவும் சாதனம் என்ன? சூரியனில் இருந்து கிடைக்கும் உஷ்ணத்தை மேலும் அதிகப் படுத்தும் தன்மை–கண்ணாடி வீட்டுப்பண்பு மட்டுத்தான். கண்ணாடி வீட்டுப்பண்பு, பூமியிலேகூட நிகழ்ந்துகொண்டிருக்கிறது. பூச் செடிகள், தாவரங்கள் ஆகியவற்றை வளர்ப்பவர்கள், கண்ணாடி வீட்டுக்குள் அவற்றை வைத்து வளர்ப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்.

இதன் மூலம், சூரியசக்தியை உள்ளே பெற்றுக் கொள்வதோடு, வெளிப்புறத்து உஷ்ண அளவிலும் பார்க்கக் கூடிய அளவிலே உஷ்ணத்தைச் சேமித்து வைக்க முடிகிறது. கண்ணாடிக் கூரையின் ஊடாக சூரிய ஒளி உள்ளே பிரவேசிக்கும் போது, அது அங்கே உள்ள தாவரங்களையும், நிலத்தையும் லேசாக வெம்மைப் படுத்துகிறது. வெம்மையைப் பெற்றுக் கொண்ட தாவரங்களும், நிலமும், தாம் பெற்றுக் கொண்ட உஷ்ணத்திலே ஒரு பங்கை மீண்டும் வெளியே வீசுகின்றன. ஆனால் இவற்றின் உஷ்ணம், வெளியில் உள்ள உஷ்ணத்திலும் குறைவாக இருப்பதனால், இவை ஆகாயத்தை நோக்கிச்செலுத்தும் வெம்மைக்கதிரின் அலை நீளம், நீண்டதாக இருக்கிறது. இந்த நீண்ட அலை நீளக் கதிர்கள் – கண்ணாடியின் ஊடாக சுலபத்தில் வெளியே சென்று விட முடியாது. நீண்ட அலைநீளக் கதிர்களை, கண்ணாடி தடுத்து விடுகிறது. உஷ்ணசக்தி, தப்பிச்செல்ல வழியற்றுப் போவதனால், கண்ணாடி வீட்டுக்குள் உஷ்ணம் அதிகரிக்கிறது. (தொடரும்) □

''விசயத்துக்கு வாறன் சுன்னாக பஸ் ஸ்ராண்டைப் பாத்தனியே''

''ஏன்'' என்று கேள்வி எழுப்பினான் சவுந்தரம்.

''அந்த பஸ் ஸ்டாண்ட் கிடக்கிற கிடையைப் பாத்தனியே''

''ஓமோம் பெரிய கிடங்குகளும் கல்லுக் குவியல்களும். பெரிய பயங்கரம்''

''அது மாத்திரமே. கூரையில்லாத, பஸ்சுக்குக் காத்திருச்கிற ஆக்கள் தங்கியிருக்கும் மண்டபமும் பெரிய அலங்கோலம்''

''உதைப் பற்றி நாங்கள் மினைக் கெட்டுக் கதைச்சு என்ன பிரயோசனம்''

''என்ன பிரயோசனமோ— உதைப் பற்றி பேப்பர்களுக்குக் கடிதம் எழுதுவம் எண்டு நினைச்சன்''

இனிமேல் தன்னும் உப்பிடியான இடங்களை எங்கடை ஆட்கள் திருத்தி செம்மையாக்கினமோ எண்டு பாப்பம்''

□

''உங்களுக்கு பஸ் ஸ்டாண்டைப் பற்றிக் கவலைப்படத்தான் தெரியும். சுண்டிக்குழி லைப்ரரிப்பக்கம் போய்ப்பாத்தனீங்களே'' எனக்கேட்ட சவுந்திரத்தை விக்கி நிமிர்ந்து பார்த்தான்.

'நீ எப்ப அங்கை போனனீ'

''அண்டைக்கு சச்சேரிக்குப் போரேக்க போனனான்''

''அங்கை என்ன விசேசம்''

''ஒரு விசேசமும் இல்லை. ஆனால் எல்லாப் பேப்பர்களும் ஒழுங்காக இல்லை

ரேக்க பெரிய சண்டையாய்ப் போச்சு'' என்றான் தாடி மாமா ''சண்டையோ-? நீயோ சண்டை பிடிச்சனி. எ ்னடாப்பா பகிடியே விடுகிறாய், உன்ரை உடம்புக்கும் தாடிக்கும் பாக்கத்தான பயமாய் இருக்கே ஒளிய நீ எவ்வளவு பயந்த ஆள் எண்டு எங்களுக்குத்தானே தெரியும். எண்பத்தியேழு அக்டோபரில

கரர் கண்டபடிபேசிக்கொண்டு என்னோடை சண்டைக்கு வந்திட்டார்.

''பிறகு என்ன நடந்தது''

''நான் விடேல்லை சனமும் சேர்ந்திட்டுது மாட்டுக் காரருக்கு அடிக்காத குறையாய் பேசிப்போட்டன்''

''கடைசியாய் என்னமாதிரி முடிஞ்சுது''



இந்தியன் ஆமி செல் அடிக்கேக்க கந்தசாமி கோயில் கோபுரத்துக்குக் கீழ நாலு நாளாய்ப்படுத்திருந்தது எங்களுக்குத் தெரியாதே'' என்று சிரித்தபடி விக்கி கேட்டான்.

''எட உந்தக் கதையை நிப்பாட்டிப் போட்டு நான் சொல்லுறதைக் கேள்''

''சரி சொல்லு''

''நா ஏ ஒழுங்கையால வரேக்க ஒழுங்கை வேலியில ஒரு மாடு கட்டியிருக்கு வழியை மறிச்சுக் கொண்டு மாட்டின்ர கயிறு

''அங்கை நிண்ட சில சனமும் சேர்ந்து பேச அவர் மாட்டோடை போயிட்டார்.

## அயக்கிரீவன்

''உப்பிடியான சனங்களை என்னடாப்பா செய்யிறது''

''கொஞ்சம் தன்னும் பொறுப்புணர்ச்சி இல்லாத சனங்களை எப்படிப் பழக்கி எடுக்கிறது எண்டதுதான் பிரச்சினை''

என்றான் தாடிமாமா. □

ஆண்டவன் ஒருவனைத் தவிர குற்றங் குறைகளே அற்றவரென்று வேறு எவரையும் சொல்வதற்கில்லை; அதே வகையில் இவ்வுலகில் குற்றமே உருவானவன் எனத்தக்கவனும் எவனும் இல்லை.

- மகாபாரதம்

★ ★

★ ★

துப்பாக்கிச் சன்னங்கள் - வார்த்தைகள் இரண்டிற்கும் வேறுபாடு என்ன? முதலாவது கொல்லும், இரண்டாவது கொல்லாமல் கொல்லும்.

- ஜேம்ஸ் அக்கியோ

★

ஞாபகங்களைத் தேடுகின்றேன்.
மனசுக்கு நெருக்கமான தோழனைப்போல்
காற்று;
நெஞ்சில் ஊதலுடன் ஊர்றுகிறது.

அன்பானவளே,
இந்த நேரத்தில்
ஊரின் சேவல்கள் குரல்வைக்கையில்
என்னுடைய ஞாபகங்களை
தூசி தட்டிப் பார்ப்பாய்.
எனக்குத் தெரியும்;
உன் படுக்கையில் என்னுடைய கடிதங்களை
மீளவும் படித்துப் பார்த்துக் கொண்டிருப்பாய்.

இரவு சோரமாக
என் பிரிவினை உணர்த்தும்.
ஆயினும்;
காலத்தை நேசித்துக் கொள்.
எ னுடைய காலத்தை
இருளில் தேடும் ஆராய்ச்சியில் நீ
அ பினைச் செலுத்துகிறாய்.

காற்றும் சூரியனும்
கனத்த காரிருட்டும்
புனலும்,
என்னுடைய தோழமைகளாயினும்
உன்னையும் நேசிக்கிறேன்
மக்களைப் போல்.

தனிமையில்
எங்காவதோர் குயில்
குரல் வைக்கையிலும்
உன்னையே ஞாபகப்படுத்துகிறேன்
விடுதலையைப் போல்.

காலத்தை நேசித்துக்கொள்.
இந்தத் தேசத்து விடுதலையில்தான்
நம் வாழ்வின்
உன்னதங்கள் புதைந்துள்ளன.

காத்திருப்பது
உனக்கொரு வேதனையானால்
என்னுடைய ஞாபகங்களை
ஒரு பிடி சாம்பராக்கி
எங்காவதோர் ஆற்றில் கரைத்துவிடு.

கதவைச் சாத்தி
நன்றாகத் தாழிட்டுக்கொள்.
பாதுகாப்பாக இருக்குமென நினைப்பாய்.
ஜன்னலைத்திறந்து
எதிரியின் துப்பாக்கி நீளும்போது
எ னுடைய பயணம் புரியும்.
ஆனால்;
புரிந்து கொள்வதற்கு
உனக்கு அவகாசமிருக்காது.

-எஸ் . கருணாகரன்

# வடக்கு-கிழக்கை ஆயிரம்நாட்கள் ஆக்கிரமித்த இந்தியபடைகள்

# ஐயாயிரம் தலைவாங்கிய நவீன சிந்தாமணிகள்

"இந்தியப் பிரதமருக்கும் - இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை வாசகங்களின் அடிப்படையில் எமது நடவடிக்கைகளை நாம் சரிவரச் செய்வோம். இதனை விடுதலைப்புலிகளுக்கு கூறிக் கொள்கிறோம். தமிழ்த் தீவிரவாதிகள் இன்னமும் தங்கள் ஆயுதங்களை இந்திய அமைதி காக்கும் படையிடம் ஒப்படைக்கவில்லை. அவர்கள் ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால் நாங்கள் ஆயுதங்களைத் தேடிப்போகவேண்டி ஏற்படும்."

லெப் ஜெனரல் திபேந்தர்சிங் (பி.பி.சிக்கு கொடுத்த பேட்டி-1987 ஜுலை இறுதி வாரம்)


"தீவிரவாதிகள் ஆகஸ்ட் மூன்றாம் திகதிக்குள் தம்மிடம் உள்ள ஆயுதங்களை என்னிடம் அல்லது நான் நியமிக்கும் ஒருவரிடம் ஒப்படைப்பார்கள். இந்த ஆயுதங்களில் பிரபாகரனின் வாள் ஒன்றும் அடங்கும். அந்த வாளை நானே எடுத்து வந்து சிறீகோத்தாவில் உள்ள முன் மண்டப வாசலில் தூக்குவேன்.

தலைப் புலிகள் அப்போது விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்கள்.

"இந்த ஒப்பந்தம் இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தம். விடுதலைப்புலிகளுடன்



செய்யப்பட்டதல்ல. இந்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுடன் கலந்து பேசி செய்யப்பட்ட ஒப்பந்தமும் அல்ல. இந்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகளால் ஏற்றுக் கொள்ளப்



நன்றி: தி ஐலண்ட்

இடங்களில் ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் விலக்கிக் கொள்ளப்படும். யாழ். மாநகரசபை ஆணையாளர் சிவஞானத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும்படி எம்மிடம் கேட்ட எம். ஜீ. ஆரிடமும்

தலைப்புலிகள் மீது ஒப்றேசன் பவான், ஒப்றேசன் புயல், ஒப்றேசன் மகாதியாகம், ஒப்றேசன் விராட், ஒப்றேசன் செக்மேற் என பல பெயர்களில் தாக்குதல் நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டே போனது.

நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்திற்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் கோரிக்கை விடுத்து சாகும் வரை உண்ணாநோன்பு மேற்கொண்ட அன்னை பூபதி தியாக மரணமடைந்தார்.

தள்ளப்பட்டனர்.

## புதிய சூழல்

1987ஆம் ஆண்டு இலங்கையின் ஜனாதிபதியா விருந்த ஜே. ஆர், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் பார்த்து விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டு வாருங்கள் என்றார். இதனால் ராஜீவின் இராஜதந்திரமற்ற அணுகுமுறையால் இரண்டு ஆண்டுகள் போர் நடந்தது. முடிவில் ராஜீவ் சாந்தி இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவைப்

பேச்சு வார்த்தையின் போது விடுதலைப்புலிகள் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இன்று இத் திருத்த சட்டத்தை நீக்க அரசு ஆலோசித்து வருகிறது. இந்தத்திருத்த சட்டத்தை நீக்காவடின் நாடு பிளவுபட்டு விடும் என ரஞ்சன விஜய



ரத்னா இப்போது கூறிவருகின்றார்.

## அழைத்தவர்களே அனுப்பினார்கள்

அன்று ஜனாதிபதியாக விருந்த ஜே. ஆரும் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக விருந்த அத்துலத் முதலியும் இலங்கைப் போராளிகளை ஒடுக்க இந்தியப்படைகளை

## ஆயிரம் நாட்களில் எத்தனை மாற்றம்

இந்தியப்படை 1987 ஜுலை 29 ஆம் திகதி மாலை தொடக்கம் 1990 மார்ச் 24 ஆம் திகதி வரை இலங்கைக்குள் நின்றுள்ளது. ஏறக்குறைய ஆயிரம் நாட்களில் தான் எத்தனை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தியப்படை ஈழத்திற்குள் புகுந்த போது புதுடில்லியில் பிரதமராக ராஜீவ் இருந்தார். சென்னையில் முதல்வராக எம். ஜி. ஆர். இருந்தார். கொழும்பில் ஜனாதிபதி ஜே. ஆர். இருந்தார். இன்று புதுடில்லியில் பிரதமராக வி. பி. சிங் இருக்கிறார். சென்னையில் தமிழ் நாடு முதலமைச்சராக மு. கருணாநிதி இருக்கின்றார். கொழும்பில் ஜனாதிபதியாக பிரேமதாசா இருக்கிறார். கடந்த இரண்டு ஆண்டு காலம் வடக்கு - கிழக்கில் அக்கிரமங்களும் அநியாயக் கொலைகளும் புரிந்த தேசத் துரோகிகள் இன்று ஒரிசாவின் அகதி முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். களத்தில் நின்று போராடிய விடுதலைப்புலிகள் மக்கள் மத்தியில் நிற்கிறார்கள். வடக்கும் கிழக்கும் அவர்களது பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த முப்பதிரண்டு மாதங்களில் தான் எத்தனை மாற்றத்தைப் பார்க்கிறோம்.

## நிகழ்வுகளும் வரலாறும்

விடுதலைப் புலிகள் மீது இராணுவ நடவடிக்கை எடுத்தால் அவர்களை 72 மணித்தியாலயங்களுக்குள் நிராயுதபாணிகளாக்கி எமது கட்டுப்

> இந்தியப்படை இங்கிருந்து முற்றாக விலகிச் செல்வது தமிழ்-முஸ்லிம் மக்களின் மண் பற்றுக்கும் மன வலிமைக்கும் கிடைத்த வெற்றியாகும்
>
> - தளபதி மாத்தயா
>
> விடுதலைப்புலிகளின் இராணுவ பலமும் வெற்றியும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுவிட்டது. இனி அரசியலில் ஒரு நிலையைப் பெறுவதற்கு நாங்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.
>
> - தளபதி கிட்டு (லண்டனிலிருந்து)
>
> ஈழமண்ணிலிருந்து இந்தியப்படையைத் திருப்பி அனுப்பியது ஒரு வரலாற்று சாதனையாகும். உலக யுத்தங்களின் சரித்திரத்தில் எமது விடுதலைப் போராட்டம் பாராட்டத்தக்க ஒரு சாதனையாகப் பொறிக்கப்படும். இந்தச் சாதனையைப் புரிந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர பிரபாகரனின் தளராத மன உறுதியும் இராஜதந்திர சாணக்கியமும் மறைந்த போராளிகளின் அற்புதமான தியாகங்களும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு மக்கள் அளித்த ஆதரவுமே காரணமாகும்.
>
> - கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

வட - கிழக்கு இணைந்த மாநிலசபைக்கு ஒரு கவர்னர் இருப்பார். அவரை நானே நியமிப்பேன். நான் நினைத்தால் தேவை ஏற்படின் மாநில கவர்னரை முதல் அமைச்சரை, மாநில மந்திரிசபையை, மாநிலசபையை நினைத்தமாத்திரத்தில் கலைப்பதற்கு எனக்கு அதிகாரம் உண்டு."

சிறீகோத்தாவில் 1987ஜுலையில் ஜே. ஆர். பேச்சு.

படக்கூடிய ஒரு ஒப்பந்தமும் அல்ல. ஏனெனில் அது தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின் செய்யப்பட்ட ஒப்பந்தமாகத் தெரியவில்லை. அது தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைப் பிரதிபலிக்கவில்லை.

இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களது அபிலாஷைகளைப்

நாம் சில வினாக்களை எழுப்பியுள்ளோம்"

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிடிவாதப் போக்கினால் ஈழத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் இந்திய இராணுவத்தால் சுட்டுக் சொல்லப்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

இந்த நிலையில் யுத்த நிறுத்தம் கோரிக்கையை விடுத்த மேஜர் ஜெனரல் ஹர்கிரட்சிங்



## பிரேமா உடன்படல்

ராஜீவின் பிடிவாதப் போக்கு தொடர்ந்து கொண்டே இருந்தது. விடுதலைப்புலிகளை இந்திய இராணுவத்தால் இராணுவ ரீதியாகவும் தோற்கடிக்க முடியாது. அரசியல் ரீதியாகவும் வென்றெடுக்கமுடியாது எனக் கண்ட. ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப்புலிகளுடன்

> விடுதலைப் புலிகளைப் பற்றியும் அவர்களிடமிருந்த ஆயுத பலம் பற்றியும் சில இலங்கையர்களும் இந்திய உளவு ஸ்தாபனமும் எமக்கு தவறான தகவல்களையே தந்தார்கள். விடுதலைப்புலிகளிடம் 700 துப்பாக்கிகள் மட்டுமே இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் நாம் 2000 துப்பாக்கிகளைக் கைப்பற்றினோம். அதாவது மூன்று மடங்கு தொகை ஆயுதக்களைவு செய்துள்ளோம். இது ஒரு அரசியல் பிரச்சினை. இதில் இராணுவத்தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை. 1987 ஒக்டோபர் தொடக்கம் இற்றைவரை 1155 ஜவான்களை இழந்துள்ளோம். 5 கேணல்கள் இறந்துள்ளனர். 2987 பேர் காயமுற்றனர். மூன்று பேர் காணாமற் போயினர். ஒருவருக்கு என்ன நடந்தது என்பதே தெரியாது.
>
> - இலங்கையில் அமைதி காக்கும் படை தளபதி
> லெப். ஜெனரல் ஏ. எஸ். கல்கத்
>
> இலங்கைக்கு இந்தியா தனது படைப்பிரிவை அனுப்பியதே பெரும்தவறு.
>
> - ஏ. பி. வெங்கடேஸ்வரன்
>
> இலங்கை மண்ணைவிட்டு வெளியேறிய இந்தியத்துருப்புகளின் கடைசி அணியான ஒன்பதாவது பராகொமாண்டோ ரெஜிமண்ட் லெப். கேணல் ஹர்தேவ் லிதர் இலங்கையை விட்டுப் புறப்படுமுன் கூறிய கடைசி வார்த்தை பின்வருமாறு:

மாநில மந்திரி சபையை, மாநிலசபையை நினைத்தமாத்திரத்தில் கலைப்பதற்கு எனக்கு அதிகாரம் உண்டு.''

சிறீகோத்தாவில் 1987ஜூலையில் ஜே. ஆர். பேச்சு.

பாரதத்திலுள்ள தமிழர்களுக்கு எந்தளவு சுயாட்சி இருக்கின்றதோ அந்தளவுக்கு இலங்கைத் தமிழருக்கும் சுயாட்சி வழங்க இலங்கை - இந்



திய ஒப்பந்தம் வழிவகுக்கின்றது. இலங்கைத்தீவின் மூன்றில் ஒரு பங்கு நிலம் இப்போது தமிழர் ஆட்சியில் இருக்கின்றது. காலம் காலமாக இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்கள் கலாசாரப் பாரம் பரியத்துடனும் கௌரவத்துடனும் வாழ வழி வகுக்கப்படும்.

ராஜீவ்காந்தி 2. 8. 87 இல் மெரினா கடற்கரையில் பேசியது.

மேலே கூறப்பட்ட பீடிகைகளோடும் யுத்த முஸ்தீபுகளோடும் போலி வாக்குறுதிகளோடும் தன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அமுலாக்கல் 1987 இல் ஆரம்பமானது.

## விடுதலைப் புலிகள் அறிக்கை

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை திணித்து தமிழீழப் போராட்டத்தை நசுக்க இலங்கை - இந்திய கூட்டரசுகள் இரண்டும் எடுத்த முயற்சியைப் புரிந்து கொண்ட விடு

...மக்களின் அடிப்படை அபிலாஷைகளைப் பிரதிபலிக்கவில்லை.

இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்றது என இந்தியா கருதினால் அதன் அமுலாக்கத்திற்கு நாம் தடையாக இருக்கமாட்டோம்.

இந்த அறிக்கையைப்படித்த ராஜீவ் காந்தி வெகுண்டு எழுந்தார். எல்லா இயக்கங்களும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டபின் ஒரு இயக்கம் மட்டும் அதனை நிராகரிப்பது என நியாயம் என கொக்கரித்தார். தனது படைகளுக்கு விடுதலைப் புலிகள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார். 1987 அக்டோபர் 10 ஆம் நாள் யுத்தம் தொடங்கியது.

வந்தால் சுட்டுக் கொல்லப்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

இந்த நிலையில் யுத்த நிறுத்தம் கோரிக்கையை விடுத்த மேஜர் ஜெனரல் ஹர்கிரட்சிங் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே 1988 ஏப்ரல் மாதம் யாழ்ப்பாண நிலைமைகளை அவதானித்துவிட்டு யு. என். ஐ. நிருபருக்கு ஒரு பேட்டி கொடுத்தார். அதில் அவர் சொன்னார்.

''விடுதலைப்புலிகள் தமிழ் மக்களைப் பாதுகாக்கவும் அவர்களது சௌரவத்தைப் பேணவும் போரிட்டு வருகின்றனர். எனவே தமிழர்களின் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக அவர்கள் விளங்கி வருகின்றனர். யாழ்ப்பாண மக்களில் 80% பேர் அவர்களை முழு அளவில் ஆதரிக்கிறார்கள்.

ணுவத்தால் இராணுவ ரீதியாகவும் தோற்கடிக்க முடியாது. அரசியல் ரீதியாகவும் வென்றெடுக்கமுடியாது எனக் கண்ட ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சவார்த்தைக்கு உடன்பட்டார். நிபந்தனையற்ற பேச்சுவார்த்



இலங்கையில் தங்கியிருந்த இந்திய அமைதிப்படையினருக்கு 1987 முதல் 1990 ஜனவரிவரை இந்திய ரூபாய்294 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- இந்திய பாதுகாப்பு, இணை அமைச்சர்
பேரா. ராஜா ராமண்ணா

எமது போராட்டத்தின் மூலமாக 1356 வீரவேங்கைகளையும் 26000க்கு மேற்பட்ட பொதுமக்களையும் (1982 - 1990 வரை) இழந்த நிலையில் அவர்களது கல்லறைகளுக்கு மண்போட்ச் சென்றுதான் ஒரு அமைதியான சூழ்நிலையை இப்போது பெற்றுள்ளோம்.

- விடுதலைப்புலிகள்

## யுத்த நிறுத்தம்

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது யுத்த நிறுத்தம் கோரி பலரும் முன்னாள் பிரதமருக்கு விண்ணப்பம் செய்தனர். ஆனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. யுத்த நிறுத்தம் பற்றிய கோரிக்கைக்கு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1987 நவம்பர் மாதம் 4-ஆம் திகதி நேபாளத்தின் தலைநகரம் காட் மண்டுவிலிருந்து இந்தியா திரும்பிய போது பின்வருமாறு பதில் கொடுத்தார்

''யுத்த நிறுத்தம் என்பது விடுதலைப்புலிகளின் கையில் தான் தங்கியுள்ளது. விடுதலைப்புலிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு நாங்கள் குறிப்பிடும்

யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் கோட்டையாகவிருக்கிறது. இனிமேலும் அது புலிகளின் கோட்டையாகவே இருக்கும். விடுதலைப்புலிகள் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக புத்திசாலித்தனத்துடனும், தந்திரத்துடனும் போரிட்டுவருகிறார்கள். புலிகள் தினமும் இராணுவ வாகனங்களைத் தகர்க்கிறார்கள். இதனால் தினமும் இந்திய இராணுவத்திற்குப் பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது''

ஈழத்தின் யதார்த்த நிலைமையை எடுத்துச் சொன்ன அந்த இராணுவ அதிகாரி பழிவாங்கலாக இடமாற்றம் செய்யப்பட்டார். ராஜீவ் காந்தியின் அரசாங்கம் விடு

தைக்கு இந்தியா மறுத்தமையும் விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு பிரேமதாசா உடன்பட்டமையை அரசியல் சூழ்நிலையை தலைகீழாக்கியது. இதன் விளைவாக இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதியும் தமிழ் மக்கள் சார்பில் விடுதலைப்புலிகளும் தீவிரமாக முன் எடுத்தனர். தமிழ் மக்களிடமிருந்தும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்தும் அந்நியப் படுத்தப்பட்ட இந்திய அரசும் அதன் இராணுவமும் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கே

இலங்கை மண்ணைவிட்டு வெளியேறிய இந்தியத்துருப்புகளின் கடைசி அணியான ஒன்பதாவது பரா கொமாண்டோ றெஜிமண்ட் லெப். கேணல் ஹர்தேவ் லிதர் இலங்கையை விட்டுப் புறப்படுமுன் கூறிய கடைசி வார்த்தை பின்வருமாறு:

''இப்படியான துரதிஷ்டமான நிகழ்வு இனி என்றுமே எனது தாய் நாட்டிற்கு ஏற்படக் கூடாது குறைவான இழப்புகளுடன் நாம் நிறைவான படிப்பினைகளைப் பெற்றுள்ளோம்''

பார்த்துவிடுதலைப்புலிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டு வாருங்கள் என்றார்.

## புலிச்சின்னம்

1978 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தடைச் சட்டத்தை கொண்டு வந்த ஜே. ஆர். புலிகள் இயக்கத்தையும் புலிச் சின்னத்தையும் தடை செய்தார். இப்போது புலிகள் இயக்கம், மக்கள் முன்னணியாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதனை ஒரு அரசியல் கட்சியாகத் தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்துள்ளார். அன்று தடை செய்த புலிகள்

வரவழைத்தார்கள். அப்போது ஜே. ஆர். பின்வருமாறு சொன்னார். தமிழ்ப் போராளிகளுக்கு எந்த சக்திகள் உறுதுணையாகவுள்ள

பாட்டிற்குள் கொண்டு வந்து விடுவோம் என அன்று புதுடில்லியுள்ள இந்திய 'றோ' அதிகாரிகள் சொன்னார்கள். ஒரு நாள் மாலையில் விடு

## அருண் பிரசாத்

னவோ அந்த சக்திகளையே இன்று தமிழ்த் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் பங்காளிகளாக்கியுள்ளோம் என்றார். ஆனால் இன்று எந்த சக்தி

தலைப் புலிகள் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் மறுநாள் விடிவதற்குள் விடுதலைப் புலிகள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைபற்றி புதுடில்லியின் கொள்கை தோல்வியுற்று தற்பொழுது பூரத்தியாகியுள்ளது. புலிகளின் கெரில்லாத் திறமையை எடுத்துப் பார்க்கையில் அண்டை நாடான ஒரு சிறிய நாட்டின் மீது தனது பலத்தைக் காட்ட இந்தியா எடுத்த முயற்சி முதல் முறையாக முறியடிக்கப்பட்டுள்ளது.

- பாலரா குறெசெட் (நியூயோர்க்ரைம்ஸ்)

கோவா, சிக்கிம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடந்துகொண்டதற்கு முரணாக சிறிய அயல் நாடான இலங்கையில் இந்தியா தனது அதிகார விஸ்தரிப்பை நிலைநிறுத்த முடியாது போய்விட்டது. 1947 இல் இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் அதற்குக் கிடைத்த இத்தகைய முதல் அனுபவம்இதுதான். அமைதிப்படையை வெளியேற வைத்தது ஒரு பெரிய தேசிய சாதனையாகும்.

- பேரா. புல்ஜின்ஸ் கூற்று.

சின்னத்தை இன்று அரசாங்கம் அங்கீகரித் விட்டது.

## ஆறாவது திருத்தம்

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து அரசியல் அமைப்புக்கு ஆறாவது திருத்தம் ஒன்றை ஜே. ஆர். கொண்டு வந்தார். இந்தத் திருத்தம் தனிநாடு கோரிக்கையைத்தடை செய்தது. இந்த திருத்தத்தைக்கொண்டு வராவிடின் இலங்கை இரண்டாகப் பிளவு பட்டு விடும் என அப்போது சொன்னார். பிரேமா - விடுதலைப்புலிகள்


களை விடுதலைப்புலிகளை ஒடுக்கஇந்திய இராணுவத்தை நாட்டினுள் கொண்டுவந்தார்களோ அதே சக்திகளைப் பயன்படுத்தியே இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் இராஜதந்திர ரீதியாக புலிகள் வெற்றி பெற்றுள்ளனர். ஆயுத பலத்திலும், ஆட்பலத்திலும், ஆன்மீக பலத்திலும் மட்டுமல்ல இராஜதந்திர பலத்திலும் புலிகள் மேலோங்கியுள்ளனர்.



# சிறுவர் பகுதி




## விடுதலை வீரர் கதை (1)



நீக்ரோமக்கள் தலைவர் நெல்சன் மண்டேலா

அன்புச் சிறுவர்களே. நீங்கள் எந்நேரமும் துடிப்புடன் இருப்பவர்கள். கைகள் துருதருவென எதையாவது செய்யத் துடிக்கும். நல்லகாரியங்களைச் செய்யத்துடிப்பீர்கள். நல்ல கதைகளைப் படிக்க விரும்புவீர்கள். இத்தகையகாரியங்களைச் செய்யத் துடிக்கும் உங்களை எதுவுமே செய்யவிடாது கட்டிப் போட்டால் உங்களிடம் ஓர் உணர்வு தோன்றுமல்லவா! எப்படியாவது விடுதலை பெறவேண்டும் சுதந்திரயாக செயலாற்ற வேண்டும் என்றஎண்ணம் உங்களுக்கு எற்படும். இப்படி உங்களைக் கட்டிப் போட்டதுபோல ஒரு இனத்தை கட்டிப்போட்டாலும் உங்கள் உணர்வே அவர்கட்கும் எற்படும்.

பூமி உருண்டை வடிவானது. இது ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ் ஐந்து கண்டங்களில் ஒன்றான ஆபிரிக்காவில் உள்ளமக்கள் அனைவரும் கறுப்பர்கள். அவர்களை நீக்ரோக்கள் என்பர். இந்த நீக்ரோக்களுக்கு தென் ஆபிரிக்கா என்ற நாடு உள்ளது. முன்னர் வெள்ளையர்கள் உலகின் நாடுகளையெல்லாம் பிடித்து அடிமைப்படுத்தினர். அவர்களின் கீழ் தென் ஆபிரிக்காவும் அடிமையாயிற்று. வெள்ளையர்கள் பிற்காலத்தில் எல்லா நாடுகட்கும் சுதந்திரம் தந்தனர். ஆனால் தென் ஆபிரிக்காவிற்கு [illegible]ரவில்லை. அங்குள்ள மதிப்புமிகு தங்கமும் வைரமும் அ[illegible]ண்ணை விட்டு அகல விடவில்லை. அதனால் அங்கு தங்கினர் வெள்ளையர். அங்கு முக்கால்பங்கு நீக்ரோக்கள். கால்பங்கு வெள்ளையர்களை விட கூடுதலாக இருந்தவர்கள் நீக்ரோக்கள். ஆனால் அவர்களை கால் பங்கு வெள்ளையர்கள் தம் ஆயுத பயத்தால் அடங்கிவந்தனர். உங்களை அடக்கிவைத்தால் விடுதலை பெறத் துடிப்பீர்கள் அல்லவா. அதுபோல அந்தக் கறுப்பு இனத்தவரும் தாம் விடுதலைபெற வெகுண்டு எழுந்தனர். வெள்ளையர்கள் கறுப்பர்களை நாய்களை விட கேவலமாக நடத்தினர். தம்மருகே கூடஅணுக விடவில்லை. அவர்களின் நாட்டிற்குள்ளேயே வந்து அவர்களது நாட்டாண்மையைப் பாருங்களேன்.

காடுகளிலும் மேடுகளிலும் வெள்ளையரை ஒழிப்பதற்காக இயக்கத்தைதொடங்கினர். சிறுவர்கள் முதல் பெரியோர்வரை ஆயுதப் பயிற்சிபெற்றனர்- இத்தகைய பயிற்சி [illegible]

## மந்திர இலக்கங்கள்

□ உங்கள் நண்பனை இரண்டு இலக்கம் கொண்ட ஓர் எண்ணை நினைக்கச் சொல்லுங்கள் பின் அவ்வெண்ணை 20ல் பெருக்கச் சொல்லுங்கள் பெருக்கி வந்த விடையுடன் முன் அவர் நினைத்த எண்ணைக் கூட்டச் சொல்லுங்கள்.

இப்போது அவரது விடையைக்கேளுங்கள் அந்த விடையை 481ல் உடன் பெருக்குங்கள் என்ன ஆச்சரியம்!

அந்த விடை உங்கள் நண்பன் நினைத்த எண்ணினை மூன்று தடவை கொண்டதாக இருக்கும்:

□ கீழ்க்காணும் இலக்கங்களை பெருக்கி அதன் விடையையும் சேர்த்துப் பாருங்கள் ஒவ்வொரு வரியிலும் ஒன்றுமுதல் ஒன்பது வரையிலான எல்லா இலக்கங்களும் இருக்கக் காண்பீர்கள்.

12 X 483 = 5796
42 X 138 = 5796
18 X 297 = 5346
27 X 198 = 5346

எப்படி எண்களின் வினோதம்......

மேற் குறிப்பிட்ட எண் வினோதம் போன்று உங்களுக்கு தெரிந்தவை ஏதும் இருந்தால் எழுதி அனுப்புங்களேன்... பிரசுரிக்கிறோம்.

ஆ-ர்

## உண்மைச் செய்திகள்

□ ஒளி மிகவேகமாகப் பிரயாணப் படக்கூடியது, ஒரு வினாடிக்கு அதன் வேகம் 1,86,281 மைல்களாகும். சூரிய ஒளி பூமியை வந்து சேர சுமார் 8 நிமிடங்களாகின்றன. இந்த எட்டு நிமிடத்தில் அவ்வொளி பிரயாணம் செய்யும் தூரம், 93 மில்லியன் மைல்களாகும்.

□ ஒரு அரிசி மணியில் 1100 எழுத்துக்களை எழுதி சாதனை புரிந்துள்ளார் ஒருவர் 30 வயதான வி[illegible]ய்சர்மா என்ற இந்தியாவின் ராஜஸ்தான் மானிலத்து ஜோத்பூர் கிராமத்துஇளைஞனே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளவர். இந்த எழுத்துக்களை உருப்பெருக்கிக் கண்ணாடி மூலமே காணமுடியும்.

□ ஒரு மனிதனின் நாசித் துவாரம் 5 கோடிக்கும் அதி[illegible]

## அன்புத் தம்பி, தங்கையரே

சென்ற இதழ் 'துருவன்'
உங்களை நன்கு கவர்ந்திருக்கிறான்
என்பது நீங்கள் அனுப்பி வைத்துள்ள
கடிதங்கள் விடயங்கள் மூலம்
தெரியவருகிறது - நன்றி

தொடர்ந்து அறிவினையும், ஆற்றலையும்
வளர்க்கும் விடயங்களை இப்பகுதியில்
தரவுள்ளோம்.

நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகிய
நீங்கள் அறிவுடையோராய் உயர
வேண்டுமென்பதே அண்ணாவின் விருப்பம்.

மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்

தமிழண்ணா

## ○ ரஷ்ய குட்டிக்கதை
## முயற்சியுடையார் ....

சிறிய கறுப்பு எறும்பு ஓடியது. வீட்டிற்கு அவசர அவசரமாக வந்து கொண்டிருந்தது. கசகசாச் செடி விதையைத் தன் எறும்புக் குட்டிகளுக்கு எடுத்து வந்தது. வழியில் பெரிய இனிப்பான வாசனையான பூசணிக்காய் விதையைப் பார்த்தது. எறும்பு கசகசாச் செடி விதையை ஒரு பக்கமாக வைத்து முதுகில் பூசணிக்காய் விதையை எடுத்துக் கொண்டது. ஆனால் அதை அப்படி எடுத்துச் செல்ல முடியவில்லை. அது கீழே விழுந்தது. எறும்பு அதை மீண்டும் முதுகில் ஏற்றியது. மீண்டும் விதை கீழே விழுந்தது. இப்படி அது பல தடவை பூசணிக்காய் விதையை முதுகில் ஏற்ற, அது மீண்டும் மீண்டும் கீழே விழுந்து கொண்டிருந்தது.

யாரோ மெதுவாகச் சிரிப்பது எறும்புக்குக் கேட்டது.

பார்த்தால் சாலையோரத்தில் தும்பி ஒன்று உட்கார்ந்திருந்தது.

"நீ ஆயிரம் தடவையாவது விதையை எடுத்து முதுகில் வைத்திருப்பாய் உனக்கு அலுக்க வில்லையா''? என்று தும்பி கேட்டது "உன்னால் ஒன்றுக்கும் முடியாது விதையை விட்டுவிட்டுப்போ''

'' யார் துரதிர்ஷ்டத்தை எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களாலே ஒன்றும் முடியாது'' என்று எறும்பு பதில் சொன்னது

மீண்டும் விதையை எடுத்து முதுகில் வைத்துக்கொண்டு வீடு நோக்கிச் சென்றது. பின்பு விதை கீழே விழவேயில்லை,

எவ்வளவு விடாமுயற்சியுள்ள எறும்பு. பார்த்தீர்களா!

## ○ உலகில் பெரியவை

ஆதாரம் THE GREATLIFCO DICTIONARY
வெளியீடு. THE LITTLE FIOWER COMPANY
Madras
பக்கம் (APPENDIX) A - 58

1 உயர்ந்த கட்டிடம் - சோவியத் மாளிகை (மாஸ்கோ, உயரம் 1365 அடி)
2 பெரிய கட்டிடம் - Pyramid at Gizeh (எகிப்து)
3 உயர்ந்த தேவாலயம் - Ulm- Cathedrai (ஜேர்மனி, உயரம் 529 அடி,
4 பெரிய தேவாலயம் - சென் - பீற்றர்ஸ் (றோம்)
5 பெரிய நகரம் - இலண்டன்
6 பெரிய பாலைவனம் - சகாரா (ஆபிரிக்கா 31/2 மில்லியன் சதுரமைல்)
7 பெரிய தீவு - கிறீன்லன்ட் (327300 சதுரமைல்)
8 பெரிய நூலகம் - லெனின் தேசிய நூலகம் (மாஸ்கோ)
9 உயர்ந்த மலைச்சிகரம் - எவரெஸ்ட் (29028 அடி)
10 பெரிய நூதனசாலை - பிரிட்டிஸ் நூதனசாலை.
11 பெரிய கடற்படை - பெரிய பிரித்தானியா.

## கையிலே கலைவண்ணம்



மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். பலவித விலங்குகள் பறவைகள் ஆகியவற்றின் நிழலுருவங்களைக் காண்கின்றீர்கள். இவை எப்படிச் செய்யப்படுகின்றன. வெகு இலகு, உங்கள் இரு கைகளையும் கறுப்பு நிழல் படும்இடத்தில் வைத்துக்கொள்ளுங்கள், கைகளை மேற் படத்தில் உள்ளது போல் அமையுங்கள். இன்னோரன்ன உருவங்களை நிழல்களாகக் காணலாம். மேலும் முயன்று வேவவேறு உருவ அமைப்புக்களை உருவாக்குங்கள்.

பட உதவி: மக்கிஸ்பன்

### நியூட்டனின் பல் விலை

அப்பிள் பழம் மேலிருந்து விழுவதைக் கண்டு பூமிக்கு ஈர்க்கும் விசை உண்டெனக்கூறிய அறிவு மேதையான சேர் ஐசாக் நியூட்டனை உங்களுக்கு தெரியும் தானே. இவர் இறந்தபின் இவரது பல் ஒன்று 3650 டொலர்களுக்கு விற்கப்பட்டதாம். [இலங்கையில் ஒருலட்சத்திற்குமேல்] இதனை 1816இல் செப்பிஸ் பியூரி என்ற பிரபு வாங்கினார்.

### ஊசிமழை

அமெரிக்காவின் ஹரோட்ஸ் பேக் என்ற இடத்தில் 1856 இல் ஒருநாள் உருக்கு ஊசிகள் மழையாகப் பொழிந்ததாம் மழை பெய்ய தென்றால் கடல்நீர் ஆவியாகி அது முகிலாகி பின் குளிர்ந்துமழையாக வேண்டும். உருக்கு ஊசிகள் எப்படி ஆவியாகும். மழையாகும் வேறு ஒன்றுமில்லை. அந்த இடத்திற்கு அண்மையில் அமைந்த ஊசித் தொழிற்சாலையிலிருந்து சூறைக் காற்று எடுத்து வந்து பொழிந்ததாம் இவ் ஊசி மழை.

ஊட்டி அவர்களது தலைவராக விளங்கியவர் யார் தெரியுமா?

அவர்தான் நெல்சன் மண்டேலா என்ற கறுப்பின புரட்சியாளன். அந்தப்புரட்சியாளனைப் பற்றி நீங்கள் நிச்சயம் தெரிந்து கொள்ளவேண்டும். அகிம்சையைப் போதித்த புரட்சிவாதியான காந்தியைப் போல இவரும் ஒரு புரட்சியாளர் தான். நீங்கள் மகாத்மா காந்தியை காந்தித் தாத்தா என்று அழைப்பீர்கள். இனி பண்ணைநேசித்த மண்டேலாவை மண்டேலா மாமா என்றழைப்பீர்களா?

சரி அடுத்தமொட்டில் மண்டெலாமாமா பற்றிக் கூறுகின்றேனே!

-லிங்கன்.

இழையங்களால் ஆனவையாம், ஆனால் ஒரு முயலின் நாசித்துவாரமோ 100 கோடிக்கும் அதிகமானது.

□ முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஜோன் F. கென்னடி அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே மிக வேகமாகப் பேசுபவர் எனப் புகழ் பெற்றவர் 1961ம் ஆண்டு டிசம்பர் மாதம் பேசியபேச் சொன்றின் போது நிமிடத்திற்கு 327 சொற்கள் என்ற வேகத்தில் பேசினார்.

13 கூடிய வெப்பம் கொண்ட இடம் - அஸிஸியா (Azizia) லிபியா 136 பாகை
14 பெரிய நட்சத்திரம் - யுப்பிட்டர்
15 நீளமான ஆறு - மிசூறி மிசுசிப்பி (வட அமெரிக்கா 6679 K M)
16 பெரிய கப்பல் - குயீன் எலிசபத்
17 பெரிய கண்டம் - ஆசியா
18 பெரிய அரண்மனை - வத்திக்கான் (இத்தாலி)
19 நீளமான புகையிரதமேடை - சொனீபூர் (Sonepur) இந்தியா 2400 அடி
20 நீளமான புகையிரதநிலையம்- Grand Central Terminus (நியூ யோர்க், 47 மேடைகள்)
21 உயரமான கோபுரம் -ஈஃபல் (Eiffel) (பரிஸ்)
22 நீளமான குகை - ஸிம்லொன் ( Simplon )
23 பெரிய சுவர் - சீனப் பெருமதில

**தொகுப்பு: கோப்பாய் மதிவண்ணன்**

## வாரம் ஓர் அறிவுரை

□ கடமை உணர்வு உங்கள் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமான விடயமாகும்.

□ சோம்பல், முயற்சியின்மை, தன்னம்பிக்கையின்மை, அலட்சியம் ஆகியவை ஒருவன்தன் கடமையினை சரிவர ஆற்றுவதற்குத்தடைக் கற்களாகும்.

□ கடமையைச் சரிவரச் செய்யாதவன் வாழ்வில் முன்னேற்றம் என்பதே கிடையாது.
- ஆகவே,

□ கடமையில் கண்ணாயிரு.

## மகளிர் பகுதி




# வெற்றுக் கோஷமல்ல...,!

பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும்.. எமது உரிமைகள் பலவற்றைத் தேசத்தின் எதிரி மட்டுமல்ல எமது சமூகமும் பறித்துவிட்டது என்று, போராடுகின்ற பெண்ணின் உரிமைக்குரலை வெறும் வெற்றுக் கோஷங்களே என்றும், இன்று நாட்டில் பெண்களுக்கு என்ன சுதந்திரமில்லை? பள்ளிக்குச் சென்று படிக்கமுடியாதா? உத்தியோகம் பார்க்க முடியாதா? அரசாங்கம் நடத்த முடியாதா? வீதியிலே சைக்கிள் ஓட்ட முடியாதா? அறிவாளிகள் ஆக முடியாதா? விண்வெளிக்குச் செல்ல முடியாதா? ...... எதற்குத் தடையிருக்கின்றது? என்றும் கேட்கின்றார்கள் பெண்களின் வாழ்க்கையை நுனிப் புல் மேய்கின்ற சிலர்.

ஆணுக்குப் பெண்ணோ, பெண்ணுக்கு ஆணோ அடங்கி, ஒடுங்க வேண்டிய தேவை எப்போதுமே இருந்ததில்லை. இம்முறைகள் ஒருவர் தான் சுகம் அடைவதற்காக மற்றவரைக் கஷ்டமுறச் செய்யும் நடவடிக்கையே ஆகும். ஆணும், பெண்ணும் உலகில் சரிசமமானவர்களே ஆவர்.

சமூக வளர்ச்சியின் தேவை காரணமாகவே ஓர் ஆணும், பெண்ணும் ஒன்று சேர்ந்தனர். குடும்பம் என்ற முறை உருவாகியது. ஒருவன் ஒருத்தி என்ற குடும்பமுறை சமூக வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக இருப்பதாலேயே இக்குடும்பம் என்ற ஒரு முறைதோன்றியதும், அச்சமூகத்தில் ஆண்களே ஆதிக்க வர்க்கமாக இருந்ததும் இந்தப் பெண்ணடக்குமுறை உருவாவதற்குக் காரணங்களாக இருந்திருக்கின்றன.

இக்காலத்தில் மனிதரில் ஒரு சிறு பகுதியினர் எப்படிப் பெரும்பகுதி மக்களினது உழைப்பைச் சுரண்டி சுகபோகத்தை அனுபவிக்க ஆரம்பித்தார்களோ அதே போல் ஆண்கள் தாம் சுகபோகமாக இருப்பதற்குப் பெண்களை வருத்தி அடிமை கொள்ள ஆரம்பித்தார்கள். இவையனைத்தும் சமுதாயச் சட்டமாகவே அன்றிருந்தன. இதை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அழிக்கப்பட்டனர். இதன் வழியிலேயே இந்தப் பெண்ணடக்குமுறை ஆரம்பமாகியது.

இம்முறைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனபோதும் புதுப்புது நாகரிகங்கள் தோன்றிய போதிலும் அன்றைய அடக்குமுறைகள் வேறு வடிவங்களில் இன்றும் இருக்கின்றன.

பெண்ணடக்குமுறைகளும் இப்படியாகவே இன்னும் உலக நாடுகளில் வெவ்வேறான வடிவங்களைக் கொண்டிருக்கின்றன. ஆண்களுக்கு உரிய சுதந்திரம் பெண்களுக்குக் கிடைக்காமல் இருப்பதற்குச் சமூகமும், ஆண்களுமே காரணமாக இருந்துள்ளனர்.

இந்தப் பெண்ணடக்குமுறையைத் தமிழீழத்தில் பின்வருமாறு காணக்கூடியதாக உள்ளது. இங்கு கலாசார ரீதியாகவே ஆண்களுக்குப் பெண்கள் பணிவிடைடை செய்ய வேண்டும். ஆண்களின் உத்தரவுகளுக்குக்கீழ்ப் படிந்து நடந்துகொள்ள வேண்டும். பிள்ளை வளர்ப்பு, வீட்டுவேலைகள் யாவும் பெண்களுக்கு உரியது போன்ற நோக்கிலேயே சமூகப் பழக்க வழக்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன இதையின்றும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

இச்சமூகப் பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் ஆண்களாக இருப்பதால் அந்த ஆண், தான் நினைத்த மாதிரியே பெண்களை அடக்கி, ஒடுக்க வசதியாக இருக்கிறது. இதன் வெளிப்பாடாகவே பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இங்கும் பெண்கள், ஆண்களைப் போலவாழக்கூடிய எல்லாத்தகுதிகளிருந்த போதிலும், மேற்கூறப்பட்டதுபோல வாழ மறுக்கும் பெண்கள் ஆண்களின் இம்சைக்கும் சமூகத்தின் பழிச் சொல்லுக்கும் ஆளாகின்றார்கள், இதனால் பெண்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாதவாறு தடுக்கப்படுகின்றார்கள். இதன் மூலம் சுய ஆற்றல்கள். பயன்பாடுகள் சமூகத்திற்குக் கூடக் கிடைக்காது வீடுகளில் அடைக்கப்பட்டு வருகின்றன.

பணவருவாய்க்காக ஆண்கள் சில பெண்களை வேலை செய்ய அனுமதித்தாலும் தாம் குறிப்பிடும் வேலைகளை மாத்திரமே செய்ய அமதிக்கின்றார்கள். எப்படிவேலை செய்தாலும் கூட வீட்டுப்பணிகளும் இவர்களே செய்ய வேண்டும் எனவும் பணிக்கப்படுகின்றார்கள்.

இதே நோக்கில் அடுத்து முக்கியமாக இருப்பது ஒரு பெண்ணின் வாழ்வில்பெரும் பகுதியைக் கழிக்கின்ற குடும்பமாகின்ற நிகழ்ச்சியில் தனது கணவனைத் தெரிவுசெய்யும் உரிமை பெண்களுக்கு மறுக்கப்படுவதாகும். ஒரு பெண் தான் விரும்பியஆடவனைத் தெரிவு செய்து மணந்துகொண்டால் பெற்றோர்களால் சகல வழிகளிலும் அவள் ஒதுக்கப்பட்டு, சமூகத்தாலும் வெறுக்கப்படுகின்றாள். இங்கு சீதனம் என்ற சொத்தைப் பேரம் பேசிப் பெற முடியாததே பெற்றோரின் வெறுப்பிற்குக் காரணமாகும்.

இச்சீதன முறையும் பெண்களைச் சுற்றியே உருவாக்கப்பட்டதும், அடக்குமுறையின் ஒரு வெளிப்பாடேயாகும். இங்கு பெண் ஆணையோ ஆண் பெண்ணையோ சுயமாகவிரும்பித் தெரிவுசெய்யும் காதல்முறை இரு பகுதியினருக்கும் தடையாக இருந்தாலும்கூட இதில் பெண்களே பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றார்கள்.

சொத்திற்கு ஏற்றமாதிரியே மணமகன் தெரிவு நடைபெறுகின்றது. குறைந்த சொத்துள்ளதும், சொத்துக்கள் இல்லாததுமான பெரும்பகுதியான பெண்கள் திருமணம் செய்வது என்பது பெரும்பிரச்சினையாகவே இருக்கிறது. இவர்களின் வாழ்வும் அர்த்தமற்றதாகவே இருக்கிறது. இவர்களின் சுயவிருப்புத் தடுக்கப்படுவதால் திருமணமான பின்னரும் இவர்கள் மத்தியில் குடும்பப் பிரிவினைகளும், குடும்பப் பிரச்சினைகளும் ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

குழந்தை வளர்ப்பை நாம் இங்கே பார்க்கும்போது சில குறிப்பிட்ட காலஅளவிற்குக் குழந்தை பெண்ணோடு சேர்ந்திருக்கவேண்டிய தேவை இருப்பதை அறியக்கூடியதாகவுள்ளது. இதைவைத்துக்கொண்டு காலம் முழுவதும் பிள்ளைகளைத் தாய்தான்வளர்க்க வேண்டும் என வாதாடுவதும் இவற்றின் வெளிப்பாடுகளே ஆகும். குழந்தைவளர்ப்பு ஆண், பெண் இருபாலாருக்கும் சமனான தேவை ஆகும்.

ஒருபெண் ஆணைப்போன்று தொழில் செய்தாலும் வீட்டிற்கு வந்த பின்னால்வீட்டு வேலைகளையும் அவளே செய்யவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு கூறப்படுகின்ற அனைத்துமே பெண்கள் செய்யவேண்டும் எனக் கூறுவது, அவற்றைச் செய்ப்பது போன்றவையும் ஒரு பெண் அடக்குமுறையின் வடிவங்களாகும்.

இங்கு பெண்ணடக்குமுறையைப் பொறுத்தளவில் இதைச் சமூகவழக்கமாகப் பெரும்டாலான பெண்கள் கருதுவதாலும், இதற்கு எதிரான செயற்பாடுகள் பெருமளவில் இல்லாததாலும் பெண்ணடக்குமுறை இல்லை என்று நாம் கூறக்கூடாது.

நன்றி. சுதந்திரப்பறவைகள். தலையங்கம்.